# விவேகசுரபி

## 70 வது ஆண்டு விழா சிறப்பு மலர்




## தி/தி/விவேகானந்தா மகா வித்தியாலயம்
## குச்சவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகசுரபி

## சிறப்பு மலர்

தி /தி/விவேகானந்தா மகா வித்தியாலயம்
குச்சவெளி

70 வது
ஆண்டு விழா
(1953 - 2023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DETAILS OF THE SCHOOL

- Name of the school :- T/T Vivekananda maha vidyalayam
- Adress :- Word no: 01, Kuchchaveli
- Type of the School :- 1C
- Started year of the School :- 1953
- Division :- Kuchchaveli
- Zone :- Trincomalee
- Province :- Eastern province
- School ID No :- 1706007
- School census No :- 16017
- GS Division No :- Kuchchaveli , 239 2445
- DS Division :- kuchchaveli
- Land Scale :- 5 acres
- No. Of Buildings :- 09
- Grades :- Grade 1-13
- Distance :- 34 Km
- Web Address :- http://vivekanandamv.schweb.lk
- School Contact No :- 0262252655
- Examination department No :- 29229
- Name of the Principal :- Mr. M.Sritharaanantham
- Principal Service :- SLPS-3
- Principal's Contact No :- 0773579348
- Gmail Id :- kuchachavelivivekananda.m.v@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க குச்சவெளி
விவேகானந்தா மகா
வித்தியாலயம் வாழ்கவே
வாழ்க என்றும் குன்றிடா
வளத்துடனே வாழ்கவே

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே

வாழ்வு தரும் வளநிலங்கள்
வளம் பெருக்கிக் காட்டிட
ஆழ்கடலில் அலைகள் மோதும்
ஆம்பல் கரை சேர்ந்திட
ஆவினங்கள் பால் சொரிந்து
ஆன பஞ்சம் போக்கிட
மகிழ்வுடனே மக்களெல்லாம்
மதித்து வழிநடந்திட

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே

உத்தமமாம் தமிழுடனே
உலகு புகழ் ஆங்கிலம்
உயர் கணித நெறிகளுடன்
உண்மை தரும் வரலாறும்
வித்தைபுரி விஞ்ஞானம்
விவசாயத்தோடு நல்
தொழில் நுட்பக் கலையாவும்
தொடர்ந்தோங்க வாழ்கவே

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே

குறைகளேது மின்றியே
குச்சவெளி ஊரிலே
மறைகளோதி மகிழ்வுடன்
மங்களங்கள் சேரவே
அறிவிலுயர் ஆசிரியர்
ஆற்றலுடன் கூடியே
விருப்புடனே கல்வி தரும்
வித்தியாசாலை வாழ்கவே

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே

இயற்றியவர்:- திரு.வ. பரமானந்தம்
இசையமைத்தவர்:-
செல்வி.வி.சின்னத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடவாசகம் - MOTTO

கேடில் விழுச்செல்வம் கல்வி

Knowledge is the wealth that cannot be destroyed, stolen or burnt

# நோக்கக் கூற்று - VISION

உடல், உள, சமூக, ஆன்மீக, ஆரோக்கியத்தோடு பொருளாதாரத்திலும் சமநிலையைப் பேணும் தேசாபிமானம் மிக்க நற்பிரஜைகளை உருவாக்குதல்.

Knowledgeable and skillful society who cope with the erudite world

# பணிக்கூற்று - MISSION

அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியோடு விழுமியங்களையும் கலாச்சாரத்தினையும் பின்பற்றும் மாணவ சமுதாயத்தை உருவாக்க பாடசாலையினதும் சமூகத்தினதும் வளங்களை வினைத்திறனுடன் ஒருங்கிணைத்து அரும்பணிபுரிதல்.

To create good citizens by providing quality education who respect our religions and cultural norms and attitudes who dare for the challenges with present and past experiences using modern technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...

1. மலரும் விவேகசுரபி

2. மலர்க்குழு

3. ஆசிச் செய்தி

4. வாழ்த்துச் செய்தி

5. புகைப்படங்கள்

6. அதிபர் அறிக்கையும் . பாடசாலை வரலாறும்

7. ஆக்கங்கள்

8. புகைப்படங்கள் (பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி)

9. புகைப்படங்கள் (பாடசாலை நிகழ்வுகளும், சாதனைகளும்)

10. பொதுப்பரீட்சை பகுப்பாய்வு

11. பாடசாலைக்கு உதவிக்கரம் நீட்டியோர்

12. பரிசு பெறுவோர் விபரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் "விவேகசுரபி"

தி / தி/ விவேகானந்தா மகா வித்தியாலயம் கல்வி வரலாற்றில் 70 வருடங்கள் என்ற மைல் கல்லினை பதித்து பிளாட்டினம் விழாவை (Platinum Jubilee) கொண்டாடுகின்றது. 1953 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு பௌதீக வளங்கள் குறைவாக இருந்தாலும் எதிர் காலத்தில் மாணவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்கும் நோக்குடன் கல்வி கலை கலாசார சமூகப் பண்பாடு போன்றவற்றை மேம்படுத்தும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

எமது பாடசாலையின் வரலாற்றை நாளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் இலக்கிய சான்றாக முதலாவது வெளியீடான **"விவேகசுரபி"** மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சிந்தனைகளையும் ஆக்கத்திறன்களையும் சுமந்து வெளிவருகிறது. மேலானதும், விவேகமானதுமான அறிவை துரித கதியில் தரும் இவ் விவேக சுரபி பாடசாலையின் சாதனைகளை சுமந்து, சம்பவங்களைத் தொகுத்து, பல்சுவை ஆக்கங்களுடனும் சிலருடைய ஆசிகளையும் வாழ்த்துக்களையும் பெற்று முதலாவது துலங்கலாக வெளிவருகிறது.

எமக்கு ஆலோசனை வழங்கி ஆற்றுப்படுத்திய அதிபர் திரு.ம. ஸ்ரீதரஆனந்தம் அவர்களுக்கும் நூலுருப் பெற உழைத்த மலர் குழுவினருக்கும், ஆக்கங்களை வழங்கிய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆசிச் செய்தி வழங்கிய தவத்திரு அகத்தியர் அடிகளாருக்கும், வாழ்த்துச் செய்தியை வழங்கிய மாகாணகல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்,பிரதேச செயலாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்,முன்னாள் அதிபர்,குச்சவெளி உறவுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்விவேகசுரபி ஆண்டாண்டு காலம் தொடர்ந்து பவனிவர உங்கள் ஆதரவையும் இறைவனின் ஆசியினையும் வேண்டிநிற்கின்றோம்.

**திருமதி R.G.ஜெயக்குமார்**
**இதழாசிரியர்**
**"விவேகசுரபி"**
**தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விவேகசுரபி"

## மலர்க் குழு

திரு. ம. ஸ்ரீதர ஆனந்தம் (அதிபர்)

திருமதி. ரா. கு. ஜெயக்குமார்

(இதழாசிரியர்)

திரு. அ. அகிலன்

திரு. ர. சஞ்ஜீவ்காந்த்

திருமதி. தெ. சிந்துஜா

செல்வி. க. சங்கீதா

திருமதி. பி. யோகராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவத்திரு அகத்தியர் அடிகளாரின் ஆசிச்செய்தி

" தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி "

தென்கையிலை அமர்ந்து உலகமெல்லாம் அருளாட்சி புரியும் மாதுமையம்மை உடனுறை திருக்கோணேச்சரப் பெருமானின் திருப்பாதம் பணிந்து யாவர்க்கும் நலமருள வேண்டுகின்றோம். திருக்கோணமலையிலே மருதமும் நெய்தலும் சார்ந்த குச்சவெளி கிராமத்திலே தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயமானது இற்றைக்கு 70 ஆண்டுகள் முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு தன் கல்விப்பணியை மிகச் செவ்வனே ஆற்றி வருகின்றது. எழுபது ஆண்டுகள் கல்விச்சேவையினை நினைவுகூரும் வகையில் விழா எடுப்பதுடன் " விவேகசுரபி. " எனும் நூலை வெளியிடுவது மிகத் தேவையான கைங்கரியமாகும். தமிழும். சைவமும் நிலைத்த மண் இதுவென்பதை ஆதாரப்படுத்த வேண்டிய காலத்தில் நாம் வாழ்கின்றோம். நாளைய வரலாறு தெளிவு பெற இன்றைய வரலாற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

நல்ல செயல் வாழ்த்துகின்றோம்.

தவத்திரு அகத்தியர் அடிகளார்
முதற்குரு மகா சந்நிதானம்
தென்கையிலை ஆதீனம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

குச்சவெளி எனும் பழம்பெரும் கிராமத்தில் அமைந்துள்ள தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம் தனது 70 வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் முகமாக வெளிவரும் இதழான "விவேகசுரபிக்கு" வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன். 1953 இல் இப்பாடசாலை தரம் 6 இல் 09 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக மாணவர் தொகை அதிகரிக்க வகுப்புக்களும் அதிகரித்தது. தற்போது தரம் 1 - 13 வரை வகுப்புக்களைக் கொண்டு உத்வேகத்துடன் செயலாற்றி வருவது சிறப்பம்சமாகும்.

பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்குகளில் நிரந்தரமாக மாற்றங்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு அதிபர், ஆசிரியர்களிடமே உண்டு. நாட்டின் நற்பிரஜைகளுக்குரிய எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் என்பவற்றை பாடசாலை இலக்குகளாக வடிவமைத்து செயற்படுதல் வேண்டும். சீரான வகுப்பறைக் கல்வி நடவடிக்கைகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் இணைத்து பிள்ளைகளைப் பண்புள்ளவர்களாக்குகின்ற வேலைத் திட்டங்களையும், ஒழுங்கமைப்புக்களையும் கொண்டிருக்கும் போது ஓர் பாடசாலை சமூகத்தில் வெற்றி பெற முடியும். அத்தோடு பாடசாலைக்கு சமூகத்தின் பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்படும் போதுதான் பாடசாலையின் வளர்ச்சி உன்னதமானதாக அமையும்.

இத்தகைய விழாக்கள், வைபவங்கள் மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை ஊக்கப்படுத்துவதோடு சமூகத்தையும் பாடசாலையுடன் ஒன்றிணைத்துச் செயலாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதோடு மாணவர்களிடையே ஆரோக்கியமான உந்துதலை ஏற்படுத்தி சாதனைகளையும், பெறுபேறுகளையும் மேம்படுத்த உதவும். கிழக்கு மாகாண கல்வி வளர்ச்சியில் தி/ தி விவேகானந்தா மகா வித்தியாலயம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த ( சா/ த ), க.பொ.த ( உ/ த ) பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெற்றுள்ளதுடன், 39 வருடங்களின் பின் க.பொ.த (உ/த) கலைப் பிரிவு வகுப்பினை மீண்டும் ஆரம்பித்து 2021 ம் ஆண்டு 100% சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு ஒரு மாணவியை அனுப்பி வைத்துள்ள இப்பாடசாலை இன்னுமோர் மைல்கல்லைத் தாண்டி சாதனை படைத்துள்ளது. எதிர்காலத்திலும் மேலும் முன்னேற்றகரமான பெறுபேறுகளை பெற வேண்டும் என்பதுடன் ஒழுக்கமான,ஆளுமை மிக்க பண்பாட்டு விழுமியங்கள்,கலாசாரங்கள், எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்க கூடியவாறான தேசிய இலக்கோடு மேலும் பயணிக்க மனதார வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்விற்கு வழிகாட்டியாகவுள்ள வினைத்திறன்மிக்க அதிபர் அவர்களோடு சேர்ந்து ஒத்துழைக்கின்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,பெற்றோர்கள்,பாடசாலை சமூகத்தினர், நலன் விரும்பிகள் ஆகியோருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி .எஸ். குலேந்திரகுமார்.
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
மாகாணக்கல்வித் திணைக்களம்.
கிழக்கு மாகாணம்.
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலை வலய கல்விப் பணிப்பாளர் திரு.தினகரன் ரவி அவர்களி "விவேகசுரபிக்கு" வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தி

உலகெங்கும் பரந்து வாழும் பத்துக்கோடி தமிழ் மக்கள் தாம் வாழத் தேர்ந்தெடுத்த பிரதேசங்களிலே திருகோணமலை மாவட்டமும் குச்சவெளியும் மிக பிரதானமானவை. இங்குள்ள இயற்கையின் வனப்பும் பௌதீக வளங்களும் எமது வாழ்க்கைக்கு மிகமிக உவப்பானவை. திருகோணமலைப் பெருநிலப் பரப்பின் மிகவும் தொன்மையான தமிழ்க் கிராமங்களில் குச்சவெளியும் ஒன்று. காலத்திற்குக் காலம் எதிர் கொண்ட ஆயுதக் கலகங்களினால் வெகுவாக அழிவடைந்து தான் கொண்டிருந்த பொலிவை இம்மண் இழந்த போதிலும் இயற்கை அன்னையும் நம் தமிழன்னையும் இக்கிராமத்தை தொடர்ந்தும் பாராட்டி சீராட்டி வளர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதன் ஒரு ஆணித்தரமான அடையாளமே " விவேகசுரபி."

எமது பாடசாலைகளின் மாணவர்களதும் ஆசிரியர்களதும் தமிழ் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் எழுத்தறிவில் பின்னிற்கும் பிரச்சனையை காத்திரமான முறையில் எதிர்கொண்டு தீர்ப்பதற்கும் இத்தகைய ஆக்கங்கள், முயற்சிகள் பாரிய ஊக்குவிப்பாக அமையும்.

தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயத்தை தரம் மிக்கதொரு பாடசாலையாக மாற்றுவதில் இங்குள்ள ஒவ்வொரு ஆசிரியரும் ஆற்றிவரும் சேவை மிகவும் மதிக்கத்தக்கது. இக்கல்வி வலயத்திலே அதிகஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள திருகோணமலை நகரத்திலிருந்து பார்க்குமிடத்து தொலைதூரப் பாடசாலையாக இது காணப்பட்டபோதிலும் அதிபர் திருமதி ஸ்ரீதர ஆனந்தம் அவர்களின் பாடசாலைத் தலைமை பாராட்டுவதற்குரியது.

இப்பகுதிப் பெற்றோரும் பாடசாலைப் பிள்ளைகளும் இவ்வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்காக ஆற்றிவரும் பங்களிப்பை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

விவேக சுரபி இவ்வாண்டு பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட 70 ஆவது ஆண்டு சிறப்பு மலராக வெளிவருகின்றது. ஆண்டுதோறும் இது வெளிவந்து தனது கல்வியை சுரந்து நாற்றிசையும் பாயச் செய்து இம்மக்கள் மத்தியில் நிலை நிறுத்திட வாழ்த்துகிறேன்.

அன்புடன்
திரு தி. ரவி
வலயக்கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குச்சவெளி பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

எமது குச்சவெளிப் பிரதேசத்தின் தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம் தனது 70 வது ஆண்டு கல்விச் சேவையின் நிறைவினை சிறப்பிக்கும் வண்ணம் பாடசாலையின் பிளாட்டினம் ஆண்டு விழா நினைவு மலரான " **விவேகசுரபி.**"யின் வெளியீட்டினை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைவதுடன் பிளாட்டினம் ஆண்டு விழாவினைக் கொண்டாடும் இப்பாடசாலைக்கும் இப்பாடசாலை சமூகத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணவர்களினுடைய அறிவாற்றலினையும், சிந்தனை விருத்தியினையும் மேலோங்கச் செய்யும் உயர்ந்த இலக்கினை அடைவதற்கான திறவு கோலாக அவர்களுடைய ஆக்கங்களினையும், அறிவாற்றல் படைத்த ஆசான்களினது ஆக்கங்களையும், ஆன்றோர் சான்றோரது கருத்துக்களையும் தாங்கி வரும் விவேக சுரபியானது இப்பாடசாலை வரலாற்றின் மைல்கல் சாதனையாகும்.

பாடசாலையினுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்கு மேலதிகமாக மேற் கொள்ளப்படும் இத்தகைய செயற்பாடுகள் இன்றைய காலகட்டத்தில் தேவையானதொன்றாகும். மாணவர்களது பாடத்திட்டத்திற்கும் அவர்களது அடைவு மட்டத்திற்கும் வழங்கப்படும் முக்கியத்துவத்திற்கு இணையாக பாடசாலைக் காலத்தில் அவர்களது ஆற்றல்களையும், திறன்களையும் மற்றும் ஆளுமைகளையும் வளர்ப்பது எமது தலையாய கடமையாகும். இந்த அடிப்படையில் மாணவர்களின் சில ஆளுமைத் திறன்களினை வளர்க்கும் நோக்கில் வெளிவந்திருக்கும் விவேகசுரபிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

இளஞ்சிறார்களின் எழுத்தாக்கத்திற்கு வித்திடும் இத்தகைய செயற்பாடுகள் எதிர்காலத்தில் எழுத்தாக்க ஆளுமைகளினை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. பெருஞ் சிறப்பு மிக்க விவேகசுரபி எனும் படைப்பின் உருவாக்கத்திற்காக முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு விவேகசுரபி சிறப்புற அமைவதற்கும் தொடர்ந்து சுரப்பதற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.கு.குணநாதன்
பிரதேச செயலாளர்
குச்சவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். இது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் தற்போது உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட நல்லனவற்றை இணைத்துக் கொண்டும் நியாயமானவற்றைக் களைந்தும் புத்துலகைப் படைப்பதற்கான களமாக அமைவது பாடசாலையாகும்.

அந்த வகையில் திருகோணமலை வலயத்தில் குச்சவெளிக் கோட்டத்தில் அமைந்துள்ள தி/தி விவேகானந்தா மகா வித்தியாலயமானது 70 வது ஆண்டில் காலடி எடுத்து வைத்து விவேகசுரபி எனும் நூலை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் இப்பாடசாலையை வழிநடத்தும் அதிபரையும் "பச்சிளம் பிஞ்சுகளை ஞாலம் போற்றும் சமூகமாக உருவாக்கும்" ஆசிரியப் பெருந்தகைகளையும் வாழ்த்துவதோடு இப் பாடசாலையின் க.பொ.த (சா/த).க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் படிப்படியாக உயர்ந்து வருவது பாராட்டத்தக்க விடயமாக அமைகிறது. அத்துடன் பிள்ளைகள் ஆர்வத்துடன் கற்க கூடிய கலைக்கூடமாக பாடசாலை தற்போது மாறிவருவதும் வரவேற்கத்தக்கது. இப் பாடசாலையானது மேலும் வளர்ந்து பல சாதனைகளைப் புரிய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

திரு.M.மோகனேந்திரன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
திட்டமிடல் கிளை
திருகோணமலை கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குச்சவெளி கோட்டக்கல்வி பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கல்விமுறையினால் பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய இடம் பாடசாலையாகும். அத்துடன் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடைநிலையிலிருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக கீழிருந்து மேல் நோக்கி நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படும் இடமாகவும் பாடசாலை திகழ்கின்றது.

அந்த வகையில் இலங்கைத் தீவில் உதிக்கும் திசையில் நெய்தலும் மருதமும் ஒன்றிணைந்த குக்கிராமமாகிய குச்சவெளியின் மத்தியில் அமைந்துள்ள தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயமானது 70 வது அகவையைக் கடந்து சென்றுக் கொண்டிருக்கும் வேளையில் வெளிவரும் "விவேகசுரபி." ஆகிய இந்நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களதும் பாடசாலையின் அதிபர் அவர்களதும் பணியும் மிகச் சிறந்ததாக கருதப்படுவதுடன் இம் மாணவர்களின் பெறுபேறுகள் படிப்படியாக அதிகரித்து வருவதும் கண்கூடாக விளங்குகிறது. இம் மாணவர்களின் பெறுபேறுகள் மேலும் அதிகரிக்க வாழ்த்துவதுடன் விவேகசுரபியினூடாக மாணவர்களின் ஆற்றல்கள் வெளிவந்து ஒளி வீசவும் வாழ்த்துகின்றேன்.

திரு. எம். ஹாபீஸ் மரைக்காயர்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
குச்சவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது தி /தி / விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 70 வது அகவையில் காலடிபதிக்கும் இவ்வருடம் கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் நடாத்தும் இவ் வேளையில் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக ஓர் ஆவண நூல் வெளியீடாக "விவேகசுரபி" எனும் சிறப்புமிக்க மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். எமது மாணவர்களதும் ஆசிரியர்களதும் ஆக்கங்களை உள்வாங்கியதோடு பாடசாலை தொடர்பான தகவல்களையும் குருமாரின் ஆசியுரைகளையும் அதிகாரிகளது வாழ்த்துச் செய்திகளையும் பாடசாலை செயற்பாடுகளையும் தாங்கி எமது "விவேகசுரபி" பாடசாலை சார்பாகவும் ஊர் சார்பாகவும் தகவல்களை உள்ளடக்கிய ஒரு வரலாற்று ஆவணமாக வெளிவருகின்றது.

கஸ்டப்பிரதேசச் சூழலில் பல்வேறு சுமைகளைத் தாங்கி ஆசிரியர்களதும், பெற்றோர்களதும், பழைய மாணவர்களதும், நலன் விரும்பிகளதும், கல்வி அதிகாரிகளதும் ஒத்துழைப்புடன் பல சவால்களுக்கு மத்தியில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வரும் எமது பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக இம் மலரை வெளிக் கொண்டு வருவதற்கு தமது அர்ப்பணிப்புக்கள், ஆற்றல்கள், பங்களிப்புக்கள் வழங்கிய மாணவர்கள், பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பழைய மாணவர்கள், குச்சவெளி உறவுகள், நலன் விரும்பிகள், சிவில் சமூக அமைப்புக்கள், மலர் குழுவினர், இதழாசிரியர் திருமதி.R G .ஜெயக்குமார் மற்றும் முன்னாள் அதிபர்கள், ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை சமூகம் இது "எனது பாடசாலை இது எமக்குரியது" என்பதை தமது மனங்களில் நிலை நிறுத்தி செயற்படும் போது எதிர் காலத்தில் இப் பாடசாலையின் வளர்ச்சி பன்மடங்காகப் பெருகி வளம் பெறும் இதனை நாம் பெற்றுக் கொள்ள "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு", "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற முதுமொழிகளுக்கேற்ப ஒன்றுபட்டு உழைப்பதுடன் எதிர் காலத்தில் மேலும் மேலும் பல சாதனைகளை புரிந்து உயர்வடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அதிபர்

திரு.ம. ஸ்ரீதர ஆனந்தம்,

தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் திருகோணமலையில் குச்சவெளிப் பிரதேசத்தில் இயற்கை எழில் கொஞ்சும் ஓர் அழகிய சூழலில் அமைந்துள்ள விவேகானந்தா மகா வித்தியாலயத்தின் 70 வது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் **"விவேக சுரபி"** இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இவ் இதழானது மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை வெளிக்காட்டுவதற்கு களம் அமைத்துக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு இவ் **"விவேக சுரபி"** எமது பாடசாலையின் வரலாற்று சுவடியாக உருப்பெற்று வெளிவருவதோடு எதிர்காலத்தை நோக்கிய புதிய வரலாற்றை உருவாக்கும் ஊக்கியாகவும் தொழிற்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றுக் கூறிக் கொள்வதோடு எமது பாடசாலையின் வளர்ச்சியில் இன்னும் எம்மை அர்ப்பணிப்போம் என்ற அறை கூவலுடன் இவ்விதழ் வெளியீட்டில் உழைத்த அதிபர், மலர்க்குழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் மனதார வாழ்த்துகிறேன்.

திரு. ஏ.பிரஸ்காந்த்
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
தி /தி / விவேகானந்தா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபர் அவர்களின் வாழ்த்துச்செய்தி
# 70 வது ஆண்டு விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம் ( குச்சவெளி ) தனது 70 வது ஆண்டினைப் பூர்த்தி செய்யும் வேளையில் அதனையொட்டி வெளி வருகின்ற " விவேக சுரபி." விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டட்ட மகிழ்ச்சியடைகின்றேன். நான் 1972 ஆம் ஆண்டு முதன்முதலில் பார்த்த பாடசாலைக்கும் இன்று காட்சி தரும் இப்பாடசாலைக்குமிடையில் மிகப் பெரியளவிலான வித்தியாசத்தை உணர்கிறேன். இன்றைய அதிபர் திரு. ம. ஸ்ரீதர ஆனந்தம் அவர்களின் பெரு முயற்சியினால் பிரதான வாயிற்கதவு. பாடசாலைப் பெயர்பலகைப் பொருத்தம் மட்டுமன்றி பலதரப்பட்ட செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றார். இவ்வாறான வளர்ச்சிகளைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தி/ நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி உதவி ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த போது 1985 இல் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தேன். அப்போது திரு. ஜீவரத்தினம் அவர்கள் அதிபராக இருந்தார்.பின்னர் அவர் திருகோணமலை நகர்புற பாடசாலையொன்றிற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது அதிபரின் பொறுப்புக்களை என்னிடம் ஒப்படைத்துச் சென்றார்.கொத்தணிப் பாடசாலை முறைமையின் கீழ் இப்பாடசாலையானது தி / திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தினைத் தலைமைப் பாடசாலையாகக் கொண்டு தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றிருந்தது.

தற்போது புலம்பெயர் தேசங்களில் இருக்கின்ற இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள். நலன் விரும்பிகள் போன்றோர் பலதரப்பட்ட உதவித்திட்டங்களையும். அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றமை எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. அத்துடன் தற்போதைய அதிபர் அவர்களின் இடைவிடாத முயற்சியினாலும் இப்பாடசாலைப் புதுப்பொலிவு கண்டு வருகின்றமை மிகச் சிறப்பானதாகும். இப்பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சியுற்று மாண்புடன் மிளிர எல்லாம் வல்ல இறைவன் அருளாசி புரிவாராக என்று மனமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு . ஆ. பொன்னையா
முன்னாள் அதிபர்
தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

குரைகடல் ஓதும் நித்திலம் கொலிக்கும் திருகோணமலை மாவட்டத்தில் கடலலை தாலாட்ட புள்ளினம் இசைபாட கடல்வளம்,நீர்வளம்,நிலவளம் குன்றா கிராமமான குச்சவெளி கடல் வளத்தையும் விவசாயத்தையும் நம்பி வாழும் செழிப்பான கிராமம். எம் கிராமத்தில் வாழ்ந்த எமக்கெல்லாம் கல்வியறிவைப் புகட்டிய பழைமை வாய்ந்த எம் கல்லூரித்தாய் தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம் அன்று தொடக்கம் இன்று வரை எமது சமூகத்தை வளப்படுத்துவதில் காத்திரமான பங்கு வகிக்கின்றது. வெளிப்புலத்தில் வாழும் நமக்கெல்லாம் அரிவரி புகட்டி ஆளாக்கிய எம் வித்தியாலயம் 70 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பெருமிதம் கொள்கின்றது எம் குச்சவெளி உறவுகள் அமைப்பு.

எமது அமைப்பானது பல்வேறு வழிகளிலும் பாதிப்படைந்த நமது கிராம மக்களை நல்வழிப்படுத்தி அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்றது. குறிப்பாக வறுமையை ஒழித்து பிரதேசத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இளமையில் வறுமை கொடுமையிலும் கொடுமை. இளமையில் வறுமையினால் வாழும் எம் மாணவச் செல்வங்களின் வறுமையைப் போக்கி சிறந்த வறுமையற்ற ஓர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதே எம் ஒரே நோக்கு.

எம் குச்சவெளி அமைப்பின் பிரதான இலக்காகிய வறுமையைப் போக்கி வளமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக எம் ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும்
தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயத்தினூடாக மாணவச் செல்வங்களிற்கு வழங்குவதில் பெருமையடைகின்றது எமது குச்சவெளி உறவுகள் அமைப்பு. வளமாக வளர்ச்சியடைய எம் கல்லூரியை வாழ்த்துகின்றோம்.

**“உதவிடுவோம் உயர்வடையச் செய்வோம் எதிர்கால வளமான சமூகத்தை வளமாக்குவோம்.**

**குச்சவெளி உறவுகள்**
**திரு. ச உதயகுமார் (தலைவர்)**
**திரு. க ரஞ்சன் (செயலாளர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கையும் பாடசாலையின் வரலாறும்

தட்சணகைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரர் ஆலயம் அமைந்த திருகோணமலை நகரில் இருந்து 34 கி/ மீ வடக்கே குளமும் மலையும் ஆறும் கடலும் சூழ்ந்த பசுமை நிறைந்த நெல், வயல் நிலமும், பயிர் நிலமும், கடல் வளமும கொண்டகுளக்கோட்ட மன்னன் கோணேசர் தொண்டுக்காக குடியமர்த்தப்பட்ட மக்கள் வாழும் குச்சவெளி எனும் பழம்பெரும் ஊரில் கல்விப்பணியை செய்து வரும் கல்விக்கூடம் தி/தி விவேகானந்தா மகா வித்தியாலயம்.

1953 ஆம் ஆண்டு எமது கல்வித்தாய் பிறந்த வருடமாகும். அன்றுத் தொடக்கம் இன்றுவரை கல்விப்பணியில் இப்பிரதேசத்தின் தலைசிறந்த கல்விக்கூடமாக திகழ்ந்து வரும் எமது பாடசாலை இன்று 70 வது அகவையில் வெற்றி நடைப்போட்டு தனக்கென ஒரு தனியான இடத்தை தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது.70 வது ஆண்டு விழாவை "பீமரத சாந்தி" விழா என்றும் எமது முன்னோர்கள் கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தி/தி விவேகானந்தா மகா வித்தியாலயம் என்ற பெயருக்கேற்றால் போல் விவேகானந்தரின் அமெரிக்க உரையிற் கூறிய சகோதர சகோதரிகளே என்ற உலகப் புகழ்பெற்ற வார்த்தைக்கேற்ப அனைத்து இன, மத, சகோதர, சகோதரிகளையும் இணைத்துக் கல்வி புகட்டி வரும் எமது பாடசாலை ஊரில் அமைந்து அருள்பாலிக்கும் சித்தி விநாயகரும், பள்ளியில் எழுந்தருளியிருக்கும் சரஸ்வதி தாயும் அள்ளி வழங்கும் கல்வியமுதை பெற்றிட நாடிவரும் பாலர்களை அள்ளி அணைத்து கல்வியெனும் ஒளியேற்றும் இடமாக எமது பாடசாலை அமைந்துள்ளது. 1985 முதல் 1987 வரை முதல் தடவையாகவும் 1990 முதல் 1994 வரை இரண்டாம் தடவையாகவும் இப்பிரதேச மக்கள் முற்றாக இடம் பெயர்வினை சந்தித்த காலத்தில் பாடசாலையும் முற்றாக மூடப்பட்டு 1995 ஆம் ஆண்டு மீளத் திறக்கப்பட்டு படிப்படியாக தன் கல்விப்பணியை மீண்டும் செய்து வருகிறது.

தரம் 06 இல் 09 மாணவர்களோடு குச்சவெளி மகா வித்தியாலயம் என்ற பெயருடன் திரு.நா. இராமலிங்கம் அதிபராக நியமிக்கப்பட்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1982 இல் க.பொ.த உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டு 1984 இல் முதல் தடவையாக உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினார்கள். உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டபோது பாடசாலை 1C தரமாக உயர்த்தப்பட்டது. தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/தி விவேகானந்தா மகா வித்தியாலயம் எனப் பெயர் பெற்றுத் திகழ்கின்றது.39 வருடங்களின் பின்னர் 2018 இல் மீண்டும் க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

## பாடசாலையின் மனிதவளம்

பாடசாலையின் மனிதவளம் மற்றும் பௌதீக வளம் என்பன பற்றாக்குறை யாகத் திகழும் இக்காலக் கட்டத்தில் பாடசாலை பழைய மாணவர்களின் பங்குபற்றலுடன் குச்சவெளி உறவுகள் உதவிக்கரம் நீட்டி பாடசாலையின் மனித வள, பௌதீக வள மீளமைப்பு மாணவர்களுக்கான உணவு என பல வழிகளில் எம்மோடு உறுது ணையாக நின்று பிரதேச கல்வியை வளர்க்க துணை நிற்கின்றனர். 70 வது அகவையில் காலடிப் பதிக்கின்ற எமது பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக "விவேகசுரபி" எனும் இதழை இம்முறை வெளியிட வரமளித்த இறைவனுக்கு எனது வணக்கத்தையும் நன்றியையும் கூறி நிற்கின்றேன்.இந்த 70வது வருடத்தில் எமது பாடசாலை யின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வித்திட்ட முன்னாள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள், பழைய மாணவர்கள் போன்றோரின் அர்ப்பணிப்பான சேவையை நினைவுகூர்ந்து வாழ்த்து கின்றேன். 1953 இல் தி/தி குச்சவெளி மகா வித்தியாலயமாக ஆரம்பிக்கப் பட்டது முதல் இன்று வரை அதிபர் களாக கடமையாற்றியவர்களின் பெயர் விபரம் புகைப்படம் என்பன முழுமை யாக எனக்கு கிடைக்கவில்லை. இருப்பினும் கிடைத்த விபரங்களின் அடிப்படையில் அதிபர்களின் பெயர் விபரங்களைத் தருகின்றேன்.

திரு. நா. இராமலிங்கம்
திரு. க. பொன்னையா
திரு. பரமானந்தம்
திரு. காசிநாதன்
திரு. க. பூபாலசிங்கம்
திரு. பொன்னுக்கோன்
திரு. சிவக்கொழுந்து
திரு. க. கிருபைராஜா
திரு. க. ஜீவரெட்ணம்
திரு. ஆ. பொன்னையா
திரு. வி.தங்கராஜா
திரு. அ. நவரெட்ணம்
திருமதி. ச.கமலாவதி
திரு. வி.கீதபொன்கலன்
செல்வி.சி.தேவரஞ்சினி
செல்வி.க.லிங்கலட்சுமி
திரு. எஸ். ஜெயதரன்
திரு. விஷ்ணுவர்தன்
திரு. ராஜ்மோகன்

ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.இவர்களுடன் 2017.02.01 முதல் இன்று வரை திரு.ம.ஸ்ரீதர ஆனந்தம் ஆகிய நான் பாடசாலையின் அதிபராக கடமையாற்றி வருகின்றேன். ஏறக்குறைய 7 வருடங்களை அண்மித்துக் கொண்டிருக்கும் எனது சேவைக் காலத்தில் கல்வி. ஒழுக்கம், கவின்நிலை அபிவிருத்தி என பல விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றேன்.

## கல்வி சார்ந்த வளர்ச்சி

தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் 2019 ஆம் ஆண்டில் 12 மாணவர்கள் தோற்றி 12 மாணவர்களும் சித்தியடைந்து 100% சித்தி பெற்றதுடன் பல வருட இடைவெளி யின் பின் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளியைப் பெற்று சாதனைப் படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன்.த.கோபிசன் (174), செல்வன் பி.லிங்கதீசன் (173) ஆகிய இருவரும் பாடசாலைக்குப் பெருமை யைத் தேடி தந்தமை குறிப்பிடத்தக்கதாகும். க.பொ.த சாதாரண பரீட்சை 2019 இல் 20% சித்தியும் 2020 இல் 60% சித்தியும் 2021 இல் 63% சித்தி எனப் படிப்படியாக சித்தி வீதம் அதிகரித்துச் செல்கின்றது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை மீண்டும் 39 வருடத்திற்குப் பின் 2020 இல் பரீட்சைக்கு 7 மாணவர்கள் தோற்றிய போதும், பல்கலைகழக அனுமதிக்கான சித்திகள் எதுவும் பெறப்படவில்லை. விவசாயவிஞ்ஞான பாடத் தெரிவு எமது மாணவர்களின் பெறுபேற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. பின்னர் 2021 ஆம் வருடம் இரண்டு மாணவர்கள் தோற்றி இரண்டு மாணவர்களும் நல்ல பெறுபேற்றுடன் சித்தியடைந்து 100% என்ற இலக்கைத் தொட்டனர்.

செல்வி. க.இந்துஜா 2A, 1B, செல்வி சுகிர்தா A,B,C என பெறு பேறு பெற்றனர். இதில் இந்துஜா தற்போது கிழக்கு பல்கலை கழகத்திற்கு தெரிவாகி தனது பட்டப்படிப்பைத் தொடர்கின்றார். செல்வி சுகிர்தா அவர்கள் பல்கலைகழக அனுமதிக்காக மீள் தெரிவுப் பட்டி யலை எதிர்ப்பார்த்துக் காத்திருக்கின்றார். 2019 இல் பரீட்சை எழுதி வாய்ப்பைத் தவறவிட்ட மாணவர்களில் செல்வி ம.பிரிதா, சு.மோனிசன், ரி. கிர்த்திக் ரோசன் ஆகியோர் தோற்றி A, 2C பெறுபேற்றை பெற்று ம. பிரிதா பல்கலைக்கழக அனுமதிக்கான மீள் தெரிவுப் பட்டியலை எதிர்ப்பார்த்துக் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் எமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகவும் பணிபுரிகின்றார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

மாணவர்களின் ஆளுமை விருத்தி, சகிப்புத்தன்மை, தலைமைத்துவப் பண்பு ,தன்னம்பிக்கை, போன்ற பண்புகளின் வளர்ச்சிக்கும், சிந்தனை சிதறல்கள், நெறிப்பிறழ்வான செயற்பாடுகளைத் தடுக்கவும் கற்றல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இணைப்பாடவிதான செயற்பாடுகள் எமது பாடசாலையில் செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

அந்த வகையில் விளையாட்டுப் போட்டிகள், மன்றச் செயற்பாடுகள், விவசாயத் தோட்டம், பூந்தோட்ட கவின் நிலைப் போட்டிகள், சுத்தம் தொடர்பான பாடசாலை சிரமதானங்கள் குச்சவெளி சித்தி விநாயகர் ஆலய சிரமதானம் திருவிழாக் காலங்களில் ஆலயத் தொண்டு என்பன மேற்கொள்ளப்படு வதோடு முத்தமிழ் மன்றம், இந்துமா மன்றம், சுகாதாரக் கழகம், பான்ட் வாத்தியக்குழு, சுற்றாடல் கழகம் என்பன செயற்படுகின்றன.

மேலும் சமூக விஞ்ஞானப் போட்டி, தமிழ் மொழித் தினப் போட்டி, ஆங்கில மொழித் தினப் போட்டி, நவராத்திரி கலை விழா, சமயப் போட்டிகள், மெய் வல்லுனர் போட்டிகள் போன்ற போட்டி நிகழ்ச்சிகளுக்கு எமது மாணவச் செல்வங்களை தயார்ப்படுத்தி பயிற்சி வழங்கி கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, மட்டங்களில் பங்குபற்ற வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் ஆன்மீக சிந்தனை வளர்ச்சிக்காக சரஸ்வதி மாடம் அமைக்கப்பட்டு வெள்ளி தோறும் பூசை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வேலைத் திட்டங்கள் மூலம் ஆரம்பக்கல்வி பிரிவிலும்,இடை நிலைக் கல்விப் பிரிவிலும் மாணவர் எண்ணிக்கை முன்னைய வருடங்களை விட அதிகரித்துச் செல்கின்றன. மாணவரது வரவு, கற்றலுக்கான ஆர்வம் பாடசாலை யை நேசிக்கும் மனப்பாங்கு இணைப் பாட விதான செயற்பாடுகள் மீதான ஈடுபாடு என்பன அதிகரித்துச் செல்கின்றன.

## பாடசாலையும் சமூகத் தொடர்பும்

ஒரு பாடசாலையின் வளர்ச்சி உயர்ச்சிகளில் முக்கிய பங்கு வகிப்பது சமூகமாகும். அந்த வகையில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பழைய மாணவர்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், புலம் பெயர் சமூகங்கள், நலன் விரும்பிகள் போன்றோர் எம்மோடு இணைந்து பாடசாலை அபிவிருத்தியில் பலவிதமான பங்களிப்புக்களை செய்து வருகின்றனர். இவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றி. குறிப்பாக குச்சவெளி உறவுகளில் அங்கம் வகிக்கும் எமது பாடசாலை பழைய மாணவர்கள், வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து நேரடியாகவும், தமது உறவினர்கள் மூலமும் எமது பாடசாலைக்கு பல வேலைத் திட்டங் களை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களது மேற்படி பணி, காலம் அறிந்து, தேவை அறிந்து செய்யப்படுகின்றது. இவர்களது இச் சேவைகளை வரவேற்று பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

மேலும் சிரமதானம், பாடசாலை நிகழ்வுகள், கூட்டங்கள் என்பவற்றுக்கு பெற்றோர்கள் கிரமமாக வருகை தந்து எமக்கு ஆதரவளிக்கின்றனர். அவர்களுக்கும் எனது நன்றிகள். எமது பாடசாலையில் 230 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். பாடசாலை அதிபர், 10 ஆசிரியர்கள், முழு நேரமும், 02 ஆசிரியர்கள் இணைப்பு மூலம் வாரத்தில் இரண்டு நாட்களும் 1 ஆசிரியர் இணைப்பு மூலம் வாரத்தின் மூன்று நாட்களும் 2 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 1 இரவு நேர காவலாளியும் பணியாற்றி வருகின்றனர். எமக்கு 20 ஆசிரியர்கள் தேவையாகவுள்ள சூழலில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது நிர்வாக ரீதியாகவும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு ரீதியாகவும் பாரிய சவாலாக காணப்படுகின்றது

## பௌதீக வளப்பயன்பாடு

" அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை " என்ற வாக்கிற்கு இணங்க மாணவர்கள் விரும்பும் நேசிக்கும் பாடசாலையாக எமது பாடசாலை காணப்பட வேண்டும் என்ற நோக்கோடு சுற்று மதில் இல்லாமல் இருந்த பாடசாலைக்கு சுற்று மதிலும் நுழை வாயிலும் புதிய கதவும் அமைக்கப்பட்டுள்ளன.. மூன்று மொழிகளிலும் அழகிய பெயர்பலகை பொருத்தப்பட்டுள்ளது. வகுப்பறைகள் அனைத்தும் வர்ணம் பூசப்பட்டு, கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டு கவின் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

அதிபர் அலுவலகம், பல்லூடக அறை என்பன திருத்தம் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளன. மாணவர்களின் சமையல் அறை, சாப்பாட்டு அறை திருத்தம் செய்யப்பட்டுள்ளன. ஒன்றுகூடல் மண்டபம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேடைக்கான திரைச்சீலை பொருத்தப்பட்டு அழகுப்படுத்தப் பட்டுள்ளது. யன்னல்களுக்கும், கதவுகளுக்கும் திரைகள் போடப்பட்டுள்ளன. தளபாடங்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சில தளபாடங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. கை கழுவும் வசதி,குடி நீர் வசதி என்பன சிறப்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தரம் 01-13 வரை அனைத்து மாணவர்களுக்கும் உணவு வழங்கும் செயற்றிட்டம் எமது பாடசாலையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஸ்மாட் (Smart)வகுப்பறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

## இதர செயற்பாடுகள்

பாடசாலைக்கு வெளியே ஆலய சிரமதானம் திருவிழாக்காலங்களில் பங்களிப்புப் பெற்றோர்களுக்கான வாழ்வாதார உதவி ஏற்பாடுகள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெற்றோருக்கான உலர் உணவுப் பொதி வழங்கல், மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், கற்றல் உபகரணங்கள் என்பன பெற்றுக் கொடுத்தல் போன்ற பணிகளும் எம்மால் முன்னெடுக்கப் படுகின்றன.

எமது தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயத்தை நான் பொறுப்பெடுத்து சுமார் 7 வருடங்களை அண்மித்து நிர்வாகம் செய்யும் இக்கால கட்டத்தில் எந்த விதமான தொய்வோ சரிவோ இல்லாமல் சிங்கம் போல் வீறு நடைபோட்டு எமது பாடசாலை வெற்றிப் பாதையை நோக்கி இலக்குகளை அடையக்கூடிய வகையில் நகர்ந்து செல்ல முறையான திட்டமிடலோடு சிறந்த தலைமைத் துவம் மூலம் நிர்வாகத்தை செயற்படுத்தி வருகின்றேன்.

100% தரம் 5 பரீட்சை பெறுபேறு என்ற எண்ணக்கருவையும் வலுப்படுத்தியுள்ளேன்.

2019 உயர்தரப் பரீட்சை 100% சித்தி என்ற எண்ணக்கருவையும் வலுப்படுத்தியுள்ளேன். (2021) இந்த நிலையைத் தொடர்ந்து பேணித்தக்கவைத்து எதிர் காலத்தில் எமது பாடசாலை மாணவர்கள் கல்வி, ஒழுக்கம், கலை, கலாசாரம் சமூக சிந்தனை இணைப்பாட விதானச் செயற்பாடுகள் என்பவற்றில் உயர்ந்து விளங்குவதோடு எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பிரஜைகளாக எமது மாணவச் செல்வங்கள் திகழ வேண்டும் என்பது எனது பேராவலும் பெரு விருப்பமுமாகும். இது நிறைவேறும் என நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கின்றேன்.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக "

என்ற வள்ளுவர் வாக்குப்படி கற்று நல்லபடி வாழ்ந்து நல்லதொரு சமூகம் உருவாக நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு.ம ஸ்ரீதர ஆனந்தம்
அதிபர்
தி / தி / விவேகானந்தா மகா வித்தியாலயம்

நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் நோக்கங்கள்

ஒரு நாட்டின் சகல விதமான அபிவிருத்திக் கொள்கைகளுக்கு அமைவாகவும் பொருளாதார நோக்கங்களுக்கு இசைவாகவும் கல்வி நடவடிக்கைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மனித வளங்கள்,தேவைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டே கலைத்திட்டம் வகுக்கப்பட்டு பாடசாலைக் கல்வி முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதோடு ஒவ்வொரு தனிமனிதனையும் சமூகப் பொறுப்புள்ளவனாக மாற்றியமைப்பதே கல்வியின் சிறப்பு நோக்கமாகும். நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால் முதலில் கல்வி அபிவிருத்தி அடைந்திருக்க வேண்டும். கல்வியின் மூலம் ஏனைய அபிவிருத்திகளை இலகுவாக கட்டியெழுப்பி விடலாம். நல்லதொரு சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்றால் அங்கு கல்வி அறிவுப் பெற்றவராலேயே முடியும்.

கல்வியில் மாற்றங்களை துரிதப்படுத்தும் காரணிகளில் ஒன்று தொழிநுட்ப வளர்ச்சியாகும். இதனால் கல்வி அமைப்பில் புதிய இலக்குகள், புதிய பாடப் பொருள்கள் தோற்றம் பெறத் தொடங்கியுள்ளன. இத்தகைய மாற்றங்களை எதிர்க் கொள்ளும் போது புதிய கற்பித்தல் முறையை கையாளும் தேவையைப் பாடசாலைகள் உணர்ந்து செயற்படத் தொடங்குகின்றன.

ஒவ்வொரு காலத்திலும் இத்தகைய புதிய மாற்றங்கள் கல்வியுலகில் காணப்பட்ட போதிலும் இன்றைய புதிய நூற்றாண்டானது சமூக மாற்றம், கல்விப் புரட்சி போன்றவற்றையும் புதிய நுட்பங்களையும் வேண்டி நிற்கிறது. நாட்டுக்கேற்ற நல்ல திட்டங்களை ஆராய்ந்து கல்வி நடவடிக்கைகளில் புகுத்தி அதனைப் பயன்படுத்தி சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் கல்வியியலாளர்களின் சேவையை சமூகம் எதிர்ப்பார்த்து நிற்கிறது.

கல்வியின் குறிக்கோள்களை இரண்டு வழிகளில் தீர்மானிக்கலாம். இலட்சிய வழி, யதார்த்தவழி. கல்வியானது மக்களின் சிந்தனைகளைத் தூண்ட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கும் உரிமைகளையும் கடமைகளையும் அவன் அறிந்து செயற்படுவதற்கு வழிக்காட்ட வேண்டும். மாறிவரும் நாட்டின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக கல்வியில் மாற்றம் ஏற்பட வேண்டும். அப்போதுதான் எமது நாடு வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் நோக்கி நகரும் என்பதில் ஐயமில்லை.

க.டிலுக்ஷிகா
தரம் -09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அதிபர்




திரு.ம. ஸ்ரீதர ஆனந்தம் (SLPS)
BA, PGDE, DSM, Dip in Cons.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபர்



திரு. க.பிரதீபன் (BSC)

## பகுதித்தலைவர்கள்



இடைநிலைப்பிரிவு
திருமதி.ஜெ.ரொஷானி



ஆரம்பப்பிரிவு
செல்வி.இ.அஸ்வினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர், ஆசிரியர் குழாம்



நிற்பவர்கள் :- செல்வி.தெ.சிந்துஜா, செல்வி.க.சங்கீதா, திருமதி.ம.ஒலிவியா, செல்வி.தி.ஆசா, திருமதி.செ.வாசுகிதேவி, திருமதி.ஜெ.கோபிதா, திருமதி.பி.யோகராணி, செல்வி.வி.கஸ்தூரி, திருமதி.இ.உதயாசாந்தி

இருப்பவர்கள் :- திருமதி.ரொ.கு.ஜெயக்குமார், திரு.ர.சஞ்ஜீவகாந்த், திரு.அ.அகிலன், திரு.ம.ஸ்ரீதரஆனந்தம் (அதிபர்), திரு.க.பிரதீபன் (பிரதி அதிபர்), திரு.என்.எம்.முபாரக், செல்வி.இ.அஸ்வினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகளும் அதன் உண்மை அர்த்தங்களும்

01. கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை.

● **உண்மைப் பொருள் -**

கழு என்பது ஒரு வகை கோரைப் புல் அதில் பாய் தைத்து படுத்துப் பார்த்தால் கற்பூர வாசனை தெரியும். என்பதே சரியான விளக்கம்.

02. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.

● **உண்மைப் பொருள் -**

ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் ஆவான்.நோயைப் போக்க ஆயிரம் வேரைக் கொண்டு மருந்து கொடுப்பவன் அரை வைத்தியன் ஆவான்.

03. களவும் கற்று மற.

● **உண்மைப் பொருள் -**

களவு - திருடுதல் , கத்து - பொய் சொல்லுதல், தீய பழக்கமான இவற்றை ஒருவன் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

04. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

● **உண்மைப் பொருள் -**

மண் குதிரை என்றால், ஆற்று வெள்ளத்தில் தற்காலிகமாக ஏற்பட்ட மண்மேடு ஆகும். அதில் கால் வைத்தால், நாம் ஆற்றில் மூழ்கி விடுவோம். எனவே அதனை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது.

05. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.

● **உண்மைப் பொருள் -**

அந்த காலத்தில் சந்தையில் மாட்டை வாங்கும் போது மாட்டின் காலடிச் சுவட்டை வைத்து அதன் பலத்தை அறிவதுண்டு நடக்கும் போது அதன் காலடிச் சுவடு எந்த அளவிற்கு ஆழமாக உள்ளதோ அந்த அளவிற்கு அந்த மாடு பலம் பொருந்தியதாக அறியப்படும்.

06. ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம்.

● **உண்மைப் பொருள் -**

“ ஆயிரம் பேரிடம் போய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம்” இது நாளடைவில் மருவி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கண்டது கற்க பண்டிதன் ஆவான்.

● உண்மைப் பொருள் -

அறிவு சார்ந்த நூல்களை கண்டு ஆராய்ந்து கற்பவன் பண்டிதன் ஆவான்.

08. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்.

● உண்மைப் பொருள் -

முற்காலத்தில் ஆடிமாதத்தில் மழையுடன் சேர்ந்து சாரலும் வீசும். இதன் காரணமாக மனிதர்களின் உடலில் உள்ள சூடு தணிந்து அம்மை நோய் விலகும்.

09. புண்பட்ட மனதை புகை விட்டு ஆற்று.

● உண்மைப் பொருள் -

மனது புண் பட்டிருக்கும் போது தனக்கு பிடித்த வேறொரு செயலில் மனதைப் புக விட்டு ஆற்றிக் கொள்ள வேண்டும்.

10. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

● உண்மைப் பொருள் -

நல்லவர்கள் எவ்வளவுதான் கொடுமையை அனுபவித்தாலும் அவர்கள் ஏற்றுக் கொண்ட பாதை சரியானது என்று நினைத்தால் அவர்களுடைய பாதையிலிருந்து எந்த சமயத்திலும் உயிர் போகும் நிலையிலும் பிறழ மாட்டார்கள்.

ர. நிதுஷா

தரம் - 10

# A rainy day

**I like the rainy season most.It is also known as the monsoon season. During rainy days, the sky is generally overcast with clouds.cloud of different shades and shapes move in the sky and look very pretty. sometimes rain comes long with lightning and thunder. All living things enjoy the rainy season by getting wet in the rain. Kids enjoy rainy days because They are full of fun. They can step out of their homes,umbrellas in hand and make their way down to school. They play in the rain and jump into paddles.**

**S. Diluxana**

**grade - 5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

கால் நனையாமல் கடல்
கடந்தவர்கள் உண்டு...
ஆனால் கண் நனையாமல்
வாழ்க்கையைக் கடந்தவர்கள்
இல்லை.

உள்ளத்தை எப்போதும்
உளியாக வைத்துக் கொள்...
சிலையாவதும் சிறையாவதும்
நீ செதுக்கும் தன்மையைப்
பொறுத்தது.

எல்லோரும் பயணிக்கிறார்கள்
என்று நீயும் பின் தொடராதே...
உனக்கான பாதையை
நீயே உருவாக்கு.

நிறைய துன்பங்களை
சுமந்தாலும் புன்னகைக்க...
மறந்து விடாதீர்கள்
ஒரு நாளிலே வாடிவிடும்
பூக்கள் கூட அழுவதில்லை.

நீந்த முடியாத மீன்களை
நதி ஒதுக்கி விடும்...
விமர்சனம் தாண்டி
உழைக்காத மனிதனை
வெற்றி ஒதுக்கி விடும்.

ம.பிரீத்தா
**2021 A/L Batch**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்களும் கருணையுள்ளமும்

“அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்”. என்கிறார் திருவள்ளுவர். அதாவது இந்த உலகில் மிகவும் உயர்ந்த விடயம் கருணை நிறைந்த உள்ளம் தான். அந்த ஒரு விடயம் தான் இங்கே உயிர்களையும் இந்த உலகத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறது. சக மனிதர்கள் மீதும் வாழ்கின்ற அனைத்து ஜீவராசிகளிடமும் கருணையோடு இருக்க வேண்டும் என்பது சான்றோர்களின் போதனையாகும். கருணையுடையவர்கள் தான் சுயநலம் இல்லாதவர்களாய் பிறருக்கு உதவுகின்ற தாராள மனம் உடையவர்களாக இருப்பார்கள். இத்தகைய மனிதர்கள் இருப்பதால் தான் இன்றும் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

“அன்பின் வழியது உயர்நிலை
அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு”

என அன்பாகிய கருணையின் உயர்நிலையை திருவள்ளுவர் உயர்வாகக் கூறியுள்ளார். அன்புள்ளம் படைத்தவர்கள் தாம் உயிர் வாழ்கின்ற மனிதர்களாகக் கருதப்படுவார்கள் மற்றையவர்கள்உயிரற்ற வெறும் உடல் போன்றவர்கள். இந்த உலகத்தில் எல்லா விழுமியங்களிலும் கருணை என்பது முதல் நிலை பெறுகின்றது. கருணை ஒரு மனிதனின் உள்ளத்தில் இருக்குமானால் அவனிடம் எல்லா உயர்ந்த குணங்களும் தானாகவே வந்து சேரும்.கருணை உள்ள மனிதர்கள் உயர்ந்த நிலையினை அடைந்து கொள்வார்கள். கருணை எனப்படுவது பசியில் வாடுகின்ற மனிதனுக்கு உணவளித்தல், தாகத்தில் தவிப்பவனுக்கு தண்ணீர் கொடுப்பது. வலியில் துடிப்பவனுக்கு மருந்து கொடுத்து உதவுதல், ஏழ்மையில் வாழ்பவனுக்கு உதவி செய்தல், அச்சத்தில் வாழ்பவருக்கு தைரியம் கொடுப்பது.துன்பத்தில் வாடுபவர்களுக்கு ஆறுதலாய் இருத்தல் போன்றவற்றைக் கூறலாம்.

இறைவன் படைத்த அனைத்து உயிருள்ள ஜீவராசிகளிடமும் கருணையுள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இந்த அழகான உலகத்தை படைத்த இறைவன் எம்மை அன்போடும் பாதுகாப்போடும் வளர்த்த தந்தை. இன்ப துன்பங்களில் உடனிருக்கின்ற நண்பர்கள், எமக்கு கல்வியைத் தந்து வாழ்விற்கு வழிகாட்டியாக இருக்கின்ற ஆசிரியர்கள் இவர்கள் தான் கருணையுள்ளம் கொண்டவர்களாக எமது வாழ்வில் கூட வருகின்றனர். உலகம் இன்று சுயநல வாழ்க்கைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. போட்டி, பொறாமை, துரோகம் போன்ற தீய குணங்களை அதிகம் வளர்த்துக் கொள்வதை சமுதாயத்தில் காணமுடிகின்றது. இதனை ஒழிக்க கருணை முக்கியம். மனித பிறப்பின் பயனையும் அர்த்தத்தையும் காண கருணை அவசியம்.

வரலாற்றில் மக்கள் மத்தியில் கருணை உயர்ந்த இடத்தைப் பெறுகின்றது. மகத்தான மனிதர்கள் பெருங் கருணையுடைய மனிதர்களே கொடையில் சிறந்தவனான கர்ணன், அது போல் புறாவிற்காக தன் உடலை வெட்டிக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி. முல்லைக் கொடிக்காக தேர் கொடுத்த பாரி மன்னன், மயிலுக்குப் போர்வை அளித்த பேக மன்னன், பசுக்கன்றிற்காக தனது மகனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய்க்கத் துணிந்த மனுநீதிச்சோழன். பிற்காலத்தில் அன்னை தெரேசா, மகாத்மா காந்தி என இந்த வரலாற்றில் சிறந்த மனிதர்களாக சொல்லப்படுகின்ற அனைவரும் கருணையுள்ளம் உடையவர்களாக அறியப்படுகின்றனர்.

அன்புள்ள மனிதர்கள் இன்றும் வாழ்வதனால் தான் இந்த உலகம் இன்றும் நிலைத்திருக்கின்றது. இவ்வுலகில் நல்லோர் ஒருவர் இருப்பதால் தான் எல்லாருக்கும் மழை பெய்கிறது என்கிறார் ஔவையார். மனித நேயமும் அன்பும் இன்னும் இந்த பூமியில் நிலைத்திருக்கிறன.. இதனால்தான் இங்கே அனைத்தும் சமநிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உலகில் அனைத்து ஜீவராசிகளும் அன்பு என்ற ஒற்றை மந்திரத்தினால் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆசை, கோபம், களவு கொள்பவன், பேச தெரிந்த மிருகம் அன்பு, நன்றி, கருணை உள்ளவன் மனித வடிவில் தெய்வம் என்கிற கவியரசு கண்ணதாசனுடைய பாடல் வரிகளினைப் போல இந்த உலகத்தில் சிறிது காலம் வாழ்ந்து ஒழிகின்ற மனிதர்கள் மீதும் உயிர்கள் மீதும் கருணையுள்ளவர்களாக இருப்போம்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" எனும் உயரிய அறத்தின் பால் நல்ல மனிதர்களாக வாழ்வோம்.

ஜெ.சுவர்ணமுகி
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்களாக வேண்டுமானால்...

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற வகையில் நாட்டுக்குப் பொருத்தமான நல்லொழுக்கம் மிக்க நற்பிரஜைகளை உருவாக்குதல் என்ற இலங்கையின் தேசிய கல்வி இலக்கை அடைவதனை நோக்காகக் கொண்டு கல்வி அமைச்சினால் உருவாக்கப்பட்ட பாட விதானம் ஊடாக பாடசாலைகளின் வகுப்பறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவை முறைசார் பாடவிதானம், முறையில் பாடவிதானம், இணைபாடவிதானம் என்ற அடிப்படையில் பாடசாலைகளால் அமுலாக்கம் செய்யப்படுகின்றன. இவை யாவும் பொருளாதாரத்தை ஏற்றமுடையதாக்குவதற்கு இளைஞர்களை தயார்படுத்தவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

1998 இல் இருந்து பாடசாலைகளில் நடைமுறையிலிருப்பது தேர்ச்சி மைய பாடவிதானமாகும். மாணவர்களிடமிருந்து உரிய தேர்ச்சியினையும் ஆளுமையினையும் விருத்தி செய்து கொள்வதற்காகப் பல வேலைத் திட்டங்கள் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய கல்வி இலக்கு ,தேசிய கல்வி நோக்கங்கள், அடிப்படைக் கற்றல் தேர்ச்சிகள், அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள், பொருளாதார இலக்குகள், பாடங்களின் குறிக்கோள்கள் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பாடநூல்கள் உருவாக்கப் பட்டு, ஆசிரியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டு ஆசிரியப்பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஒவ்வொரு வருடமும் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின், வீழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் என்ன காரணங்கள் எனக் கண்டறியப்பட்டு அதை நிவர்த்தி செய்வதற்கான உபாயங்கள், கையாளும் விதங்கள் அதற்கான செயலமர்வுகள் இவ்வாறு ஏராளமான நடைமுறைகள் அதிபர், ஆசிரியர்களால் மாணவர்களுக்கு சென்றடைய அரசு முயற்சிக்கின்றது.

இவை எல்லாவற்றையும் விட இலவச சீருடை, இலவசப் பாட நூல், மதிய உணவு, இலவச பாதணி இவற்றை விடக் கூடுதலாக எமது பாடசாலை போன்ற கிராமப்புற பாடசாலைகளுக்கு புலம் பெயர் தமிழர்களால் வழங்கப்படும் எண்ணற்ற பெறுமதி வாய்ந்த உதவிகள் என ஏராளமான உதவிகள் கிடைத்தும் இன்றைய மாணவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மாணவர்கள் கல்வி கற்பதும் ஆசிரியர்களால் கற்பிப்பது என்பதும் "கல்லில் நார் உரிப்பது" போன்ற விடயமாக உள்ளது. கற்றலானது இன்றைய மாணவர்களுக்கு வேப்பிலைச் சுவையாகவே உள்ளது. என்பது கவலைக்குரிய விடயமாக உள்ளது.

சகல மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகுவது என்பதல்ல."நாளைய வேலை உலகிற்குத் தயாராக வேண்டும் என்பதல்லவா?" இன்றைய ஆசிரியர்களது கவலையாக உள்ளது. எதிர் காலத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமாயின் பெற்றோரும் தமது பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனது எதிர்காலம் ஒளிமயமானதாகவும், சுபீட்சமாகவும் அமைய வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தால்தான் ஒவ்வொரு ஆசிரியரின் ஆசிரியப் பணியும் முழுமையடையும் ஆகவே பிள்ளைகளே சிறந்த ஆரோக்கியமான சமுதாயமாக நாம் திகழ வேண்டும் என உறுதி கொள்ளுங்கள் நிச்சயமாக வெற்றி உங்கள் பக்கம் என்பதில் ஐயமில்லை.

திருமதி. செ. வாசுகிதேவி
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவக்குழு



## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



## கல்வி சாரா ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுக்குழு



## டெங்கு ஒழிப்புக்குழு



## ஒழுக்காற்றுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனை வழிகாட்டல்



## அனர்த்த முகாமைத்துவக்குழு



## மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவத் தலைவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக்கல்வி செயற்பாட்டுக் கழகம்



### பாடசாலையின் கொடி




### கழுத்துப்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வியில் தகவல் தொழிநுட்பத்தின் முக்கியத்துவம்

பாடசாலையின் கல்வி வளர்ச்சி தற்காலத்தில் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது. பாடசாலையின் இத் தொழிநுட்ப வளர்ச்சி கொரோனா காலகட்டமே ஆகும். இக் காலப்பகுதியில்தான் இலங்கையின் அனைத்து பாடசாலைகளும் தொழிநுட்பத்தை கையாள வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டது . பாடசாலையில் பயன்படுத்தப்பட்ட தொழிநுட்பங்களாக இ-கல்வி ( Zoom )வகுப்பு, Google போம் (நிகழ்நிலைக்கற்றல்), Whatsapp போன்ற தொழிநுட்பங்களே ஆகும்.

இ-கல்வி என்பது கணனிப்பொறியின் உதவியுடன் கல்வி நடைமுறைப்படுத்துவதே ஆகும். பாடங்களை வடிவமைத்தல், கற்றலை நிர்வகித்தல் முதலான நடவடிக்கைகளை மின்னணு முறையில் மேற்கொள்வதே இ-கல்வி கற்றல்/மின் கற்றலின் அடிப்படை நோக்கமாகும். இது பாடசாலையில் அதிகமாக பயன்படுத்தி வரும் தொழிநுட்பமாகும்.

Zoom வகுப்பு என்பது அனைத்து வீடுகளிலும் உள்ள மாணவர்களையும் ஓர் இணைய வகுப்பில் சந்திக்கச் செய்வது. இதன் மூலம் மாணவர்களின் கற்றல் இலகுவான முறையில் உரிய மதிப்பீட்டை செய்யக்கூடியவாறு இத் தொழிநுட்பம் அமைகின்றது.

Google போம் என்பது வீட்டில் இருந்தவாறு மாணவர்களை கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கு உள்வாங்கிக் கொள்ள பயன்படுத்தப்படும் தொழிநுட்பமாகும். இதன் மூலம் மாணவர்களின் கணிப்பீடு உரிய முறையில் பேணப்பட்டு வருகின்றது. இது உரிய பாடசாலையினால் வடிவமைக்கப்பட்டு வேறு பாடசாலை மாணவர்களாலும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

வைபர் மற்றும் Whatsapp மாணவர்களுக்கு தகவல்களை பரிமாறிக் கொள்ள பயன்படுத்தப்படும் ஒரு உத்தியாகும். இதன் மூலம் ஆசிரியர்கள் தங்களது கற்றல்-கற்பித்தல் பணிகளைச் சிறப்புற மேற்கொள்கின்றனர்.

அனேகமான பாடசாலைகளில் கற்றல் ஊடகமாக பல்லூடகத்தை (Multimedia) பயன்படுத்தி கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றது. இச் செயற்பாடு ஆசிரிய-மாணவர்கள் மத்தியில் ஒரு வினைத்திறனான கற்றல் செயற்பாடாக மாறியுள்ளது.

இவ்வாறான இணையகல்வி செயற்பாடுகள் பின்தங்கிய சாதாரண பாடசாலைகளில் காணப்படாமை பெரும் குறைபாடாக உள்ளது. அதே சமயம் இவற்றைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் இணையத்திற்கு அடிமையாதல், மாணவர்களுக்கு கண்பார்வை குறைவடைந்து செல்லுதல், வசதி இல்லாத மாணவர்களால் இவ்வாறனவற்றைப் பயன்படுத்த முடியாது போதல், மாணவர்களுக்கு உடல் ரீதியிலும் பல நோய்கள் பெரிதும் ஏற்படுதல் இவ்வாறான பிரச்சனைகளினால் மாணவர்களால் தங்களுடைய கற்றல் . கற்பித்தலை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாது போகின்றது.

எனவே பாடசாலைகளில் பெரிதும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பல நன்மைகளும், தீமைகளும் மாறி மாறி கிடைத்த வண்ணமே காணப்படகின்றன. மாணவர்களாகிய நாங்கள் இவ் இணையத்திற்கு அடிமையாகாமல் தொழிநுட்பத்தை வளர்ப்போம், பாடசாலையை முன்னேற்றுவோம்.

ச.கேஷாயினி
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணவம்

ஆணவம் என்னும் சொல் நாம் அனைவரும் உபயோகிக்கின்ற ஒரு சொல் தான் ஆனால் நம்மை நோக்கி நமக்கு ஆணவம் இருக்கிறதா? என்று நாம் யோசித்தது கிடையாது. ஆனால் பிறரை நாம் வசைபாடியதும் உண்டு.

"அவனுக்கு, அவளுக்கு ஆணவம் அதிகம், ஆணவத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசிக்கொண்டும் செய்து கொண்டுமிருக்கிறார்கள்" என்று பிறரை வசைபாடி இருப்போம், உண்மையில் நமக்கு ஆணவம் என்பது இல்லை என்றே நினைத்துக் கொண்டிருப்போம்.

உண்மையில் நமக்குள்ளும் ஆணவம் இருக்கிறது. ஆணவம் என்று இங்கு குறிப்பிடுவது நான், எனது, என்னுடையது என்று நாம் நினைப்பதை தான் இங்கு குறிப்பிடுகின்றோம். பெரும்பாலும் மனிதனின் அனைத்து துன்பங்களுக்கும் காரணம் அவனின் ஆணவம் தான், எனது என்ற ஆணவமே அனைத்து துன்பங்களுக்கும் மூல காரணம்.

நான் பெரியவன் என்கிற இறுமாப்பு என்னைப் பற்றி தவறாகச் சொன்னால் கோபம் வருகிறது. எனக்கு என்ன ஆகுமோ என்ற பயம் வருகிறது. நம் ஆணவமே நமக்கு பலவித துன்பங்களை அளித்த வண்ணம் உள்ளது. முதலில் இந்த ஆணவத்தை அழிக்க வேண்டும் என்றால், நான், எனது, என்னுடையது, என்னால், எனக்கு, அனைத்தும் என்னால் மட்டுமே முடியும் என்கிற எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும்.

இந்த ஆணவம் என்பது "நம்மை அழிக்க வல்லது ". இதற்கு ஒரு உதாரணம்- "ஒரு காட்டில் ஒரு தேக்கு மரம் இருந்தது, அந்த தேக்கு மரத்திற்கு அருகாமையில் கீழே சில நாணல்கள் வளர்ந்தன, சிறு காற்றுக்கே அந்த நாணல்கள் அசைந்தன. இந்த தேக்கு மரமானது நாணல்களைப் பார்த்து கேலி செய்தது. சிறு காற்றுக்கே ஆடுகிறாயே என்று நகைத்துக் கொண்டிருந்தது. எல்லாம் புரிந்து உணர்ந்த நாணல் புன்னகையோடு மீண்டும் அந்தக் காற்றில் அசைந்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் அதீத புயலானது உருவாகியது, அதன் காரணமாக அந்த தேக்கு மரமானது வீசிய புயல் காற்றின் வேகத்தை தாங்க முடியாமல் கீழே விழுந்து நொருங்கியது. அப்பொழுது தான் அந்த தேக்கு மரம் உணர்ந்தது.

"நான் என்கிற ஆணவம் நம்மை அழிக்க வல்லது" என்று. காற்று வீசும் போதெல்லாம் ஆடியாடி தப்பித்த நாணல் இப்பொழுதும் ஆடிக் கொண்டே, அட முட்டாளே ! நிமிர்ந்து நின்று அடி வாங்குவது இப்படித்தான், ஆணவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவைத் தான் தரும் என்றது". இராமாயாணத்தில் இராவணனும் இப்படித்தான் ஆணவம் கொண்டு கைலாய மலையைத் தூக்கி விடுவான்.பிறகு அதனால் துன்பம் அடைவான். இக் கதை நாம் அனைவரும் அறிந்ததுண்டு. ஆணவம் அளவுக்கதிகமாக ஆட வைக்கிறது.

ஆணவத்தின் வெளிப்பாடாக "நாம் செய்யும் செயல்கள் யாவும் நம்மை பக்குவவப்படுத்த இறைவன் நடத்தும் நாடகம் என்று புரிந்துக் கொள்ள வேண்டும். நான் தான் வெற்றி பெறுவேன்", எனக்குத்தான் புகழ் என்று பெருமை கொள்ளாமல் எல்லாம் அவன் செயலால் நடைபெற்றது. எல்லா புகழும் அவர் ஒருவனுக்கே என்று ஆணவ அகங்காரத்தை ஒழித்து செயற்பட்டால் வாழ்வில் துன்பம் என்பது சிறிதும் இருக்காது. ஆணவம் மறையும் போது துன்பம் இன்பமாக மாறும்.

நான்,எனது என்பது இருக்கும் வரை இன்பம் பெறுவது கடினமே. எனவே ஆணவத்தை விடுத்து வாழ்வில் இன்பம்
பெற்று உயர்வு பெறுவோமாக.!

ஜெ.ஜெயரஞ்சினி
தரம் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு

பரந்த வானும்
விரிந்த கடலும்
குச்சவெளி நகரை அழகூட்டும்
பனை, தென்னைத் தோப்புக்களும்
பார்வையில் பதிந்து
பரவசமூட்டும்
பச்சைப் பசேலென்ற வயல்களும்
வற்றாத குளங்களும் - ஆங்காங்கே
வெட்டாத பற்றைகளும் ஆனாலும்
முற்றாக விடிந்திருக்கின்றது - எங்கள்
குச்சவெளி நகரம்

நிறைந்த சோகங்களை
நீளாது மறைத்து விட
அகன்ற வீதிகளும்
அருகருகே ஆலயங்களும்
அடுக்கடுக்காய்க் கடைகளும்
தொடரும் வீட்டுத் திட்டங்களும்
நிமிரும் வீடுகளும்
படிந்த கறைகளை மறைத்திடும்
பல கட்டடப் பாடசாலைகளும்
நிறைந்த சோகங்களை நீக்கி
நிம்மதி அளிப்பவனாய்

புலர்ந்த தேசத்திலே
வன்கரத்து வருடலொன்று
வாஞ்சையுடன் திகழ்கிறது அதனால்
மொட்டிழந்த செடிகளும் பூக்கிறன.
வேரறுந்த மரங்களும் காய்க்கிறன.
சொத்திழந்த சுகமிழந்த எமக்கு இன்று
சுகமான பொழுதுகளே புலர்கிறது.

செல்வி.ஜெயராஜா தருணிகா
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரியின் மகிமை

இந்துக்களின் சிறப்புமிக்க விரதங்களில் ஒன்றாக நவராத்திரி விரதம் காணப்படுகின்றது. நவராத்திரியானது ஒன்பது நாட்களும் முப்பெரும் தேவிகளைத் துதித்து பூஜை செய்து வழிபடுவதாகும். இந்த இராத்திரியில் முப் பெரும் தேவியரை நினைத்து வழிபடு வோர்களுக்கு சகல விதமான சௌபாக்கி யங்களும் வீடுபேறாகிய முக்தியும் வாழ்வில் தேவையான கல்வியும் நல்வாழ்வும் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. நவராத் திரியை சக்தியின் வழிபாடு என்றும் கூறலாம்.

அத்துடன் ஒன்பது இரவுகள் என்றும் பொருள்படும். தீமைகளை அழித்து தர்மத்தை நிலை நாட்டும் விரதமாகும்.நவராத்திரியில் சக்தியின் திருவுருவங்களான முப்பெருந் தேவியரின் மகிமைகளை இந்த நவராத்திரி எடுத்துரைக்கின்றது. -நவ- என்றால் ஒன்பது என்று பொருள்படும். அதில் சூரியன் கன்னி இராசியில் பிரவேசிக்கும் புரட்டாசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் ஒன்பது நாட்களும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. இதில் முதல் மூன்று நாட்களும் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்களும் இலட்சுமி தேவியையும் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதி தேவியையும் மனதில் நினைத்து வழிபாடு செய்வார்கள்.இதில் இறுதி நாளாகத்தான் விஜயதசமி கொண்டாடப் படுகிறது.

விஜயதசமியானது துர்க்கா தேவி ஒன்பது நாட்கள் மகிசாசுரனுடன் போரிட்டு இறுதியாக பத்தாம் நாளில் அவனை வெற்றி கொண்டதைக் குறிக்கும் தினமாகும். அத்துடன் விஜயதசமியில் செய்யும் காரியங்கள் எமக்கு வாழ்வில் வெற்றியைத் தரும் என்று ஒரு ஐதீகம். இதன் காரணமாகத்தான் குழந்தைகளுக்கு விஜயதசமியன்று ஏடு தொடக்குதல் நிகழ்வும் இந்துக்களின் சைவ சமய முறைப்படி மிகவும் சிறப்பாக பெரியோரால் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

இந்த விஜயதசமியானது புரட்டாசி மாதத்தின் அமாவாசை கழிந்த பத்தாம் நாளாக கொண்டாடப்படுகின்றது. அத்துடன் பாடசாலைகளிலும் மிகவும் சிறப்பாக பல நிகழ்ச்சிகளுடன் விஜயதசமி விழாவைக் கொண்டாடி வருகின்றனர். சக்தியின் வடிவங்களான முப்பெருந் தேவியரில் துர்க்கா தேவி வீரத்தையும், இலட்சுமி தேவி செல்வத்தையும், சரஸ்வதி தேவி கல்வியையும் அளிப்பதாக கருதப்படுகின்றது.

இவ் விரதத்தினை ஆண்களை விட அதிகமாக பெண்கள் தான் மேற்கொள்கின்றனர். இவ் விரதத்தினை அனுஷ்டிப்பதால் பல நன்மைகளும் வாழ்வில் ஏற்படும் வறுமை களும் நீங்கும், வாழ்க்கையில் செல்வம் செழிப்புறும், பக்தி அதிகரிக்கும், மகிழ்ச்சி மற்றும் மன நிறைவு கிடைக்கும். நவராத்திரி விரதமானது சிறப்புமிக்க ஒன்பது நாள் விரதம். மக்கள் மனதில் மகிழ்ச்சியையும் பக்தி உணர்வினையும் விதைப்பதாக இருக்கின்றது.

விரதத்தின் மகிமையைத் தெரிந்து கொண்டு சிறுவர்களும் பக்தியுடன் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். பண்டிகையாக கொண்டாடும் விரதமான நவராத்திரி விரதம் இந்துக்களின் புனித சிறப்புமிக்க நன்மை தரும் விரதமாகும். அதனை இந்துக்களான நாம் அனைவரும் அனுஷ்டித்து நன்மை பெறுவோம்.

பே.டக்திகா
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Healthy Food

Food is important for our mental and physical growth. Therefore,we should eat a balanced diet which is a meal which contains all the nutrients. There are six nutrients in food. They are carbohydrates,proteins,fat,minerals,vitamins and water. we must eat healthy food to live a healthy life.

R.Jakshana
Grade - 07

---

# வாசிப்போம் வளம் பெறுவோம்

வாசிப்போம் வாசிப்போம்
வாசிப்பை நேசிப்போம்
நிரந்தரமற்ற வாழ்வில்
நிஜமில்லாத மனிதர்களைக் காட்டிலும்

நிலையாய் இருக்கும்
புத்தகங்களை நண்பர்களாக்குவோம்
புதுப்புது தகவலறிவோம்
புத்துணர்ச்சி பெறுவோம்.

புத்தகத்தை வாசித்துப்பார்
புதுப்புது எண்ணங்கள் பிறக்கும்
தன்னம்பிக்கை வளரும்
தினந்தோறும் வாசிப்போம்.

ர. ரசிகா
தரம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

கல்வி ஒருவரது வாழ்வில் முக்கிய பங்காற்றுகிறது.மனிதர்களது செயல்கள் சிறப்பானதாக அமைய வேண்டுமாயின் அவர்களுக்குள் தோன்றும் எண்ணங்கள் உயர்வானதாக அமைய வேண்டும்.இந்த உயர்வான எண்ணங்களைத் தருவது கல்வி. இக் கல்வியே மனிதனை இவ்வுலகில் வாழும் ஏனைய ஜீவராசிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதனை வள்ளுவர்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு
நூல் கற்றாரோடு ஏனையவர்"

என்றுக் குறிப்பிடுகிறார். அதாவது சிந்திக்கும் திறமை வாய்ந்ததினாலேயே மனிதன் விலங்குகளை விட வேறுபடுகின்றான். அது போல மனிதர்களுள் ஒளிமிக்க அறிவைத் தரக்கூடிய நூல்களை கற்காதவன் அந்நூல் களை கற்றவனிடமிருந்து வேறுபடுகிறான். ஒருவன் செலவத்தாலோ குடிப் பிறப்பாலோ வேறுபடவில்லை. கல்வியினால் மட்டும் வேறுபடுகின்றான். இன்றும் நாம் மறைந்த வர்களுள் கல்வியால் புகழ் பெற்ற மகாகவி பாரதியார், சுவாமி விபுலானந்தர், திருவள்ளுவர் போன்ற கல்விப் பேரறிஞர்களையே மனதில் வைத்து நினைவு கூறுவதற்கு காரணமே கல்வி தான். கல்வி அறிவில் சிறந்தவர்கள் அனைவரிலும் உயர்வானவர்களாக மதிக்கப்படுவார்கள்.கல்வி கற்றவன் செல்வத்தில் ஏழையாக இருந்தாலும் ஒரு நாட்டின் மன்னனை விட கற்றவனே சிறப்புடைய வனாகின்றான்.

இதனை ஔவையார்,
"மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையவன்."

என்று குறிப்பிடுகிறார். அதாவது மன்னனையும் மாசு போக கற்றவனையும் சீர் தூக்கிப்பார்த்தால் மன்னனைக் காட்டிலும் கற்றவனே சிறப்புடையவனாகின்றான். ஏனெனில் மன்னனுக்கு அவனது ஆட்சிக் குட்பட்ட நாட்டில் மட்டுமே சிறப்பு. கற்றவனுக்கோ அவன் சென்ற இடமெல்லாம் சிறப்பு.இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியை ஒவ்வொரு குடிமகனும் சந்தேகமின்றிக் கற்க வேண்டும்.

"கற்பது கடினம் ஆனால் அதை விட கடினம் கற்பதை மறப்பது"

என்கிறார் "ஆவ்பரி" என்ற அறிஞர். இளமையில் தேடித்தேடி கல்வியைக் கற்பதன் மூலம் எந்நிலையிலும் மறவாத கல்வி ஞானத்தைப் பெறலாம். தோண்டத் தோண்ட ஊற்று நீர் கிடைப்பது போல நாமும் தொடர்ந்து படிக்க படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். இத்தகைய அழியாத செல்வத்தைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் இந்த நிலையான செல்வத்தைப் பெறுவதற்கு எந்த வயதிலும் தயாராக இருக்க வேண்டும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்விப் பயனைப் பெற முடியாதவர்களது நிலை பற்றித் திருவள்ளுவர்,

"கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்"

எனக் குறிப்பிடுகின்றார்.அதாவது கல்லாதவர்களை பார்வை இழந்தவரினூடாக சுட்டிக்காட்டிக் கற்காமையின் பாதகம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கல்வி அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களுக்குக் கிடைக்கும் பெருமையைப்பார்த்து கல்வியறிவு பெறாதவர்களும் அவர்களைப் போல் பெருமையைப் பெற விரும்பி செய்கின்ற செயல்கள் அவர்களுக்கு இழிவையே தரும். இதனை ஔவையார்.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து தானும் தன்.."

எனக் குறிப்பிடுகின்றார். அதாவது கல்லாதவர்களை வான் கோழியாகவும். கற்றவர்களை மயிலாகவும் உவமையாகக் காட்டுகிறார். எனவே இந்த உலகத்தையே மாற்றக்கூடிய ஒருபலமான ஆயுதம் உண்டு எனில் அதுவே கல்வி. சரியான வழியில் சந்தோசம் அடையச் செய்யும் கல்வியைக் கற்று மேன்மையடைந்து கொள்ள வேண்டும்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி"

ம. சுரேக்கா

தரம் - 10

---

# சிந்தனைத் துளிகள்

- ஊக்கமே ஒருவனுக்கு நிலையான செல்வமாகும்.
- பேசிய பின் சிந்திப்பதை விட. பேசும்முன் சிந்திப்பதே மேலானது.
- பேச்சிலும் நடத்தையிலும் அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- பதவிக்காக இருப்பவர்கள் மனிதர்களுக்காக வாழ முடியாது.
- பிறருக்கு தீங்கு செய்ய விரும்பாதே! அது உன்னிடமே வந்து சேரும்.
- இறந்த காலத்தைப் பற்றி வருந்தாதே! ஆண்டவன் படைப்பில் எதிர்காலமும் உண்டு.
- மனிதனை மனிதனாக்குபவை இடையூறுகளும் துன்பங்களுமே.
- உபதேசம் செய்வது முக்கியமல்ல உதவி செய்வதுதான் முக்கியம்.

சா.டோஷன்

தரம் -06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Value Of Sports

Children take part in sports.Elders too love sports. Some do it as a hobby. There are many advantages in sports such as protecting our health,gaining happiness,getting a thorough knowledge of sports rules and it develops ones mental and physical fitness.

Sports can be divided into two groups individual and team work. Individual games are running and swimming.Taking part in individual games are volley ball,badminton and hocky.We learn how to work as a team. you can categorise sports as indoor and outdoor games.

Sports is essential to develop ones personality.At present,studends do sports in schools. in the past people walked to distant place and did physical exercises without using machines. people who never take part in sports feel weary and fall. So lets do sports and lead a good healthy life.

K.Mathinila
Grade-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவு (AI)

இன்றய நவீன உலகமானது தத்தமது குறிக்கோள்களைப் பின்பற்றி ஓடிக்கொண்டே இருக்கின்றது. இவ்வாறான உலகில் அவர்கள் எந்த ஒரு காரணத்திற்காகவும் தமது நேரத்தை ஒதுக்கி, தமது அறிவைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. மனிதர்கள் தேடும் விடயங்கள் யாவுமே இணையத்தளத்தில் இலகுவாக கிடைப்பதனால் அவர்கள் இலகுவில் தமது தேவையை முடித்துக் கொள்வதுடன் அதிகளவில் தமது அறிவைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. அத்துடன் உலகில் உள்ள அனைத்து மக்களும் வியந்து பார்க்கும் அளவிற்கு தொழிநுட்பம் அதிகளவில் வளர்ச்சியடைந்துள்ளது. நவீன காலத்தில் உலகளாவிய ரீதியில் அனைவராலும் வியந்து பேசப்படும் விடயமாகக் காணப்படுவது செயற்கை நுண்ணறிவாகும். தொழிநுட்பமானது அதிகளவில் வளர்ச்சியடைந்தாலும் தொழிநுட்பத்தின் உயர்வான வளர்ச்சியை காட்டுவதாக செயற்கை நுண்ணறிவு விளங்குகின்றது.

செயற்கை நுண்ணறிவு என்பது மனிதர்களைப் போல சிந்தித்துச் செயலாற்றக் கூடிய இயந்திரங்களினை உருவாக்கும் தொழிநுட்பம் ஆகும்.இந்த செயற்கை நுண்ணறிவானது விஞ்ஞான ரீதியான ஆய்வுகளில் அதிகளவில் பயன்படுகின்றது. செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி அதிகளவான நன்மைகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். உதாரணமாக, தன்னியக்க வாகனங்கள், ரோபோக்கள் போன்றவற்றைக் கூறலாம். நாம் நமக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.நாம் ஒரு வேலையை செய்து முடிப்பதற்குள் களைப்படைகின்றோம். ஆனால் இயந்திரங்கள் அவ்வாறில்லை. இயந்திரங்களுக்கு ஓய்வு நேரம் என்பது தேவைப்படுவதில்லை. இந்த செயற்கை நுண்ணறிவானது அறிவியலில் மிகவும் கடினமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் உதவுகின்றது.

செயற்கை நுண்ணறிவானது மனித மனத்தின் திறன்களை செயற்கையாக உருவாக்க உதவுகின்றது. 21 ம் நூற்றாண்டில் மனிதனால் படைக்கப்பட்ட மிகவும் உன்னதமான படைப்பாக இந்த செயற்கை நுண்ணறிவு விளங்குகின்றது. செயற்கை நுண்ணறிவானது மருத்துவத்துறை, சட்டம், அறிவியல், என்று பல துறைகளில் இதன் பயன்பாடு வெற்றிகரமானதாக விளங்குகின்றது. அத்துடன் இரண்டாயிரத்து முப்பதிற்கு பிற்பட்ட காலங்களில் அதிகளவிலான நபர்கள் பணி செய்யக்கூடிய துறையாகவும் செயற்கை நுண்ணறிவு விளங்குகின்றது. உடல் நலம் சார் பணிகள், சில்லறை வர்த்தகப்பணி, விளையாட்டுத்துறை, உற்பத்தித் துறை, விண்வெளித்துறை மற்றும் மருத்துவத்துறை போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவு முன்னணி வகிக்கின்றது. மனிதனின் பணிகளை எளிமைப்படுத்தி சிறப்பாகச் செய்யக்கூடிய மாதிரி இயந்திர வடிவங்களின் ஆட்சியில் உலகமானது சுழலும் என்பதும் மிகையாகாது. இதன் மூலம் பலவிதமான வேலை வாய்ப்புக்களும் கிடைக்கப் பெறுகின்றன. நமக்குக் கிடைத்த மிகவும் உன்னதமான படைப்பான செயற்கை நுண்ணறிவை மிகவும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

மு.றிப்கான்
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கிலமன்றம்



தமிழ்மன்றம்



இந்துமாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஞ்ஞான
மன்றம்



கணித
மன்றம்



சுற்றாடல்
கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தமிழ்
மன்றம்

போக்குவரத்துப்
பிரிவு





சதுரங்கக்
கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஷேட
கல்விப்பிரிவு



ICT
கழகம்



BAND
வாத்தியக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பருவம்

பற்பல கனவுகள்
கண்ட ஒற்றை வீடு

பாடங்கள் சில கற்போம்
நட்புகள் பல பெற்றோம்

நண்பன் பெயர் அறிந்தும்
தந்தை பெயரிலே அழைத்தோம்

இன்பங்கள் நிறைந்த
இனிமையான வசந்த காலமே

எல்லாம் பாடசாலையில்
கற்கும் காலமே.

ர.சுதர்சன்
தரம்-08

---

# உன்னைத் திருத்து

- இன்னொருவர் உழைப்பிற்கு உன் பெயர் போடாதே.
- மற்றவரை குறைகூறும் நேரத்தில் உன்னை நீ சரி செய்து கொள்.
- மற்றவரின் உழைப்பைக் கண்டு பொறாமை கொள்ளாதே. உன் உழைப்பை அதிகரித்துக் கொள்.
- ஒருவர் உன்னிடம் கூறிய கஷ்டத்தை மற்றொருவரிடம் கூறி சிரிக்காதே.
- உழைப்பால் உயர்ந்திடு மற்றவரை குறை கூறி உயர எண்ணாதே.
- ஒருவருக்கு செய்த உதவியை இன்னொருவரிடம் கூறி பெருமை கொள்ளாதே.
- உன் மேல் பாசம் வைத்தவரைக் காயப்படுத்தாதே.
- மகிழ்ச்சியாக வாழ இலகுவில் திருப்தியடைந்து கொள்.
- பிறரிடம் பெற விரும்பும் விடயங்களை அவர்களிடம் கொடுக்கக் கற்றுக் கொள்.

மோ. கேர்சியாள்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டில் இரண்டாம் மொழிக் கல்வியின் அவசியம்

இலங்கை பல்லின மக்கள் ஒன்றாக வாழும் நாடு. இங்கு வாழும் மக்கள் பல சமயங்களைப் பின்பற்றுவதுடன் தனித்து வமான கலாசாரங்களையும் பின்பற்று பவர்கள். ஆயினும் தமிழ், சிங்களம் ஆகிய பிரதான மொழியைப் பேசக் கூடியவர்கள். நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மொழி பேசப்படுகிறது.
ஏனைய பிரதேசங்களில் சிங்கள மொழி பரவலாகப் பேசப் படுகிறது. சிங்கள மொழி இலங்கையில் பெரும்பா லானவர்கள் பேசக் கூடிய மொழியாகத் திகழ்கிறது.

மனிதன் தனது உணர்வுகள், சிந்தனை களை ஏனையோரிடம் பகிர்வதற்கு உபயோகிக்கின்ற மிகச் சிறந்த ஊடகமே மொழி. இன நல்லுறவுக்கான ஆரம்பம் மொழியாகும். அந்த வகையில் ஒருவர் தனது தாய் மொழிக்கு அடுத்ததாக கற்கும் வேறு மொழியே இரண்டாம் மொழி எனக் கூறலாம். இலங்கையில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகள் வழக்கில் உள்ளன. தமிழ் மொழியும் சிங்கள மொழியும் உத்தியோகபூர்வ மொழிகளாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் விளங்குகின்றது. இரண்டாம் மொழி என்ற வகையில், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சிங்கள மொழியையும், சிங்கள மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் மொழியையும் இரண்டாம் மொழியாகக் கற்க வேண்டும்.

இரண்டாம் மொழியின் தேவை கருதி அரசாங்கம் பல திட்டங்களை அமுல் படுத்தி வருகின்றது. அந்த வகையில் இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்தில் குறிப்பாக ஆரம்ப வகுப்புகளில் மொழிப்பாடத்தின் மீதான கண்ணோட் டங்களுக்கு அதிக அக்கறை செலுத்தப் பட்டு வருகின்றமையால் தான் ஆரம்ப பிரிவு தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையுள்ள மாணவர்களுக்கு வாய்மொழி மூலமாக ஒன்றிணைந்த பாடத்தின் ஊடாக இரண்டாம் மொழி கற்பிக்கப்படுகின்றது. பல்கலைக் கழகங்களிலும். இரண்டாம் மொழி ஒரு பிரிவாகக் காணப்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகள் மூலம் சிறுபராயத்தில் இருந்தே 'இரண்டாம் மொழி அவசியம்' எனும் எண்ணக் கருவைத் தோற்றுவிக்கின்றது. அரசாங்க உத்தியோகத்தரகள் பணியிடங்களில் பெரும் பாலும் இரண்டாம் மொழியில் கடமை யாற்றுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கு கின்றனர்.

மொழி பெயர்ப்பாளர்களை பணிக்கமர்த்து வதுடன் இப் பிரச்சனைகளைத் தீர்த்து விட முடியாது. இதனால் அரச ஊழியர்கள் மொழித் தேர்ச்சி பெற உதவும் வகையில் அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுக்கின்றது. தற்காலத்தில் 'அரச ஊழியர்கள் இரண்டாம் மொழித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்' எனும் கோட்பாடு வரவேற்கத் தக்கது. தொழில் புரிவோரின் தேவை கருதி இரண்டாம் மொழி கற்பித்தல் முயற்சிகள் பல மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இம் முயற்சியினால் தொழில் ரீதியான அடைவு மட்டத்தை அதிகரிக்கவும் தமது தொழில் தேர்ச்சியினை விருத்தி செய்து கொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இன்று மொழியினூடாக சமாதான நிகழ்வினை நிலைநாட்டுவது எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாமல் பொது மக்களும் இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகின்றது. இம் மொழித் தேர்ச்சியினால் குறிப்பாகத் தமிழ் பேசுபவர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது பரந்தளவிலான வேலை வாய்ப்புக்களைப் பெற வழிவகுக்கும், உயர் பதவிகளையும் பெற முடியும். இரண்டாம் மொழியினால் இலங்கையில் எப் பிரதேசத்திற்கும் சென்று வரலாம் எனும் தன்னம்பிக்கை பிறக்கும். ஏனையோருடன் சிறந்த தொடர்பாடலை மேற்கொள்வதற்கும்இ தவறான புரிந்துணர்வால் ஏற்படும் இன முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கும்இ பிற மதத்தவர்களது பண்பாடு, கலாசாரங்களை அறிந்துக் கொள்ளவும் முடியும்.அத்துடன் இனங்களுக் கிடையில் ஒற்றுமையை வளர்த்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல உதவும். எனவே நாட்டிலுள்ள மொழிகளைத் தெரிந்து வைத்திருப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். அந்த வகையில் எமது இலங்கைத் திரு நாட்டில் பேசப்படும் இரு பிரதான மொழிகளையும் தெரிந்து வைத்திருப்பது ஒவ்வொரு குடிமக்களினதும் அடிப்படை உரிமையாகக் கொள்ளப்படு கின்றது. எனவே தமிழ் மக்களாகிய நாம் இரண்டாம் மொழியான சிங்கள மொழியைக் கற்பதோடு சகோதரத்துவத்தையும் வளர்ப்போம்.

செல்வி.க.சங்கீதா
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையான வாழ்க்கை

- **ஒரு மனிதன் அடைவதற்கான மிகவும் கடினமான இலக்கு யாதெனில், எளிமைதான்!** அந்த எளிமையை உணர்ந்த ஒருவன்.வாழ்வில் அனைத்து வெற்றிகளையும் பெறுவான்..
- **எளிமை என்ற சொல்லுக்கு பல பொருளுண்டு...எளிமைதான் எத்தனை வகை..?** பொருள் எளிமை, நடத்தை எளிமை, செயல்முறை எளிமை, மொழி எளிமை, உணவு எளிமை என்று பலவகை எளிமைகள் இருக்கின்றன.
- **பொருள் எளிமை :**

  ஒருவர் பெருஞ் செல்வந்தராக இருப்பார். ஆனால், தன்னுடைய செல்வப்பகட்டை வெளிப்படுத்துவதில்லை என்றால் அவர்தான் எளிமைக்குச் சொந்தக்காரர். அவர் சாதாரணத் தட்டில் தான் சாப்பிடுவார், அவருக்குத் தெரியும் வெள்ளித் தட்டில் சாப்பிட்டாலும் சாதாரண தட்டில் சாப்பிட்டாலும் உண்டது உணவைத் தானே தவிர, தட்டையல்ல. அவர் உடையிலும் எளிமை தெரியும். பயன்படுத்தும் பொருட்களிலும் எளிமை தெரியும்.
- **நடத்தையில் எளிமை :**

  நடத்தை எளிமை என்பது எவரிடமும் எளிமையாக பழகுவது. சாதாரண மனிதராக சமுதாயத்தில் கருதப்படுபவரையும் தன்னுடன் பழக அனுமதிப்பது. பாகுபாடு இன்றி அனைவரையும் அன்புடனும், மரியாதையுடனும் நடத்துவது. எப்போதும்.எங்கேயும் பொறுமையாக நடந்து கொள்ளுவது.
- **செயல்முறையில் எளிமை :**

  செயல்முறை எளிமை என்பது எந்த செயலிலும் எளிமையைக் கடைப்பிடிப்பது. செயல் திட்டங்களை எளிமைப்படுத்துவது. எதையும் எவரும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் தகவல்களைத் தருவது. சட்டங்கள் மற்றும் நியதிகளை எளிமையாக்குவது. எந்த செயலைச் செய்தாலும் அவற்றை எளிய முறையில் செய்தல்.
- **உணவில் எளிமை :**

  உடலும் உள்ளமும் நலம் பெறும் வகையிலான எளிய உணவினை உண்ணுதல். நான்கு அங்குல நாவின் சுவை பசிக்காக ஆறடி உடலைப் பாழடிக்காமல் எளிமையாக உண்பது.
- **மொழியில் எளிமை :**

  இறுதியாக ஆனால்! மிக முக்கியமாக மொழியில் எளிமை கடைப்பிடிப்பது. மொழி எளிமை என்பது, நாம் பேசும் அல்லது எழுதும் வார்த்தைகள் அனைத்தும் அனைவருக்கும் குறிப்பாக அந்தத் தகவல்களைப் பெறுபவர்களில் மிகச் சாதாரண அறிவுடைய மனிதர்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமையான வார்த்தைகளைப் பயன்படுத்துவது.

" **எளிமை என்பது ஏழ்மை அல்ல.அற்புதமான வாழ்க்கைக்கு வேர்.** "

எளிமையாக வாழ்வதன் மூலம் மாசற்ற இயற்கை, நோயற்ற உடல், நிறைந்த செல்வம், போட்டி பொறாமையற்ற சமுதாயத்தை உருவாக்கலாம்..!

**ஜெ. சுகிர்தா**
**( 2020, 2021 )**
**( பழைய மாணவி )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களின் நன்மை தீமைகள்

ஆரம்ப காலத்தில் நம் முன்னோர்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மடல், புறாவைத் தூது அனுப்புதல், முரசு போன்றவற்றைப் பயன்படுத்தினர். காலப்போக்கில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறையும் வளர்ச்சி பெற்றது. அவ் வளர்ச்சியே ஊடகங்கள் ஆகும். இவ் ஊடகங்களால் பல நன்மைகள் மட்டுமல்ல தீமைகளும் ஏற்படுகின்றன.

பழங்காலத்தில் ஒரு தகவலைக் கண்டுப்பிடிக்க பல புத்தகங்களைப் படிக்க வேண்டும். ஆனால் தற்போது ஒரு நொடியில் ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தொலைவில் உள்ள நண்பர்கள், உறவினர்களுடன் தொடர்பு கொள்ளவும் பயன்படுகின்றன. ஊடகங்கள் மூலம் உலக நடப்புக்களையும் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். மக்கள் வீட்டில் இருந்தவாறே பணம் சம்பாதிக்க இவ் ஊடகங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. நடிப்பு, பாட்டு போன்ற திறமைகள் இருந்தாலும் யாருடைய உதவியும் இன்றி ஊடகத்தில் வெளிப்படுத்தினால் அதற்கான அங்கீகாரத்தையும் பாராட்டுக்களையும் பெற வழிவகை செய்யும்.

மாணவர்கள் தமது கல்வி தொடர்பான பல்வேறு தகவல்களைத் தேட வேண்டிய அவசியமில்லை தேவையான தகவல்களை ஊடகங்களே பெறுவதற்கு உதவி செய்கின்றன. அவர்கள் தமது கல்வி சார்ந்த சந்தேகங்களை ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்திக் கொள்கின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சமூக வலைத்தளங்கள் மூலம் கல்வி கற்பிக்கின்றனர். அண்மையில் உலகை அச்சுறுத்திய கொரோனா வைரஸ் காரணமாக மாணவர்களும், ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை உருவான போது ஆசிரியர்கள் சமூக வலைத்தளங்களில் நிகழ்நிலை வகுப்பின் (Zoom) ஊடாக கல்வி கற்பித்ததை உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாறு பல நன்மைகளைத் தரும் ஊடகங்கள் தீமைகள் பலவற்றையும் தருகின்றன. தற்போதுள்ள மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதை விட சமூக வலைத்தளங்களில் அதிக கவனத்தைச் செலுத்துகின்றனர். இதனால் அவர்களது கல்வி பாதிப்படைகின்றது. தற்போதுள்ள இளைஞர்கள் ஊடகங்கள் மூலம் பெண் பிள்ளைகளிடம் தவறான முறையில் அணுகுதல், காதல் என்ற பெயரில் ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களை ஏமாற்றுதல், பண மோசடி செய்தல் போன்ற தீமைகளும் ஊடகங்களால் உருவாகும். இவை மட்டுமன்றி போதைப்பொருள் பாவனை சம்மந்தமான பல தகவல்களை அறிந்து அவற்றில் ஈடுபடுகின்றனர்.

ஊடகங்களில் இணைய குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. பெரும்பாலான குழந்தைகள் இணைய மிரட்டலுக்கு உட்படுகின்றனர். மக்கள் ஊடகங்களை அதிகம் பயன் படுத்துவதனால் சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகின்றனர். ஊடகங்களில் இருந்து பெறப்படும் தகவல்களில் உண்மைத் தன்மை குறைவாக இருத்தல் இதனால் பலர் போலியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை நம்பி ஏமாறுகின்றனர். இவை மட்டுமன்றி சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை சமூக வலைத்தளங்களில் FreeFire போன்ற பல விளையாட்டுக்களை விளையாடி அதிக பணத்தை இழந்து மன அழுத்தத்திற்கு உள்ளாகி தற்கொலை செய்கின்றனர்.

இவை மட்டுமல்லாமல் இளைஞர்கள் ஊடகத்தைப் பயன்படுத்தி தீவிரவாத செயலில் ஈடுபடுவதை நாம் செய்திகள் மூலம் அறிகிறோம். கலாசார சீர்கேடுகளை உதாரண மாகக் கூறலாம். மக்கள் ஊடகங்களில் காலம் கழிப்பதால் அருகில் உள்ளவர்களோடு உரையாடுவதையே மறந்து விட்டனர். இன்றைய உலகில் வாழும் மக்கள் தற்போது ஊடகங்களில் காலம் கழிப்பதால் மனித நேயமின்மை, மன அழுத்தம் ,சோர்வு, ஞாபக மறதி, சுயநலம் போன்ற குணங்கள் காணப்படுவதோடு கண் சார்ந்த நோய்கள், உயர் இரத்த அழுத்தம், இதய நரம்பு பாதிப்புகள் போன்றனவும் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஊடகங்களை அதிக நேரம் பயன்படுத்து வதால் ஐம்பது வயதிற்குப் பின் வரும் நோய்கள் பலவும் பத்து அல்லது பதினைந்து வயதுகளிலேயே வந்து விடுகின்றன. **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு"** என்ற பழமொழிக்கு இணங்க வலைத்தளங்களை அளவுடனேயே உபயோகிக்க வேண்டும். உதாரணமாக வலைத்தளங்களை உருவாக்கிய ஐரோப்பிய நாடுகளே வலைதள பாவனைக்கு குறைவான நேரங்களை செலவழிக்கின்றன. ஆனால் நாம் நமது முழு நேர வேலையாக ஊடகங்களையே பாவிக்கின்றோம். இதனை கருத்திற் கொண்டு மாணவர்களாகிய நாம் ஊடகங்களிடமிருந்து எமக்குத் தேவையான நல்ல விடயங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டு ஏனைய விடயங்களை தவிர்த்துக் கொண்டு சமூக விழுமியங்களுக்கு ஏற்றவாறு எம்மை வளப்படுத்துவோம்.

**சி.தர்சிகா**
**தரம்-13**

---

ஒருமுறை வந்தால் அது கனவு.
இரண்டு முறை வந்தால் ஆசை,
பலமுறை வந்தால் லட்சியம்.

ஏபிஜே அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

முயன்று தான் பாரேன்
முடியாதது ஒன்றுமில்லை
ஒரு முறை அல்ல
ஓராயிரம் முறை முயன்று தான் பாரேன்

முயன்றுதானே எடிசன் ஒளியைக்
கண்டான்
முயன்றதால்தானே எடிசனை உலகம்
கண்டது
முயன்றதால் தானே ஆம்ஸ்ரோங்
நிலவைக் கண்டான்
நீயும் முயன்றுதான் பாரேன்
ஒரு முறை அல்ல ஓராயிரம் முறை!

முயலாமையால் முயல் ஆமையிடம்
தோற்றது
முயன்றதால் தானே ஆமை வென்றது
முயற்சி என்பது வெறும்
நான்கெழுத்தன்று
முடிவிலா உலகின் இயக்க சக்தி
ஒன்றது
முயற்சியாளனின் மிகப் பெரும் உந்து
சக்தியானது

முயற்சி திருவினையாக்கும்
முயன்றுதான் பாரேன் முழு உலகமும்
உனை நோக்கும்
உன் வாழ்நாள் முழுக்க இவ்வுலகம்
உனை காக்கும்
இவ்வுலகம் முடியும் வரை அது
உனை இயக்கும்

காலைநேர காலியான பறவையின்
நிரம்பிய வயிறும் முயற்சிதான்
அணுவும் முயற்சிதான் அணு ஆயுதமும்
முயற்சிதான்
மானைக் கொல்லும் புலியின் வேகமும்
முயற்சிதான்
ஓய்வில்லா உன் தந்தையின் உழைப்பும்
முயற்சிதான்
ஏன் உன் பிறப்பும் கூட ஒரு
முயற்சிதான்

வெற்றியை உன் கண் முன்னே
காட்டுவது முயற்சிதான்
தோல்வியை உன் முதுகின் பின்னே
தொலைப்பதும் முயற்சிதான்
உன் நெஞ்சை நிமிர்த்துவதும் உன்
முயற்சிதான்
உன் தலையை நிமிர்த்துவதும் உன்
முயற்சிதான்
முயன்றுதான் பாரேன் ஒருமுறை அல்ல
பல்லாயிரம் முறை!

விதைப்பது எல்லாமே
முளைப்பதுமில்லை
நடுவதெல்லாம் செழிப்பதுமில்லை
பூப்பதெல்லாம் காய்ப்பதுமில்லை
பிறப்பதெல்லாம் மிளிர்வதுமில்லை
ஆனால்,
பிறந்து முயற்சித்ததெல்லாம் மிளிராமல்
விட்டதுமில்லை

உன் வாழ்க்கைக்காய் முயன்றிடு
உன் வாழ்க்கை உயர்ச்சிக்காய் முயன்றிடு
உலகில் உன் வெற்றிக்காய் முயன்றிடு
உலகமே உன்னை சரித்திரமாக்க
முயன்றிடு
முயன்றுதான் பாரேன் முடியாதது
ஒன்றுமில்லை
ஒரு முறை அல்ல பல்லாயிரம் முறை!

செல்வி. வி.கஸ்தூரி
- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

ஒரு நாள் ஒரு சிங்கம் காட்டு வழியாக வந்தது. அச் சிங்கம் ஒரு முயலைக் கண்டது அச் சிங்கத்தின் வாயில் எச்சில் ஊறத் தொடங்கியது. உடனே அம் முயலைக் கொன்று தின்ன நினைத்தது.முயல் சிங்கத்திடம் கெஞ்சியது. "எனக்கு ஒரு சிறிய குட்டி உள்ளது. நான் சென்று எனது குட்டிக்கு பாலூட்டி விட்டு வருகிறேன்" என்றது.

சிங்கத்தின் மனதை அம் முயலின் தாய்ப்பாசம் உருகச் செய்தது. இறுதியில் சிங்கம் அம் முயலைப் போவதற்கு சம்மதித்தது. முயல் சென்று தன் குட்டிக்கு பாலூட்டிவிட்டு வந்தது. நீ சொல்லைக் காப்பாற்றி விட்டாய் அதனால் நான் உன்னைக் கொல்ல மாட்டேன். நீ நேர்மையாக வாழ்வது எனக்கு பிடித்திருக்கிறது. " நீ உனது குட்டியுடன் சென்று மகிழ்ச்சியாக வாழ்" என்றது. ஆனந்தத்தில் துள்ளிக் குதித்த முயல் சிங்கத்திற்கு நன்றி செலுத்திவிட்டு விடை பெற்றுச் சென்று மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

**க. தக்ஷா**
**தரம் - 03**

# Water

**Water has many uses. We need water for drinking and cooking. We cannot live without water .The resources of water are waterfalls,lakes,ponds,rivers,oceans,plants and animals also need water to survive.If there is no water thereis no life.All living beings need water. So lets save water without wasting a drop of it.**

**P.Tharun**
**Grade-04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வின் வழிகாட்டியே

கோணநாதரின் அருள் பெற்ற
திருகோணமலையிலே
பழமை வாய்ந்த குச்சவெளி கிராமத்திலே
எழுபது ஆண்டுகளாய் அறிவொளி
பரப்பிய
ஊர்வாழ் மக்களின் உயர்நம்பிக்கை நம்
பள்ளி

தொடக்க நாளிலே வெறும் குடிசையாய்
குடிசையான போதும் குறைவிலா
கல்வியை
குற்றங்கள் சிறிதுமின்றி அமிர்தமாய்
வழங்கியே
ஊர்போற்றும் கல்விமான்களை
பெற்றெடுத்தது நம்பள்ளி

எழுபதாம் ஆண்டு இன்று
எண்ணிலடங்கா
மாற்றங்கள் கண்டு வியக்கின்றோம்
எழுபதாம் ஆண்டு இன்று
எண்ணிலடங்கா
மாற்றங்கள் கண்டு வியக்கின்றோம்..

முதல் நாளிலே கண்கள் ஈரமாய்
கலங்கியே வந்து சேர்ந்தோம் இன்று
அன்று நாம் உணரவில்லை இது
உயிர்கள் வாழும் சொர்க்கம் என்று..

கல்லாய் வந்து சேர்ந்தோம் அன்று
எம்மை சிற்பமாய் செதுக்கிய சிற்பி நீயே!
தவங்கள் எதுவும் செய்ததாய்
அறியவில்லை
இருந்தும் வரங்கள் பல கொடுத்ததை
மறக்கவில்லை

தேவைகள் பல வந்த போது
தேவைக்கதிகமாய்
அறிவை அள்ளித்தந்த அறிவுக் கடலும்
நீயே!
பாதைகள் மாறிப் போன வேளையிலே
பக்குவப்படுத்தி வழிகாட்டிய தோழனும் நீயே!
பட்டங்கள் பெற பல்கலைக்கழகம்
அனுப்பியே
அழகு பார்த்த அன்னையும் நீயே!
என் வாழ்வின் இருளை நீக்கி
பலர் படிக்கும் நூலாய் மாற்றியதும் நீயே!

குடத்தினுள் விளக்காய் பிரகாசம் இன்றியே
போயிருப்பேன்
நீ எந்தன் வழித்துணையாய் வராமல்
போயிருந்தால்
நன்றிகள் ஆயிரம் சொன்ன போதிலும்
நன்றிக்கடன் இன்னும் தீரவில்லை.

க.இந்துஜா (பழைய மாணவர்)
2020 -2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கமுறை இடைவெளி
# ( Digital Divide )

நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு இந்த 21 ஆம் நூற்றாண்டில் மிகவும் அதிகரித்து காணப்படும் நிலையில். கணனிமயப்படுத்தப்பட்ட தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு கணனி அறிவு மிகவும் அவசியமானதாகும். மேலும் உலகளாவிய தகவல் தொடர்பாடலுக்கு இணைய வசதியின் தேவையும் அதிகரித்துக் காணப்படுகிறது. நாடுகளில் அல்லது சமூகங்களில் தகவல் தொழிநுட்பத்தை பயன்படுத்தக்கூடியவர்கள் மற்றும் பயன்படுத்த முடியாதவர்கள் என்பவர்களுக்கிடையே உள்ள இடைவெளி இலக்கமுறை இடைவெளி என அழைக்கப்படுகின்றது.

இலக்கமுறை இடைவெளி அதிகரித்து காணப்படும் சமூகம் தகவல் தொழிநுட்ப அணுகல் குறைந்த சமுகமாகவும், இலக்கமுறை இடைவெளி குறைந்த சமூகம் தகவல் தொழிநுட்ப அணுகல் கூடிய சமூகமாகவும் கருதப்படுகிறது. உதாரணமாக பாடசாலை ஆசிரியர்களில் Computer,Smart Phone,Internet,Laptop என்பவை பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் அறிந்தவர்கள் குறைவாக காணப்படின் அங்கு இலக்கமுறை இடைவெளி அதிகமாக காணப்படுகிறது எனக் கொள்ளப்படும்.

இலக்கமுறை இடைவெளி பொதுவாகக் காணப்படுவது அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுக்கிடையில், நகர்புரங்களில் உள்ளவர்கள் மற்றும் கிராம புறங்களில் உள்ளவர்களுக்கிடையில், கல்வியறிவு உள்ளவர்கள் மற்றும் கல்வியறிவு அற்றவர்களுக்கிடையில், செயற்றிறன் குறைந்த மற்றும் செயற்றிறன் கூடிய கணனிகளைப் பயன்படுத்துபவர்களுக்கிடையில் ,வேகம் கூடிய இணைய மற்றும் வேகம் குறைந்த இணைய இணைப்பு பயன்படுத்துபவர்களுக்கிடையில் என பல வகையாக வேறுபடுத்தலாம். இணைய வசதியின்மை. மட்டுப்படுத்தப்பட்ட தொழிநுட்பப் பயன்பாடு,குடும்ப பொருளாதார சூழ்நிலை, கல்வி அறிவின்மை என்பன இலக்கமுறை இடைவெளிக்கு காரணமாகிறது. வளரும் நாடுகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்திற்கான (ICT) அணுகல் இன்றியமையாததாகும். ஏனெனில் இது ஒரு நாட்டின் கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு அவசியமானதாகும். COVID -19 தொற்று நோயினால் உலகமே முடங்கியிருந்த வேளையில் கல்வி, வணிகம், மருத்துவம், போக்குவரத்து, அரசியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் (ICT) முக்கியத்துவம் இன்றியமையாததாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்
அ.அகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை

காவி உடை அணிந்து வீரமனம் படைத்த
வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின்
பெயர் கொண்ட எமது பாடசாலை

இது கற்களால் கட்டப்பட்ட புத்தகமன்றோ
பல தலைமுறை கண்ட மகா விருட்சமன்றோ
அந்த விருட்சத்தின் சிறு விதைகள் நாமன்றோ

அறிவுப் பசி தீர்த்து
அவனியில் நாம் வலம் வர
ஆண்டவன் தந்த பரிசன்றோ எமது பாடசாலை

நம்மை வழிநடத்த அன்பான ஆசிரியர்கள் எமக்குண்டு
அவர்கள் விளையாடிய இடமும் இங்குண்டு
நம் பெற்றோர்களைப் போன்ற ஆசிரியர்களும் உண்டு

பல சாதனைகளைப் படைத்த
மாணவர்களைப் பெற்றெடுத்த நம் பாடசாலை
நம் தாய்க்கு நிகரானதன்றோ

வாயார போற்றும் புகழ்ச்சியும்
எண்ணில்லா சாதனைகளையும் படைத்து
அவனியில் சிறப்படைய வாழ்த்துகிறோம்.

த.தவசீலனி
தரம் -10

---

நம் அனைவருக்கும் ஒரே திறமை இல்லாமல்
இருக்கலாம். ஆனால் திறமையை வளர்த்துக்
கொள்ள அனைவருக்கும் ஒரே மாதிரியான
வாய்ப்புகள் உள்ளன..!

ஏபிஜே அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீதும் நன்றும் பிறர்தர வாரா

இதிகாசங்கள் மனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய விடயங்கள் பலவற்றை காட்சியாக எமக்கு தருகின்றன. அவ்வகையில் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் சிறந்த அறக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் விதத்தில் அமையப் பெற்றுள்ளன. இவை எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன. அவ் வகையில் நாம் புரிகின்ற ஒவ்வொரு செயல்களுக்கும் பிரதிபலன் நிச்சயமாக இருக்கும். இவை நாம் அறிந்து செய்த செயலாக இருக்கலாம். ஒவ்வொரு செயல்களுக்குமாக நாம் அனுபவித்தே ஆக வேண்டும் என்பது இயற்கை. அந்த வகையில் இராமாணயத்தில் இடம்பெறும் தசரதன் பெற்ற சாபத்தை எடுத்துக் கொள்வோமாயின். அயோத்தி மன்னனான தசரதன் எல்லா வேதங்களையும். சாஸ்திரங்களையும் கற்று அறிந்த தீர்க்கதரிசி. அவர் ஓசை வரும் திசையை நோக்கி அம்பு எய்து வீழ்த்தும் கலையைக் கற்றிருந்தார். ஒருநாள் தசரதன் இளைய வயதாக இருக்கும் போது காட்டில் வேட்டையாடுவதற்காக சென்றிருந்தார் அப்பொழுது “சிரவன குமாரன்” என்பவன் தன் கண் பார்வையற்ற தாய் தந்தையர்களை காவடி எடுத்துச் செல்வது போல் இரு பக்கமும் தராசில் சுமந்து சென்றான். அச் சமயத்தில் அவனுடைய பெற்றோருக்கு தண்ணீர் தாகம் வர குடிநீர் கொண்டு வருமாறு கூறினார். அவர்களை இறக்கி வைத்து விட்டு அவன் குளக்கரைக்குச் சென்று ஒரு பெட்டகத்தில் நீர் எடுக்கும் போது நுண்ணிய செவியுணர்வு கொண்ட தசரதன் ஒரு மான் நீர் அருந்த வந்திருக்கும் என்று நினைத்து அந்த திசையை நோக்கி அம்பு எய்து விட்டு சென்று பார்த்தான்.

ஆனால். அங்கு வீழ்ந்து கிடந்தது மான் அல்ல. ஒரு சிறுவன் என்பதை கண்டு அதிர்ச்சியுற்று அவனைக் காப்பாற்ற முடியாது ஆகவே தாகத்திலிருக்கும் தன் பெற்றோருக்கு இக் குடிநீரைக் கொடுங்கள் என்று வேண்டினான். நீர்ப் பெட்டகத்தை எடுத்துக் கொண்டு அப் பெற்றோரிடம் கொடுத்த தசரதன் நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி அவர்களிடம் கூறினான் அளவில்லாத வேதனையுற்ற சிரவன குமாரனின் பெற்றோர் தசரதனுக்கு. ‘நாங்கள் எவ்வாறு புத்திரனை இழந்து வேதனை அடைந்தோமோ அதே போல நீயும் புத்திர சோகத்தால் எங்கள் நிலையடைவாய்’. என சாபமிட்டனர். இச் சம்பவத்தின் காரணமாகவே இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல தசரதன் இராமனிடம் இருந்து பிரிந்து சோகத்தில் வாழ வேண்டியதாயிற்று.

தன் வாழ்வில் எவ்வளவோ நன்மைகள் செய்த தசரதன் தெரியாமல் செய்த தவறுக்காகப் பெற்ற சாபம் பலித்தது என இராமயணம் கூறுகிறது. அதே போல இப் பூவுலகில் மனிதர்களாகிய நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பிரதிபலன் நிச்சயம் இருக்கும் என்பதை ஒரு முறைக்கு ஆயிரம் முறைகள் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஒருவருக்கு கெடுதல் செய்தால் அது பாவ கணக்கில் வைக்கப்பட்டு பின்னர் துன்பமாக அனுபவிப்பர். நன்மை செய்தால் புண்ணியக் கணக்கில் வைக்கப்பட்டு பின்னர் இன்பமாக அனுபவிப்பர்.

“ காரணமின்றி காரியமில்லை”

வ. யதுர்சினி
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் ஆசான்கள்

நினைவலைகள் நீட்சி பெற
யான் பெற்ற கல்வி கொடுத்த
எம் ஆசிரியப் பெருமக்களை நினைத்து
நாமும் ஆசானாய் நிற்கின்றோம்.
இத் தரணிதனில்

கடமையை கண்ணாய் கொண்டு
கண்டிப்பு பிரம்மாயுதம் தொடுத்து
எழுத்தறிவித்து. எண்ணறிவித்து
யாம் எண்ணிய திசையறிந்து
கருத்தாய் கைபிடித்து களர் நில
வாய்க்காலில் வளர் நில அறிவுபாய்ச்சி
வாழ்வை செதுக்கி வைத்த நம் ஆசான்கள்

பெற்ற மழலையை அன்போடு
வளர்ப்பது தாய் என்றால்
தான் பெறாத மழலைகளை நற்பண்புகளோடு
இவ்வுலகிற்குள் நுழைய வைத்த நம் ஆசான்கள்

நினைவலைகள் நீட்சி பெறுகிறது
யான்பெற்ற கல்வி கொடுத்த
எம் ஆசிரிய பெருமக்களை நினைத்து
நாமும் ஆசானாய் நிற்கின்றோம்
இத்தரணிதனில்

நன்றி மறப்பது நன்றன்று
நன்றி என்பது வார்த்தை ஜாலத்தால் அல்ல
அடுத்த பரம்பரைக்கு நம் செய்கையால் தான்

செல்வி. அஸ்வினி இராமச்சந்திரன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்

வளர்ந்து வரும் சமூகமொன்றிலோ ஒரு நாட்டிலோ எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடியவர்கள் சிறுவர்கள். இதனையே "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற கூற்று விளக்குகின்றது. சிறுவர்கள் உடல்,உள ரீதியாக வன்முறை அற்ற நிறைவான வாழ்வை வாழ்ந்தாலே அவர்களுடைய எதிர் காலம் உறுதியானதாக மாறும். ஆகவே இவர்களைப் பாதுகாப்பது, மற்றும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பது ஒவ்வொருவரது கடமையாகும். அதனை எவ்வாறு செயற்படுத்தலாம் என நோக்குவோம்.

சிறுவர் உரிமை என்பது சிறுவர்களுக்கு சிறப்பான வாழ்ககையை கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட நிபந்தனைகளாகும். ஐக்கிய நாடுகள் சபையினால் 1989 ம் ஆண்டு சிறுவரகள் உரிமை தொடர்பான கருத்துக்களை நடைமுறைப்படுத்தியது. அதன்படி ஒவ்வொரு வருடமும் அக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. 18 வயதிற்குற்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியராகக் கணிக்கப்படுவர். அவர்களுக்கான அடிப்படை உரிமைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

வயது,பால்,இனம்,மதம்,மொழி, போன்றவற்றால் பாகுபாடு காட்டாது இருத்தல் வேண்டும். எடுக்கப்படும் சகல முடிவுகளும் அவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். சிறுவர்களின் பரிணாம வளர்ச்சிக்கேற்ப அவர்களுக்கு வழிக்காட்டுவதற்கு சிறந்த பெற்றோர்கள் இருக்க வேண்டும்.

அது மட்டுமல்லாது பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பெயரைப் பெறுவதற்கும் தன் பெற்றார் இன்னார் என அறிவதற்கும், உயிர் வாழ்வதற்கும், தனித்துவ அடையாளத்தைப் பேணுவதற்கும், கருத்துக்களை தெரிவிப்பதற்கும் உரிமை உண்டு. அத்துடன் வளமான வாழ்விற்குத் தேவையான கல்வியைப் பெறுவதற்கும், பாதுகாப்பாக வாழ்வதற்கும் உரிமை உள்ளது. இத்தகைய அடிப்படை உரிமைகள் சிறுவர்களுக்கு கிடைக்காதவிடத்து அவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர் கொள்கின்றனர்.

அவையாவன உடல் ரீதியான துஸ்பிரயோகம், உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற அடிப்படை உரிமைகள் கிடைக்காது போதல்.இவ்வாறான செயற்பாடுகளால் அச்சிறுவர்கள் கல்வியில் தெளிவின்மை, போதைவஸ்து பிரச்சனை, கோபம் மற்றும் வெறுப்பு, தாழ்வு மனப்பான்மை, ஏமாறுதல், தற்கொலை முயற்சிகள், கொலை, களவு, பொய் கூறுதல், சூது போன்ற தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே இவ்வாறான செயற்பாடுகள் சிறுவர்களுக்கு ஏற்படாமல் இருப்பதற்கு பல்வேறுத் திட்டங்கள் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. "Unicef ,Save the Children,Global Children,Children international" போன்ற நிறுவனங்கள் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றன. அத்துடன் இலங்கையில் சிறுவர்களுக்காக விழிப்புணர்வூ ட்டும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவையாவன,சிறுவர் துன்புறுத்தல்களுக்கு எதிரான தினத்தைக் கொண்டாடுதல். சிறுவர் ஊழியத்திற்கு எதிரான சர்வதேச தினத்தைக் கொண்டாடுதல்.வெகுசன ஊடகங்களூடாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல். பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டிகள். நடமாடும் சேவைகள். தொலைபேசி சேவை போன்ற பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே ஒரு மரத்தின் அடிபாகம் எவ்வளவு உறுதித்தன்மை வாய்ந்ததாக இருக்குமோ அதனைக் கொண்டு மரத்தின் மேற்பாகம் வளமுடையதாக அமையும். அதேபோல் நாட்டின் சக்தி வாய்ந்த சிறுவர்களை நிலைத்திருக்க கூடியவாறு பேணிப் பாதுகாத்து வளர்ப்போமாயின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கலாம். ஆகவே. அவர்களது உரிமைகளைப் பாதுகாத்து நல்ல வண்ணம் வாழ்வதற்கு அனைவரும் பொறுப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும்.

A.அனுஷ்கா
தரம் -07

---

# Value Of Newspapers

News papers are an important printed source of information which is useful to us. Editors gather information from television ,telephone,radio and internet. Newspapers update nwes on a daily basis. There are many daily and weekly news papers in sri lanka. My favorite news paper is the sunday observer. I read it regularly.i have improbved my reading, writing and speaking skills a lot by reading it. Likewise,all the other news papers help us.

News papers have many advantages. They give us information about daily occurences both nationally and indernationally. We get to know information about all countries. They are many articles, competitions for children, discussions, advertisements, related to employment and obituary, notices etc.

News papers improve the knowledge of readers.it also protects the nation from being attacked by giving information about the country and its ability.it can lead people on the right path.children and young learners can get to know about inventions,research and it is useful for school lessons.News papers are useful from of the print media.

P.Anuska
Grade -06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொல் இரண்டு வார்த்தை

வருவதும் போவதும்
இன்பம் - துன்பம்
வந்தால் போகாது
புகழ் - பழி
போனால் வராது
மானம் - உயிர்
தானாக வருவது
இளமை - முதுமை
நம்முடன் வருவது
பாவம் - புண்ணியம்
அடக்க முடியாதது
ஆசை - துக்கம்
தவிர்க்க முடியாதது
பசி - தாகம்
நம்மை பிரிக்க முடியாதது
பந்தம் - பாசம்
எல்லோருக்கும் பொதுவானது
பிறப்பும் - இறப்பும்

S.சத்ஜவேனி
தரம்-04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகள்























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் கலை நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# From my heart..

The sunrises, the chorus starts
Of a pleasant day
The purified breeze of margosa
Peeps through the shutters
And takes me back... to those days

Still I remember the day I stepped
into Vivekananda...
With no hope,no happiness,no clue
I thought this will be forever...
Years simply flew,one step that I
Can start a whole journey.

As I look back through my memories
Of the school.. now !
Iam looking at those happy years
I had in this village
With loving kids who had loads of
expectations...

Suddenly, I became alive somebody
Found me useful
Shelter I gave silently now,sing I
With a croud
Sweet the company it may
Live long...

**Mrs.R.G. JeyaKumar**
**Teacher of English**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வுக்களமாக அமைவது பாடசாலைகளே!

பிள்ளைகளுடைய ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதற்கான முதற்களம் பாடசாலைகளாகும். வளர்ந்து வரும் நாகரிக மோகங்களினால் சிறார்களின் கவனம் சிதறடிக்கப் படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதில் பாடசாலைகளின் பங்கு மிக மிகப் பெரியதாகும். இதன் காரணமாகவேதான் கல்வி அமைச்சினால் (சுற்றுநிருப இல-2001/16) இலங்கையின் சகல பாடசாலைகளிலும் ஆலோசனை சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு செயலாக்கம் பெற்று வருகின்றது. உடல், உள. ரீதியான பிரச்சனை களுக்கு முகம் கொடுக்கும் பாடசாலை சிறார்களின் கல்விக் குறிக்கோள் களை எட்டுவதற்கு தடைக் கற்களாக இருக்கும் காரணிகளை இனங்கண்டு அவர்களை அவற்றிலிருந்து விடுவித்து கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

பாடசாலை ஒரு முன்மாதிரி சமூகமென்பது சமூகவியலாளர் ஒட்டாவே அவர்களின் கருத்தாகும். சமூகத்தில் இளைய சமுதாயத்தின் முன் தோன்றும் பிரச்சனைகள் ! சவால்களை எல்லாம் எதிர் கொள்ள அவர்களை தயார் படுத்துவது என்பது பாடசாலைகளின் தலையாய பணியாகும். ஆயினும் அந்த குறிக்கோள்களை எட்டுவதற்கு பாடசாலைச் சமுகம் பாரிய சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. சமூகத்தில் பலதரப்பட்ட பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கும் நிலையிலேயே மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருகின்றனர். அங்கே பாடப்பரப்பின் அதிகரித்த தன்மை காரணமாக மாணவர்கள் மிகவும் அவதியுறும் நிலை காணப்படுகிறது. இந்நிலையிலிருந்து இடைவிலகும் நிலையே காணப்படுகிறது. பாடசாலைகளிலிருந்து மாணவ சமூக மொன்று வெளியேறிச் செல்லும் போது அங்கே அவர்கள் கௌரவமான முன்மாதிரி யான சமூகமொன்றின் அங்கத்தவர்களாக காணப்படும் நிலையை பாடசாலைகள் உருவாக்குமேயானால் அதுதான் குறித்த பாடசாலைகளின் இறுதி இலக்காக இருக்க முடியும். மாறாக இன்றைய காலக்கட்டத்தில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளை விடுத்து வேறு பல பிரச்சனைகளை யெல்லாம் பாடசாலைக்கு கொண்டு வருவது மட்டுமல்லாமல் கல்வி நடவடிக் கைகளிலிருந்தும் விலகிச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இந்தப் பாதகமான செயற்பாடுகள் எவையும் ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப போவதில்லை.

மாணவர் சமூகத்தின் நிலை இவ்வாறு இருக்க ஆசிரிய சமூகம் தற்போதைய கல்விச் சீர்திருத்தங்களினால் பாரிய வேலைப் பழுவிற்கு உள்ளாகி உடல். உள ரீதியில் சோர்வடையும் தன்மை காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர் மாணவர்களுக் கிடையிலான உறவில் விரிசல்கள் ஏற்படக் காரணமாகின்றன. இதன் விளைவு கல்வியின் இலக்கு சரிவர எட்டாமலே இளைய சமூகமொன்று பாடசாலையிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு வழிவகுப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இவ்வாறான நிலைமையானது கல்விச் சமூகத்திற்கும் பாடசாலையின் குறிக்கோள் களுக்கும் மாசு கற்பிப்பதாகவே அமையும் எனலாம். நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள், வன்முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் வழிவகுத்தது இளைய சமூகமானது பாடசாலைகளில் இருந்து சரியான கல்வி அறிவினைப் பெற்று வெளியேறியிருக்க வில்லையென்றே கருத வேண்டியுள்ளது. எனவே ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் உடல,உள ரீதியான பிரச்சனைகளை இனங்காண்பதோடு ஆசிரிய வாண்மை விருத்தியை மேம்படுத்துவதன் மூலமும் மாணவர் சமூகத்தின் உடல், உள ரீதியான பிரச்சனைகளை இனங்கண்டு உரிய தீர்வுகளை எட்ட முயற்சிக்க வேண்டும். ஆசிரிய மாணவர்களிடையே நல்லதொரு உறவினைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஆரோக்கியமான சமூகமொன்றை உருவாக்க முடியும்.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பாடசாலை களுக்குமிடையேயான செயற்பாடுகளில் பாரிய வேறுபாடு உண்டு என்பதை சமூகம் நன்கு புரிந்துக் கொள்ளவில்லை. பாடசாலை முறை சார்ந்த அமைப்பு அதன் கட்டமைப்பு வலுவானது சமூகத்தின் தவறான விளக்கத்தால் பாடசாலைகளின் கட்டமைப்பு நலிவடைந்த போதிலும் மாணவ ஆளுமை வளர்ச்சியில் பாடசாலையின் செல்வாக்கு இன்னமும் வலுவிழக்கவில்லை. நவீன முறைகளுக்கு ஏற்ப பாடசாலைகளின் புத்துயிரூட்டும் செயற்பாடுகள் அதிகரிக்கப் பட்டுள்ளன. வகுப்பறைச் சூழல் கற்பித்தல் நடைமுறைகள். மாணவர் மதிப்பீடுகள். இணைப்பாட விதான கருமங்கள் இவற்றில் பல்வேறு நவீன அம்சங்கள் புகுத்தப் பட்டுள்ளன. ஆசிரிய வாண்மை விருத்திக்கான ஆழ்ந்த வலிய செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. இவை அனைத்தும் பாடசாலைகளை உயிர்ப்பிக்கும் மீட்பு பணிகளாகும். பாடசாலை என்ற விருட்சம் சமூகம் என்ற தளத்திலே வேர்விட்டு விழுதெறிந்து கிளைகள் பரப்பி நிமிர்ந்து நிற்க வேண்டும். ஆயினும் முழுச்சமுகமே பாடசாலை என்ற கல்வி விருட்சத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் நிலையும் போதும் என்று கூறும் அளவிற்கு இன்னமும் எட்டிவிடவில்லை என்றே கருத இடமுண்டு. உலகின் வேகமான வளர்ச்சிப் போக்கினால் மனித சமூகம் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் வழிக்காட்டல் ஆலோசனைச் சேவை நன்கு திட்டமிப்பட்டு பாடசாலைகளில் செயற்படுத்தப்படவேண்டும்.

உடல், உள வளமுள்ள நல்ல ஆரோக்கியமான சமூகத்தை தோற்றுவித்து சமூகத்திற்கு வழங்கும் களமாக பாடசாலை என்ற நிறுவன விருட்சம் கட்டியெழுப்ப படவேண்டும். இதுவே எதிர்கால சந்ததிக்கு நாம் எல்லோரும் முழு மனதுடனும், அர்ப்பணிப்புடனும், அசையாத நம்பிக்கையுடனும் செயலாற்றி மாணவ சமூகத்தின் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வுகளை வழங்கும் களமாக பாடசாலைகளே சிறந்து விளங்குகின்றன என்ற நம்பிக்கையை வலுப்படுத்தி செயலாற்றுவோமாக!

பி.யோகராணி
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்போம்

அறிவை புகட்டி எம்மை வழிநடத்தும் ஆசான்களே !
நல்ல அறிவுகள் எமக்கு சொல்லித் தரும் ஆசான்களே !

சின்னச் சின்ன நூல்களாய் எமக்கு தேடித்தரும் ஆசான்களே !
தேடி வரும் தீமைகளை விரட்டும் ஆசான்களே !

மூடனாய் நாம் செய்யும் பிழைகளை
திருத்தி சரி செய்யும் எங்கள் அன்பு ஆசான்களே !

எம் மனது வலிக்கும் போது
எமக்கு அன்பாய் ஆறுதல் கூறும் ஆசான்களே !

சரியான வழியினூடாக செல்ல வைத்து
எம்மை உயர வைக்கும் ஆசான்களே !

பல பிழைகள் செய்த எம்மை
திருத்தி வாழ வழி செய்த எம் ஆசான்களே !

ஊக்கமுடன் கல்வி கற்றுக் கொடுத்து
எமக்கு ஆர்வம் கொடுத்த ஆசான்களே !

நல்ல நண்பர்களாய் பழகி எம்முடன்
நட்பாய் இருந்த எங்கள் ஆசான்களே !

உம்மை வாழ்த்த எமக்கு வார்த்தை இல்லை
நீர் பல்லாண்டு காலம் வாழ்வீராக !

சா. தமிழினி
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பயன்

தேன் பொங்கும் பூஞ்சோலை போல செழித்து பசுமையான கிளைகளை பரப்பி வானைத் தொடும் அளவிற்கு வளர்ந்து சாலையில் நடக்கும் வேளை தன்னில் இருபுறமும் மலர் சொரிந்து நம் பயணத்தை ஆசீர்வதிக்கும் மரங்களும் வழி நெடுங்கிலும் பார்ப்பவரின் கண்களை கொள்ளை கொள்ளச் செய்யும் அளவிற்கு பச்சைப் பசேலென சமுத்திரம் போல பரந்து விரிந்து காணப்படும் வயல் நிலங்களும் என செழித்து இயற்கையுடன் இயைந்து காணப்படும் ஓர் எழில் மிகு கிராமம் அது.

இவ் இயற்கை எழில் கொஞ்சும் இக்கிராமத்தில் பூமிநாதன் என்பவரும் அவரது மனைவி அமுதாவும் விவசாயம் செய்து வந்தனர். அவர்களுக்கு ஜகதீஸ், தேவா என இரண்டு மகன்கள் இருந்தனர். ஜகதீஸ் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி படிப்பில் ஆர்வம் உள்ளவனாகவும், வகுப்பில் முதல் மாணவனாகவும் காணப்பட்டான். ஆனால் தேவா ஜகதீஸிற்கு எதிர்மாறாக இருந்தான். அதாவது கல்வியில் சிறிதும் நாட்டமில்லாமல் இருந்தான். பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகி பெற்றோர் சொல் கேளாமல் ஊர் சுற்றித்திரிவதும் விளையாடுவது மாகவே இருந்தான்.

பூமிநாதனுக்கு பெரிதாக கல்வியறிவு இல்லாமையினாலும், பணம் இல்லாமை யினாலும் அவர்களது உறவினர்கள் கூட அவர்களை ஒதுக்கியே வைத்தனர். இதனால் ஒருவரின் உதவியும் இன்றி பூமிநாதனும் அமுதாவும் விவசாயம் செய்து குடும்பத்தை நடத்திச் சென்றனர். பருவங்கள் மாறின, வருடங்கள் உருண்டோடின. ஜெகதீஸ் கல்லூரி சென்று கொண்டிருந்தான். தேவா வழக்கம் போல் ஊர் சுற்றித் திரிந்தான். அவர்களின் தாய் அமுதாவோ நோயால் பீடிக்கப்பட்டு மரணித்தாள். அமுதா இறந்த வருத்தமும், பூமிநாதனுடைய வயதும் அவரின் உடலை வருத்தியது. இதனால் பூமிநாதன் மகன்கள் இருவ ரையும் தனது நிலத்தில் வேலைபார்ப்பதற்காக அழைத்தார்.

ஆனால் ஜெகதீஸ் படிப்பில் ஆர்வ முள்ளதால் நான் படித்து முடிப்பதற்கு சில காலம் தான் இருக்கிறது. என் கல்விக்கான செலவை ஈடு செய்ய பணம் இல்லை. புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான அன்பளிப் பாக வழங்கப்படும் உதவி தான் உள்ளது. படிப்பை முடித்து விட்டால் அதன் பிறகு நம் வறுமை நிலை மாறும்.எனக்கு சில காலம் மட்டும் அவகாசம் தருமாறு கேட்டான்.

ஆனால் மறுபக்கம் தேவா எனக்கு விவசாயத்திலோ படிப்பிலோ நாட்டம் இல்லை நான் தனியாக வியாபாரம் செய்து பணம் சம்பாதித்து செல்வந்தனாகப் போகிறேன். அவன் படிப்பு படிப்பு என்றே சாகட்டும் என பூமிநாதனிடம் பிடிவாதம் செய்தான். பூமிநாதன் தனது பரம்பரை வயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தை விற்றுப் பணத்தை இரு மகன்களுக்கும் சமமாகப் பகிர்ந்த ளித்தார். அப் பணத்தைக் கொண்டு ஜெகதீஸ் மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்றான். கல்வியறிவு பெரிதாக இல்லாமையால் தேவாவை பலரும் ஏமாற்றினாரகள். இரு தோணியில் கால் வைப்பது போன்று தேவா வியாபாரம் மற்றும் பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்தான்.

நாட்கள் மெல்ல நகர்ந்தன, இரண்டி லும் நட்டமடைந்து நடுத்தெருவி லிருந்தான். ஜெகதீஸ் வெளிநாட்டி லிருந்து காரில் வந்து இறங்கினான். மகிழ்வடைந்த பூமிநாதன் ஜெகதீஸை கட்டித்தழுவிக் கொண்டான். ஜெகதீஸ் தன் சொந்த ஊரிலேயே தனியார் வைத்தியசாலை அமைத்து இலவச மாகவும் குறைந்த செலவிலும் மருத்துவம் பார்த்து புகழுடன் வாழ்ந்தான். சகோதரன் தேவாவால் பறிபோன அவர்களது பரம்பரை வயல் நிலத்தையும் ஜெகதீஸ் மீட்டு தந்தையையும் நன்றாக கவனித்து வந்தான் நாட்கள் செல்ல பூமிநாத னும் இறைவனடி சேர்ந்தார். பூமிநாதன் விவசாயம் செய்து வந்த அதே நிலத்தில் ஜெகதீஸ் தந்தைக்காக கல்லறை கட்டினான். தேவா தன் சிறுவயதில் செய்த தவறை உணர்ந்து தந்தையின் பரம்பரை நிலத்தில் விவசாயம் செய்து வந்தான்.

தன்னுடன் படித்தவர்கள் உயர் பதவியிலும் நல்ல இடங்களிலும் இருப்பதைக் கண்டு வெட்கி தலை குனிந் தான். இவ்வாறு படித்த ஜெகதீஸனின் நிலையையும் படிக்காத தேவாவின் நிலையையும் கருத்திற்கொண்டு நாமும் படித்து முன்னேறுவோம்.

"உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றுங் கற்றார் கடையரே கல்லா தவர் "எனவே நாமும் எந்த கஸ்டம் வந்தாலும் கல்வியை தவறவிடக் கூடாது. நாம் கற்கும் கல்வி ஏழேழு தலைமுறைக் கும் எமக்கு உறுதுணையாக அமையும் இதனை, "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப் புடைத்து" என்கிறார் திருவள்ளுவர்.

ஜெ.விதுசாலினி
தரம் - 07

---

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடத்தின் சிறப்பு

காலை சோம்பலினை முறித்து.
குயிலின் ஓசையில் கண் விழித்து.
தன் சுத்தம் பிறர் சுத்தம் பேணி.
என் முதல் பாதம் படும் இடமோ!
என் பள்ளிக்கூடம்.

தரையில் விழுந்த கை. கால்
உதைத்து அழுது புலம்பி.
கண்ணீர் ததும்ப..!
அம்மாவின் முந்தானையை பிடித்துக் கொண்டு

போக விரும்பாமல் அடம் பிடித்ததும்.
பிரித்து அழைத்துச் சென்று
அமர வைத்த இடமோ
பள்ளியின் வகுப்பறையே!

அறிவுச் சுரங்கம் அகழ்ந்தெடுக்க
ஆசிரியர் குழாம் துணையிருக்க.
இனிதே நண்பர்கள் சூழ்ந்திருக்க.
இங்கு கற்றல் இனித்திருக்கும்.
அதுவே நம் பள்ளிக்கூடம்.

சி.பிரவீனா
தரம்-07

---

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும்.
சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reading is fun

There is saying, " Reading make a full man". Reading is a good habit that will make us wise. The national literacy month is celebrated in December. literary festivals are organised islandwide during this month.it is good to visit libraries and book exhibitions too.Reading is very important for students It helps to improve our language and vocabulary. We gain knowledge about the world around us. There are many kinds of books such us novels,short stories,fairy tales and adventure stories.Reading helps us to relax and it is good for our health.

I have read books on comics,novels and general knowledge. I have learnt about nature,inventions and space. I enjoy reading fiction. Differnt characters and imaginary places are amazing. James and the Giant peach,Madol duwa and Amba yahluwo are some of my favourite books. I like to read them again and again. Reading is an everlasting past time. The type of books we selected depends on our attitud and personality.

I find a quiet place at home toread, Where I find a comfortable chair and curl up without any disturbance. I borrow books from the school library. I also visit book exhibitions and book shops to add books to my collection. I set a fixed time everyday to read because reading is fun.

**J.Venuka**
**Grade-08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்றமின்களின் பயன்களும் அவற்றின் குறைப்பாட்டு அறிகுறிகளும்

| விற்றமின் | பயன்கள் நன்மைகள் | குறைபாட்டு அறிகுறிகள் |
|---|---|---|
| விற்றமின் A | ▪ பார்வைக்கு அவசியம்<br>▪ பார்வைக்குரிய நிறப் பொருள்களை உருவாக்க<br>▪ தோலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு. | ▪ மாலைக்கண்<br>▪ பீட்டோ (Bito) புள்ளிகள் தோன்றுதல்.<br>▪ தோல் உலர்ந்து காணப்படுதல்<br>▪ முழங்கால், முழங்கை ஆகிய இடங்களில் முள் போன்ற கொப்பளங்கள் தோன்றல். |
| விற்றமின் B | ▪ நரம்பிழையங்களின் பேணுகைக்கு<br>▪ தோலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு<br>▪ கொழுப்பு அனுசேபத்திற்கு<br>▪ செவ்வென்பு மச்சை உருவாக்குவதற்கு<br>▪ வெண்குழியங்களின் முதிர்ச்சிக்கு. | ▪ பெரிபெரி நோய்<br>▪ குருதிச்சோகை<br>▪ உலர்ந்த தோல்<br>▪ நிறமாற்றம்<br>▪ பிறபொருளெதிரிகள் உற்பத்தி குறைவடைதல் |
| விற்றமின் C | ▪ தோலின் ஆரோக்கியத்திற்கு<br>▪ பல்லில் பல்மிளரி (எனாமைல்) உருவாக்கத்திற்கு.<br>▪ கொலோஜன் நார்களின் தொகுப்பிற்கு அவசியம். | ▪ முரசு கரைதல்<br>▪ ஸ்கேவிநோய்<br>▪ உள்ளகுருதி பெருக்கு ஏற்படுதல்<br>▪ நோய்கள் குணமடைவது தாமதமடைதல். |
| விற்றமின் D | ▪ கல்சியம், பொசுபரசு அகத்துறிஞ்சுதலை கட்டுப்பபத்தும். | ▪ சிறுவர்களில் என்புருக்கி முதியவர்களில் ஒஸ்ரியோ. மலேரியா<br>▪ பற்சூத்தை . ஒஸ்ரியோபோரோசிஸ் |
| விற்றமின் K | ▪ குருதி உறைதலுக்கு தேவையான கூறுகளுக்கு | ▪ குருதி உறைதல் தாமதம். |

ரா. வவித்திரன்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் துளிகள்

## கல்வியின் சிறப்பு

கல்வி எனும் படகில்
நீந்த முடியும்
அக்கல்வி எனும் படகை சரியாக
ஓட்டவில்லை என்றால்
கவிழ்த்தி விடும்
கல்வி எனும் படகை
சரியாக ஓட்டினால் நாம்
எங்கு செல்ல விரும்புகின்றோமோ
அங்கு கொண்டு சேர்க்கும்

கி.ஷாகித்தியா
தரம் - 9

## ஆசிரியர் கவிதை

உன்னால் முடியாது என்று
என் பின்னால் நின்று
ஆயிரம் பேர்
சொன்னார்கள்..
ஆனால் உன்னால்
முடியும் என்று
என் முன்னால் நின்று சொன்னவர்
என் ஆசிரியர்
ஆற்றலையும் அறிவையும்
தந்த அன்பார்ந்த ஆசிரியர்

சு.புகழ்
தரம் -06

## " கல்வி கவிதை "

உழவனிடம் கற்பது
விவசாயக் கல்வி !
பெற்றோரிடம் கற்பது
வாழ்க்கைக் கல்வி !
தோல்விகள் தருவது
அனுபவக் கல்வி !
வெற்றிகள் தருவது
தன்னம்பிக்கை கல்வி !
வான் மழை தருவது
இயற்கைக் கல்வி !
மூடநம்பிக்கை களைவது
பகுத்தறிவுக் கல்வி !

ட.. டக்சினா
தரம் -04

## என் அம்மா

ஆயிரம் கஷ்டங்கள் வந்தாலும்
என்னை கலங்க விட்டதில்லை அம்மா..
பசியென்று கேட்கும் முன்
பசியாற்றுவாய் அம்மா..
சோகத்தில் துவளும் போது
என்னைத் தட்டித் தேற்றுவாய் அம்மா..
என்றும் உன் சோகத்தை நீ
என் முன் காட்டியதில்லை அம்மா..
என்னை பத்து மாதம் மட்டும் நீ வயிற்றில்
சுமந்ததில்லை
எந்நேரமும் சுமந்து கொண்டிருக்கிறாய்
என் ஆயுள் முழுதும் உன்னை
என் கண்ணைப் போல் காப்பேன் அம்மா..

ரா.ஜதுசன்
தரம் -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரடியும் கறுப்பையாவும்

ஒரு ஊரில் மங்களம் எனும் நபர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் கறுப்பாகவும். உயரமாகவும். குண்டாகவும் இருந்தார். இவர் மிகவும் கறுப்பாக காணப்பட்டதால் ஊரில் இவரை எல்லோரும் கறுப்பையா என்று செல்லமாக அழைத்தனர். அந்த ஊரில் வாழும் மக்கள் விவசாயம் தான் சோறு போடும் என்பதை கருத்திற் கொண்டு தங்களின் வாழ்நாள் தொழிலாக விவசாயத்தை மேற்கொண்டு வந்தார்கள். நெல்லை விதைப்பதிலிருந்து அறுவடை செய்யும் வரை அவ்வூர் விவசாயிகள் வயல் பகுதிகளில் குடில் அமைத்து காவல் காத்து வந்தனர்.அவர்களோடு இணைந்து கறுப்பையாவும் காவல் காத்து விவசாயத்திலும் ஈடுபட்டு வந்தான். சிலர் பகல் வேளைகளில் காவல் காத்து வருவார்கள். மற்றயவர்கள் இரவு நேரங்களில் காவல் காத்து வருவார்கள்.

திடீரென்று ஒருநாள் இரவு ஒன்பது மணியளவில் மழை சோ வென பொழியத் தொடங்கியது. அந்த நேரம் பார்த்து வயலுக்குப் பக்கத்தில் உள்ள புற்றில் கறையானைப் பிடித்து உண்பதற்காக கரடி ஒன்று வந்தது. அக்கரடி கறுப்பாகவும். குண்டாகவும். கட்டையாகவும் காணப்பட்டது. மழை பொழிகிறது என்பதால் குளிரும் என கறுப்பையாவும் ஒரு பெரிய கறுப்பு நிற போர்வையைப் போர்த்திக் கொண்டு குடிலில் அவர்களது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.சிறிது நேரம் கழித்து கறுப்பையாவுக்கு வெளியில் ஏதோ சத்தம் கேட்டது. என்ன சத்தம் என்று பார்ப்பதற்காக கறுப்பையா குடிலை விட்டு வெளியே வந்தார்.

அதே வேளை கரடியும் கறையான் புற்றில் உள்ள கறையானை சாப்பிட்டு விட்டு கறுப்பையா குடில் பக்கமாகச் சென்றது. இருவரும் நேருக்கு நேர் மோதிக் கொண்டனர். கரடி கறுப்பையாவைப் பார்க்க. கறுப்பையா கரடியைப் பார்க்க. கறுப்பையா கரடியைப் பக்கத்தில் பார்த்த பயத்தில் பெரிய சத்தமாக அலறிக் கத்த. கரடி கறுப்பையாவின் தோற்றத்தைக் கண்டு ஐயோ! அம்மா என்னை விட பெரிய கரடி ஒன்றுடன் மோதி விட்டோமே என்று மனதில் நினைத்துக் கொண்டு கரடி வந்த வழியாக ஓட கறுப்பையாவும் நல்ல வேளை என்ன புண்ணியம் செய்தேனோ தெரியவில்லை கரடி ஒன்றும் செய்யாமல் ஓடி விட்டது.என்று புலம்பிக் கொண்டு கறுப்பையாவும் பின்னங்கால் பிரடியில் அடிபடாத வண்ணம் குடிலுக்குள் புகுந்தார்.

அ.அனுஷ்கார்த்திக்
தரம்-07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Save our Children from techchnology..

In a world enchanted by glowing screens,
Where children's lives blend with technology's beams,
We witness the effects, both light and dark,
A modern tale of a techno-fueled spark.

Once outside, they'd run amidst green fields,
But now they're consumed by vitual shields,
Games and gadgets occupy their days,
As real-life adventures fade into haze.

Their little eyes transfixed on the glowing sights,
Their nimble fingers tapping with delight,
But oh,what impact does it truly bear,
On their young minds and hearts, do we dare?

Creativity dwindles,imagination fades,
As virtual worlds become their chosen trade,
No longer building forts with cardboard castles,

Communicationn suffers, face-to-face discourse lost,
Replaced by screens and emojis,at what cost?
No longer learning the art of genuine connection,
They seek Validation through pixels,a misdirection.

The playgrounds echo with empitiness and hush,
As they sit locked indoors,hypnotized by a touch,
Physical activity fades,bodies grow weak,
As technology's grip tightens,they grow meek.

But amidst the concerns, there's still a glimmer of hope,
The children can balance,learn and cope,
By using technology as atool,nota crutch,
They can navigate the path between real an virtual as such.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Parents must guide,monitor and restrict,
Teach boundaries and limits, though it may prick,
For technology will forever be part of their lives,
But they must understand it's what they're willing to sacrifice.

So let's foster a balance,a harmonious blend,
Of nature's wonders and technology's trend,
For in this union, kids can truly thrive,
Embracing the blessing teach provides.

Let's give them room to wxplore and create,
But also teach them when to moderate,
For technology's a powerful force, we must concede,
But the impact it leaves, is truly of our own deed.

**K.Kamalaruban**
**Grade-11**

இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும்
வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம்
ஒதுக்கப்பட்டுள்ளது,
ஆனால் அந்த பக்கத்தை ஒரு உலகமாக
மாற்றுவது உங்களுடையது.

ஏபிஜே அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tech In Education

In classrooms bright with screens aglow,
Where technology,its seeds we sow,
The influence shapes education's way,
Guiding studends through each passing day.

With a tap, swipe, knowledge found,
In the vast realm of the digital ground,
From math to science, arts to history,
Technology unlocks a world of mystery.

No longer confined to printed page,
Learning expands,with a vibrant stage,
Through online libraries and virtual halls,
Students explore,as curiosity calls.

Once silent walls now echo with sound,
As innovation's symphony resounds,
From interactive lessons that come alive,
To multimedia projects that strive.

The indernet,a treasure trove so vast,
With boundless resources amassed,
Researching facts, opinions, and views,
Technology fuels the learning fuse.

Collaboration reaches higer peaks,
As students connect with peer and speaks,
The barriers of distance no longer a strife.
Though video chats,the flow of life.

But amidst the wonders technology brings,
A mindful balance our focus sings,
Human connection,teacher's embrace,
Must not be lost in the digital space.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For guidance and inspiration still matter,
In nurturing minds, hearts to shatter,

Techonology's influence,a tool to wield,
But educators are the compasses that shield.

So let us harness this power immense,
Upholding values, truth,and common sense,
Technology in education,a path we tread,
May is influence lead to wisdom ahead.

**A.Harishnarubika**
**Grade-11**

---

# பொன் மொழிகள்

- நமக்குக் கிடைப்பது வெற்றியோ தோல்வியோ அதைப்பற்றி கவலைப் படாதீர்கள். தன்னலம் கருதாமல் சேவையில் ஈடுபடுங்கள்.

- சுயநலம் அற்றவர்களாக இருங்கள்.ஒருவர் இல்லாதிருக்கும் போது அவரைப்பற்றி பிறர் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

- மற்றவரின் நன்மை குறித்து சிறிதளவு நினைப்பது கூட சிங்கத்திற்கு சமனான ஆற்றலை நமக்கு தந்துவிடும்.

- மரணம் என்பது நமக்கு உறுதியாக ஒருநாள் வந்தே தீரும்.அதற்குள் சிறிதளவாவது பிறருக்கு பயன்பட்டு அழிந்து போவது நல்லது.

- எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள், பலமுடையவராகுங்கள் உங்கள் மீதே முழுப் பொறுப்புக்களையும் சுமந்து கொண்டு வாழப் பழகுங்கள்.

**ப.சஜிந்தினி**
**தரம் -06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்

## உழவுத் தொழில்

தன்னன்னானே! தானானானே!
தன்னானேனா! தானானானே!
தன்னான்னானே! தானானானே!
தானானேனா தானே தானே.

குளத்து நீரும் ஓடுதம்மா! -அங்கே
குவளை மலரும் போகுதம்மா!
வரம்பு மீறி பாயுதம்மா-நல்ல!
வயல்கள் குளமாய் மாறுதம்மா!

வெள்ளை நாரை கூட்டமம்மா -இங்கே
மெல்ல மேய்ந்து செல்லுதம்மா!
கெண்டை மீன்கள் பாயுதம்மா-இந்த
வன்னி நாடு செழிக்குதம்மா

உழவன் மகனும் வந்தானம்மா-நல்ல
உழவுத் தொழிலை செய்தானம்மா!
நெல்லு மணிகளை எறிந்தான் அம்மா -அவன்
நெஞ்சம் மகிழ்ந்து சென்றானம்மா!

கால் கடந்து சென்றதம்மா! -கதிர்
மங்கை தலை சாய்ந்தாளம்மா கதிர்
தொட்டு உள்ளம் மகிழ்ந்தானம்மா-தன்
கஷ்டம் எல்லாம் கடக்கும் என்றே!

கொள்ளை நோய் ஒன்று வந்ததம்மா- இந்த
குலமகன் நொந்து போனானம்மா!
துணைமகள் துணையாய் வந்தாளம்மா- அவள்
காதணி கடைக்குச் சென்றதம்மா

கொள்ளை நோய் தப்பி நிறைபயிர்-மெல்ல
மெல்ல பொன்னாய் ஆனதம்மா-காலம்
இல்லா உழவன் மகன் -இந்த
கடனைக் கட்ட வழியென்ன என்றானம்மா

காலம் வெகுவாய் வந்ததம்மா -ஆனால்
காலம் மாற மழை பெய்ததம்மா!
வெள்ளம் கதிரை உண்டதம்மா -அவன்
நெஞ்சம் சுக்கு நூறாய் உடைந்ததம்மா

வெள்ளம் உண்ட பின்னருமே-இந்த
வெட்டு மிசின் காரனவன்-சுழையாய்
பணம் கேட்டானம்மா - உழவன்
பணமும் கொடுத்தானம்மா

நெல்லு விற்க வேண்டும் என்று -அவன்
கடனைத் தீர்க்க வேண்டும் என்று
வீதி முழுதும் நின்றானம்மா!
வேதனை பொங்கி நொந்தானம்மா!

தரகர் ஒருவன் வந்தானம்மா!
நெல்லுப் பச்சை என்றானம்மா!
உழவன் வயிற்றில் அடித்தானம்மா!
ஊமையாய் உழவன் நின்றானம்மா!

கடன் ஏறிப் போனதம்மா-அவன்
கண்கள் குளமாய் ஆனதம்மா
உழத்தி மகள் வந்தாளம்மா!
கண்ணீர் துடைத்து நின்றாளம்மா!

ம.ஹரிஸ்னா
தரம் -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 01



தரம் - 02



தரம் - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 04

தரம் - 05





தரம் - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 07



தரம் - 08



தரம் - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 10



## தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என்நினைவு விவேகானந்தா

பாலராய் நுழைந்திட்டோம்
பசுமையாய் வளர்ந்திட்டோம்
பாலும் தேனும் போல பழகிட்டோம்
பட்டுப் பூ ச்சியைப் போல் பறந்திட்டோம்

தரம் 3 வரை விளையாட்டாகக் கல்வியை
தயக்கம் இன்றிக் கற்றிடுவோம்
தரம் 4 வந்ததும் எங்களுக்குள்
தயக்கம் பல பொங்கி
தளராது தாண்டி விட்டோம் தரம் ஐந்தை

இடைநிலைப் பிரிவு தன்னில்
இணையில்லாப் பாடத்தினுள்
இறுக்கமாகக் கற்றறிந்தோம்
இக்காலம் எங்கள் பொற்காலம்

இணைப்பாடங்கள் என்னை
இயல்பறிந்து இழுத்திடவே
இறுக்கமான கட்டுப்பாட்டுடன்
இமைக்குள் ஆயிரம்
இதயங்கள் ஒலிக்கும் உறவுகளுடன்

தாய்போல எம்மை அணைத்திட்டா
தன்னிகரில்லா வாழ்வு தந்தா
தங்கத்தாயின் ஆசான்கள்
தனித்துவமான திறமைகள் கண்டு
தரணியை நகர்த்தி தரம் பேணி

என் உயிர்காலம் இங்கே
என் இதயம் பேசும் விவேகானந்தா
என்றென்றும் புகழ் மணக்க
என் வாழ்வு நுகர்வுதனை நூறாக்கும்

வி. நிலுக்ஷிகா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள்

01. கல்வி என்பது தன்னைப் புரிந்து கொண்டு அறிவான முறையில் செயல்படுவதாகும்

● **அல்லாமா இக்பால்**

02. கல்வி என்பது ஒரு நபரை அங்கீகரிப்பதற்கும் நல்ல மற்றும் கெட்ட தன்மைக்கும் இடையில் பாகுபாட்டைக் காண்பிப்பதற்கான செயற்பாடாகும்.

● **இமாம் கஸ்ஸாலி**

03. கல்வி என்பது நல்லது மற்றும் கெட்ட உணர்வுகளை வளர்த்துக் கொள்ளும் ஒரு செயற்பாடாகும். இதனால் ஒரு நபர் நன்மை எது தீமை எது என்பதை தேர்வு செய்துக் கொள்ள முடியும்.

● **ஸேக் வலியுள்ளாஹ்**

04. கல்வி என்பது ஒருவர் ஒரு சமுதாயத்தின் உறுப்பினராக இருக்கும் அனைத்து துறைகளிலும் முழுமையாய் செயல்படுவதன் மூலம் தனது நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கான பயிற்சிக்கான செயல்முறையாகும்.

● **அரிஸ்ரோட்டில்**

05. கல்வி என்பது ஒவ்வொரு மனிதனும் மனதில் மறைத்திருக்கும் கருத்துக்களை உலகளாவிய ரீதியில் செல்லுபடியாக்க வெளியே கொண்டு வருவதாகும்.

● **சோக்ரடீஸ்**

06. எந்தவொரு சந்ததியினரும் பின்பற்றுவதற்காக அல்லது முன்னேறுவதற்காக அல்லது முன்னேற்றுவதற்காக தமது இளைய சந்ததியினருக்கு கலாசாரத்தை ஒப்படைத்தல் கல்வியாகும்.

● **ஜோக் ஸ்ருவட்மில்**

07. தாம் வாழும் சமூகத்தில் தனக்குக் கிடைக்க வேண்டிய இடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய அனுபவங்களை வழங்குதல்.

● **ஈ.சீ.மூவர்**

க. சப்திகா
தரம் -10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களின் ஒழுக்க விழுமியப் பண்புகள்

- பாடசாலைக்கு தினமும் சமுகமளிக்க வேண்டும்.
- பாடசாலைக்கு நேரத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
- தூய்மையான சீருடை, சப்பாத்து போன்றவற்றை சீராக அணிந்து வர வேண்டும்.
- சிகையலங்காரம் சீராக இருக்க வேண்டும்.
- உரிய பொறுப்புக்களையும், கடமைகளையும் மாணவத்தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள், மாணவர்கள் நிறைவேற்ற வேண்டும்.
- பரீட்சைகளுக்கு சமூகமளிக்க வேண்டும்.
- அதிபர், ஆசிரியர், பெரியவர்கள் ஆகியோருக்கு மதிப்பளிக்க வேண்டும்.
- ஆசிரியருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.
- ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை ஒழுங்காக கற்க வேண்டும்.
- வகுப்பறையில் அமைதியாக இருக்க வேண்டும்.
- காலை ஆராதனைக்குச் செல்லும் போது கைகள் பின்னால் கட்டி வரிசையாகவும், அமைதியாகவும் செல்ல வேண்டும்.
- பாடசாலையில் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகிக்கக் கூடாது.
- பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றுதல்.
- கலை, கலாசாரங்களைப் பின்பற்றுதல்.

கி. தயாநிதா
தரம் -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோள வெப்பமுறல்

கடந்த சில தசாப்தங்கள் தொழில்நுட்ப வளர்ச்சியின் நினைவுச் சின்னமாக உள்ளன. மனிதர்கள் நம் வாழ்க்கையை எளிதாக்கும் அமைப்புக்களையும்.இயந்திரங்களையும் உருவாக்கியுள்ளனர். விஞ்ஞானப் புரட்சியில் நவீன தொழில்நுட்பம் குறுகிய காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியில் முன்னேறியுள்ளது. இருப்பினும் சமூகத்தின் வளர்ச்சி சுற்றுப்புற சூழலின் தரத்திற்கு கடுமையான தீங்கினை ஏற்படுத்தியுள்ளது. இதில் மிகப் பெரிய அச்சுறுத்தல் காலநிலை மாற்றமாகும். புவி வெப்பமடைதல் பெரும்பாலும் காலநிலை மாற்றத்தின் விளைவாகக் கருதப்படுகின்றது.

புவி வெப்பமடைதல் அதன் காரணங்கள் மற்றும் பிற முக்கிய காரணங்கள் பற்றி அறிய புவியின் வெப்பநிலையை பாதிக்கும் காரணிகள் மற்றும் உலகில் எதிர்காலத்திற்கான அர்த்தம் என்பவற்றை ஆழமாகப் பார்க்க வேண்டும். புவி வெப்பமடைதல் மற்றும் பிற முக்கிய தொடர்புடைய தலைப்புக்கள் பற்றிய ஒரு புறநிலை பார்வை இங்கே உள்ளது.

புவி வெப்பமடைதலின் மிகத் தெளிவான காரணங்கள் தொழில் மயமாக்கல், நகர மயமாக்கல், காடழிப்பு மற்றும் மனித நடவடிக்கைகள், மனித நடவடிக்கைகளால் $Co_2$,$No_2$,$CH_4$ போன்ற பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றம் அதிகரிக்கின்றது. சமீபித்திய ஆய்வுகளின் படி புவி வெப்பமடைதலுக்கு நான்கு முக்கிய காரணங்களை பல விஞ்ஞானிகள் முன்வைக்கின்றனர். அவையாவன பச்சை வீட்டு வாயுக்கள் சூரியனின் வெப்ப கதிர்களை அகத்துறிஞ்சி புவி வெப்பநிலையை அதிகரிக்கின்றது. சனத்தொகை அதிகரிப்பால் வாகனப் பாவனை அதிகரிப்பும். காடழிப்பும் ஏற்படுகிறது. இதனால் $Co_2$ வெளியேற்றம் அதிகரிககின்றது.

கடந்த சில ஆண்டுகளில் புவி வெப்பமடைதலின் உண்மைத் தன்மை சராசரியாக 1700 களின் பின்பகுதியில் தொழில் துறை புரட்சியின் தொடக்கத்தை விட வெப்பநிலை 1.5$^0$C அதிகமாக உள்ளது. இவ் அளவீடு மட்டும் அதிகரித்து வருகிறது. 1950 ஆம் ஆண்டுகளில் உலகின் $Co_2$ வெளியேற்றம் 6 பில்லியன் டன்களாகும். 1990 வரை நான்கு மடங்கு அதிகரித்து 22 பில்லியன் டன்களாக உள்ளது. அது மட்டுமன்றி சரிபார்க்கப்படாத $Co_2$ வெளியேற்றம் இன்று 35 பில்லியன் டன்களை எட்டியுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புவி வெப்பமடைதலின் தீர்வுகளாவன:

1. புவி வெப்பமடைதலை தனி நபர்கள் மீது குற்றம் சாட்ட முடியாது. தொழிற்சாலைகள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் தனி நபரை விட அதிக காபன் வெளியேற்றத்தைக் கொண்டுள்ளன.இருப்பினும் கட்டுப்படுத்தும் வழிகளும். செயற்பாடுகளும் சமூக முயற்சியாகும்.
2. அரசாங்க மட்டத்தில் உறுதியான திட்டங்களை அதிகமாக உருவாக்க வேண்டும். சுற்றுபுற சூழலுக்கு தீங்கு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
3. தனிநபர்கள் முதல் அரசு வரை தீர்வுகாண அனைவரும் உழைக்க வேண்டும்.
4. $Co_2$ வெளியேற்றத்தை குறைக்க மின்சாரத்தில் இயங்கும் வாகனப் பாவனைக்கு மாறுதல்.பொது போக்குவரத்தை பயன்படுத்தல் சிறந்த வழியாகும்.
5. பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல். பிளாஸ்டிக் , புவி வெப்பமடைதலுக்கு முதன்மையான காரணமாகும்.
6. காடழிப்பை தவிர்த்து அதிக மரங்கள் நடுவதை ஊக்குவித்தல்.
7. தொழில் மயமாக்கல் சில விதிமுறைகளின் கீழ் இருக்க வேண்டும். தாவரங்கள் மற்றும் விலங்குகள் வாழும் பசுமை இடங்களில் தொழிற்சாலை கட்ட தடை விதிக்க வேண்டும்.

## புவி வெப்பமடைதலின் விளைவுகளாவன:

1. தாவரங்கள் மற்றும் விலங்குகள் நேரடியாக பாதிக்கப்படுகின்றன. இது எமது எதிர்காலத்தில் கடும் அச்சுறுத்தலாகும்.
2. புவியின் துருவப் புகுதியிலுள்ள பனிப்பாறைகள் உருக ஆரம்பிக்கின்றன. சமுத்திர நீர் மட்டம் உயர்வால் தாழ்வான பகுதிகள். தீவுகள் கடலினுள் அமிழும் அபாயம் ஏற்படுகின்றது.
3. கடல்வாழ் உயிரினம் பாதிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பவளப்பாறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றது.அவை எதிர்காலத்தில் முடிவை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.
4. இறுதியில் புவி வெப்பமடைதலின் எதிர்மறையான தாக்கத்தை நாங்களும் எதிர் கொள்ள நேரிடும்.

திருமதி.நி.சத்தியேந்திரன்
ஆசிரியர் - விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது குடும்பம் எனது உலகம்

பாசத்தின் உருவம்
என் அம்மா
நேர்மையின் உருவம்
என் அப்பா
இரத்தத்தை உணவாகக் கொடுப்பவள்
என் அம்மா
வியர்வையை உணவாகக் கொடுப்பவர்
என் அப்பா
வானத்தின் இரு தீபங்கள்
சூரியன் சந்திரன்
என் வாழ்வின் தீபங்கள்
தாய் தந்தை
போர்வையின்றி கரங்கள் கொண்டு
போர்த்துபவள் அம்மா
நட்பின் அரவணைப்பில்
என் அப்பா
மழலைகளின் தேவதை
என் தங்கை
அழகில் மதியை வென்றவள்
என் தங்கை
இவர்கள் வாழும் வீடு
என் கோயில்
என் இரு தெய்வங்கள்
என் பெற்றோர்
இதுவே எனது குடும்பம்
குடும்பமே எனது உலகம்

ஹ.கோஜனா
தரம் - 04

# பள்ளி மழையின் துளிகள்

எங்கள் பள்ளி
புத்தம் புது ஆடையுடன்
ஆண்டு பிறக்கும்
புத்தகத்தின் வாசத்தோடு
பள்ளி திறக்கும்

புதுச் சேர்க்கை மாணவரின்
முகங்கள் சிரிக்கும்
வெளிச் சென்ற முகங்கள்
மனக் கண்ணில் மறையும்

தமிழாசான் பாடமெல்லாம்
கதை போல் புரியும்
கரும்பலகை கணக்குகளும்
எளிதில் விளங்கும்

உடற்கல்வி வகுப்பு நேரம்
கடனாய் கழியும்
குருதியிலே வரலாறு
வீரமேற்றும்

மரத்தடியில் மதிய உணவு
சுவைகள் கலக்கும்
கரும்பலகை களைக்கையிலே
தும்மல் தெறிக்கும்

கமர்க் கட்டும் நெல்லிக்காயும்
வெளியில் கிடக்கும்
கடனாக பென்சில் இறப்பர்
கைகள் மாறிடும்

ட.டக்சினா
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசார முறைகள்

எமது இந்து சமயத்திலே முதன்மை பெறுவது " ஆசாரம் " அதை நல்ல முறையில் பேணிக்காப்பது முக்கிய கடமையாகும். தினமும் சூரிய உதயத்தின் முன் கண் விழித்துக் காலைக் கடன்கள் முடித்து ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி தரித்து,சுகந்த சந்தனம் பூசி, இறைவழிபாடு செய்து, புலால் தவிர்ந்த உணவு உட்கொண்டு உடற்சுத்தி, உளச்சுத்தியோடு இருப்பதே முறையான ஆசாரம்.

## சில முக்கிய ஆசார முறைகள்

- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.
- ஜோதிடர்,குரு,நோயாளி,கற்பிணி,மருத்துவர்,சந்நியாசி முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவ வேண்டும்.
- பசு,தேர்,நெய்குடம்,அரசு,விஸ்வம்,அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால் வலது புறம் சுற்றிச் செல்ல வேண்டும்.
- கன்றுக்குட்டியின் கயிற்றை தாண்டக்கூடாது. மழை பெய்யும் போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக் கூடாது.
- நெருப்பை வாயால் ஊதக்கூடாது.
- வானவில்லை பிறருக்குக் காட்டக்கூடாது.
- ஈரக்காலுடன் படுக்கக் கூடாது.
- வடக்கிலும், தென் கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு,வடகிழக்கு எனும் திசைகளில் தலை வைத்துப் படுக்கக் கூடாது.
- பிணப்புகை, இளவெயில், தீப நிழல் இவை நம்மீது படக்கூடாது.
- நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக் கூடாது.

## மங்கையருக்கு சில குறிப்புகள்

- சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக் கூடாது.
- இரவில் வீட்டைப் பெருக்கி குப்பையை வெளியே போடக் கூடாது.
- பெண்கள் பூ சணிக்காய் வெட்டக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காய் உடைக்க கூடாது.
- வாசல் படிகளில் தலைவிரி கோலமாக உட்காரக் கூடாது.
- வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.
- அதிகாலையெழுந்து வீட்டுவாசல் பெருக்கி நீர் தெளித்து வாசலில் கோலமிடல் வேண்டும்.
- மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் வெளி இடங்களுக்கு செல்லாது விளக்கு வைத்து தூபமிட்டு வழிபாடு செய்வது நலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோலம் போடும் போது சுப காரியங்களுக்கு இரண்டு கோடும், அசுப காரியங்களுக்கு ஒரு கோடும் போட வேண்டும்.
- உரல், அம்மி, முறம், வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக் கூடாது.
- சுமங்கலி கணவனுடைய அனுமதி பெற்றே விரதம் இருக்க வேண்டும்.

## உணவு பரிமாறும் முறைகள்

- பரிமாறும் போது உப்பு,நெய்,சாதம் ஆகியவற்றை கையால் எடுத்து பரிமாறக் கூடாது.
- தலைவாழையிலை உட்காரும் எமக்கு இடப்பக்கம் இலையின் தலைப்பக்கம் இருக்க வேண்டும்.
- தண்ணீர் வைக்காமல் உணவு பரிமாறக் கூடாது.
- வாசல் படிக்கு நேரே அமர்ந்து உண்ணக் கூடாது.
- சாப்பிட்ட பின்னர் கையலம்புங்கள் என்று கூறி தண்ணீர் கொடுக்க வேண்டும். கை கழுவுங்கள் என்று கூறக்கூடாது.
- சாப்பிடும் போது முதலில் இனிப்பு,உவர்ப்பு,புளிப்பு,கசப்பு பதார்த்தங்களை வரிசையாக சாப்பிட்ட பின்பு நீர் அருந்த வேண்டும்.
- சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்தக்கூடாது.

## தலைக்குப் பூச்சூடுதல்

- பெண்கள் தினசரி ஏதாவதொரு பூவை தலையில் சூடிக் கொள்ள வேண்டும்.
- ரோஜா மலர் : பார்வைக்கு அழகை கொடுக்கும், நறுமணத்தைக் கொடுக்கும். இதயத்துக்கு பலம் கொடுக்கும்.
- மல்லிகைப் பூ : கண் பார்வையை குணமாக்கும்.
- செவ்வந்திப் பூ : கூந்தல் வளரும், கண்ணுக்குக் குளிர்ச்சி
- மகிழம் பூ : தலைவலி,கண்நோய் நீக்கும்.

T. ஆசா
அபிவிருத்தி உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01. ஒருவனை அழைத்தால் ஊரைக் கூட்டுவான் அவன் யார்?
- காகம்

02. அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது?
- தண்ணீர்

03. வெட்டிக் கொள்வான். ஆனாலும் ஒட்டிக் கொள்வான்?
- கத்தரிக்கோல்

04. அதட்டுவான். அலறுவான் ஆனால் கோட்டையை விட்டு வரமாட்டான் அவன் யார்?
- நாக்கு

05. ஓடியாடி வேலை செய்த பின் மூலையில் ஒதுங்கிக் கிடப்பான் அவன் யார்?
- துடைப்பம்

06. ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம் அது என்ன?
- தேன்கூடு

07. படுத்துத் தூங்கினால் கண்முன்னே ஆடும். அடுத்து விழித்தால் மறைந்தே ஓடும் அது என்ன?
- கனவு

08. விரல் இல்லாமலே ஒரு கை அது என்ன?
- உலக்கை

09. மூன்று பெண்களுக்கு ஒரே முகம் முதல் பெண் ஆற்றிலே. இரண்டாவது பெண் காட்டிலே. கடைசி பெண் வீட்டிலே அவை எவை?
- முதலை. உடும்பு. பல்லி

10. வெள்ளை ராஜாவிற்கு கறுப்பு உடை அது என்ன?
- உழுந்து

11. அம்மா படுத்திருக்க, மகள் ஓடித்திரிவாள் அது என்ன?
- அம்மி,குழவி

12. பச்சை நிற அழகிக்கு,சிவப்பு நிற வாய் அது என்ன?
- கிளி

13. பட்டுப்பை நிறைய பவுன் காசு அது என்ன?
- மிளகாய்

14. அம்பலத்தில் ஆடுகிற அழகுப் பெண்ணுக்கு அங்கமெல்லாம் தங்கக் கண்ணாடி அது என்ன?
- மயில்

15. கையுண்டு,கழுத்துண்டு. தலையுண்டு ஆனால் உயிரில்லை அது என்ன?
- சட்டை

M.F.அஹ்லா
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவையில் ஆலோசனை வழிகாட்டலின் வகிபாகம்

ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறு மனநிலமைகள் உள்ளன. மேலும் அவர்கள் அனைவருக்கும் அவர்களின் சொந்தக் கற்பனை உலகங்கள் உள்ளன. நம்மில் பெரும்பாலானோர், நாம் உருவாகும் ஆண்டுகளில் பல விதமான மன நிலைகளை அனுபவித்திருந்தாலும், நம் குழந்தை களிடமும் அதைக் கண்டறிய நாங்கள் இன்னும் போராடுகிறோம். கூடுதலாக, சிலர் ஆலோசனையை உளவியல் சிகிச்சையின் ஒரு வடிவமாக நம்புவதால் பாடத்தை தவிர்க்க முனைகின்றனர். இருப்பினும், பாடசாலை களில் ஆலோசனைக்கான முக்கிய தேவை உள்ளது. ஏனெனில் குழந்தையின் வளரும் ஆண்டுகள் அவரது விதியை தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை கொண்டுள்ளன.

ஆரோக்கியமாக இருப்பதாக கருதப்படுப வர்களுக்கு ஆலோசனைகள் அடிக்கடி வழங்கப்படுகின்றன. ஆனால் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளை கையாள கூடுதல் கவனிப்புத் தேவைப்படும். பல பெற்றோர்களும் குழந்தைகளும் ஒருவருக்கொருவர் சரியாகத் தொடர்பு கொள்வதில்லை, இது வாழ்க்கையின் சில அடிப்படைப் பிரச்சனைகளைக் கையாள் வதை குழந்தைகளுக்கு கடினமாக்கு கிறது. உதாரணமாக, ஒரு பாடசாலை ஆலோசகர் ஒரு இளைஞருடன் பேச வேண்டியிருக் கலாம், அவர் ஒரு வகுப்புத் தோழரைப் பற்றி வருத்தப்பட்டு, அதைப்பற்றி பெற்றோரிடம் பேசுவதில் சிக்கல் உள்ளது. நம்மில் பெரும்பாலானோர் சொந்த குழந்தைகளை மதிப்பிடுகின்றோம். ஆனால் இது பொதுவாக மக்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றிய தவறான எண்ணத்தை அவருக்கு அளிக்கலாம். பாடசாலை மட்டத்தில் ஆலோசனையின் முக்கிய குறிக்கோள் குழந்தைகளின் உணர்ச்சி ,சமூக மற்றும் நடத்தை தேவைகளை பூர்த்தி செய்வதாகும். கூடுதலாக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பல்வேறு வழிகளில் உதவுவதற்கு வரவேற்பு மற்றும் தடையற்ற சூழலை உருவாக்குதல்.

## பாடசாலையில் ஆலோசனை வழிக்காட்டலின் அவசியம்

உங்கள் பிள்ளையின் பொதுவான கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கருத்தில் கொள்ள வேண்டிய பல காரணிகள் உள்ளன. ஊடகங்கள் மற்றும் பிற சமூக தாக்கங்களுக்கு குழந்தைகள் அதிகம் வெளிப்படும் ஒரு சமூகத்தில் . அவர்களின் வளர்ச்சியை தொடர்ந்து கண்காணிப்பது சவாலாக இருக்கலாம்.

பொதுவாக ஒரு ஆலோசகரின் வேலை, நடத்தை சிக்கல்கள், வகுப்பில் தொடர்வதில் சிரமம் அல்லது கொஞ்சம் கூடுதல் கவனிப்பு மற்றும் ஆதரவு தேவைப்படும் மாணவர்களுக்கு உதவுவதாகும் கூடுதலாக கொடுமைப் படுத்தப்படுதல் மற்றும் பிற எதிர்மறை நடத்தைகள் இல்லாத பாதுகாப்பான சாடசாலை மற்றும் வகுப்பறைச் சூழலை உறுதி செய்ய பாடசாலை நிர்வாகம் . ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுடன் ஒத்துழைப்பது ஒரு ஆலோசகரின் பொறுப்பாகும்.

முன் தொடக்க பாடசாலை, தொடக்க பாடசாலை நிலை அல்லது இடைநிலைப் பாடசாலை என எந்த நிலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகாட்டிகள் அல்லது ஆலோசகர்கள் தொழில் முறை பயிற்சி பெற்றவவர்கள் என்பதை உத்தரவாதம் செய்வது பாடசாலை நிர்வாகம் மற்றும் பெற்றோரின் பொறுப்பாகும். மற்ற பல தொழில்களை போலவே பாடசாலை ஆலோசனையும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது. வேலைக்கு முன் விரிவான பயிற்சி மற்றும் வேலையிலிருக்கும் போது தொடர்ந்து கல்வி தேவைப்படுகிறது. நிபுணர்களால் பயன்படுத்தப்படும் மிக சமீபித்திய ஆலோசனை நுட்பங்கள் மற்றும் முறைகள் குழந்தையின் ஆளுமையின் சிறந்த ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்பதற்கு இது உத்தரவாதம் அளிக்கிறது.

குழந்தைகள் அடிக்கடி மன அழுத்தத்திலிருப்பதால் அவர்களுக்கு சிறந்த ஆலோசனை வழங்க வேண்டும். ஆலோசனைகள் இந்த அழுத்தங்களை சமாளிப்பதற்கு இளைஞர்களுக்கு உதவலாம். ஆனால் பெற்றோர்கள் அதன் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் பாராட்ட வேண்டும். முறையான மாணவர் ஆலோசனைகள் முக்கியமான வாழ்க்கை திறன்களை பெற உதவுகின்றன. அவை தினசரி பயன்படுத்தும் போது நிறைவான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

## வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையில் ஆசிரியரின் பங்கு

ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். உதவி தேவைபடும் மாணவருக்கு அவர்கள்தான் முதல் தொடர்பு. ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதுடன் தேவைபடும் போது அவர்களை தொடர்புடைய பிற நிபுணர்களிடம் பரிந்துரைப்பார்கள். ஆசிரியர்கள் தங்கள் குழந்தைகளுடன் உரையாடலில் ஈடுபடுவதற்கு முன் அவர்களுக்கு வசதியாக இருப்பதன் மூலம் அவர்களுடன் நட்புறவை உருவாக்க முடியும். மாணவர்கள் தங்கள் சிரமங்களை விரைவாக கையாளக்கூடிய நம்பகமான நபருடன் பேசுவதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

ஒரு ஆசிரியர் மாணவர் மீது இரக்கம் காட்ட வேண்டும். மற்றும் தீர்ப்பு வழங்காமல் அல்லது அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தாமல் அவர்களின் நலனில் அக்கறைக் காட்ட வேண்டும். குழந்தை கேட்டதாகவும் புரிந்துக் கொள்ளப்பட்டதாகவும் உணர்கிறது என்பதை உறுதிப்படுத்தவும். முடிவில் இன்றைய பாடசாலைகளில் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதில் ஆசிரியரின் பங்கை பாடசாலை கல்வி திறனின் அடிப்படையில் மட்டுமல்லாமல். குழந்தையின் பொதுவான ஆளுமையின் அடிப்படையிலும் நாம் இப்போது தெளிவாக புரிந்து கொண்டுள்ளோம்.

## பாடசாலை ஆலோசனையின் நன்மைகள்

01. மாணவர்கள் தங்கள் கல்வி செயல் திறனை எதிர்மறையாக பாதிக்கும் உளவியல் சிக்கல்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த சரியான அறிவுறுத்தலைப் பெறுகிறார்கள். இந்த பயிலரங்குகள் மூலம் குறிப்பிட்ட சிக்கலைத் தீர்க்கும் நுட்பங்களை மாணவர்கள் கற்றுக் கொள்ள முடியும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அன்றாட வாழ்வில் குறிப்பிட்ட பிரச்சனைகளை சமாளிக்க உதவும்.

02. குழந்தைகள் பள்ளியில் அடிக்கடி சந்திக்கும் பல்வேறு சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பதற்கான வழிக்காட்டுதலைப் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் வகுப்பு தோழர்களுடன் எப்படி பழக வேண்டும் உதாரணமாக அல்லது கண்ணியமாக பேச வேண்டும் பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த இந்த அறிவுறுத்தலில் இருந்து அவர்கள் முன்னோக்கைப் பெறுவார்கள்.

03. பாடசாலை சமூகத்தின் சூழலில் மாணவர்கள் எவ்வாறு அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்து வாழ்வது என்பதைக் கற்றுக் கொள்கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் தங்கள் வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

04. அலுவலகத்தில் பயனுள்ள ஆலோசனை வழி மூலம் அவர்களின் பிரச்சனைகளை வழிநடத்தும் திறன் காரணமாக மாணவர்களுக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் இடையேயான தொடர்பு இடைவெளியை மூட உதவுகிறது.

05. மாணவர்கள் படிப்புக்கள், தொழில்கள் மற்றும் வேலைகள் பற்றிய முழுமையான வழிகாட்டுதலைப் பெறுகிறார்கள். இது பட்டப்படிப்புக்கு பிறகு அவர்களின் விருப்பங்களை புரிந்து கொள்ளவும், புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

06. இது மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் பல்வேறு கடினமான அனுபவங்களைப் பற்றி விவாதிக்க உதவுகிறது. பெற்றோருடன் விவாதிக்க முடியாத பிரச்சனைகளை அவர்களால் வெளிப்படையாகப் பேச முடிகிறது.

செல்வி.தெ. சிந்துஜா
(HNDE)
Trained)

---

நம் அனைவருக்கும் ஒரே திறமை இல்லாமல் இருக்கலாம்.
ஆனால் திறமைகளை வளர்த்துக் கொள்ள அனைவருக்கும்
ஒரே மாதிரியான வாய்ப்புகள் உள்ளன.
ஏபிஜே அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம்

மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோருள் பெற்றோருக்கு அடுத்தபடியாகவும், கடவுளுக்கு முதலாகவும் ஆசிரியர் நிலை நிறுத்தப் பட்டிருப்பது ஆசிரியத்துவத்தின் சிறப்பம்ச மாகும். ஆசிரியப்பணி என்பது ஓர் அறப்பணியாகும்.அதற்கு உன்னை அர்ப்பணி என்ற கூற்றுக்கமைய நமது ஆசிரியப்பணி அளப்பரிய பெறுமதியான சேவையாகக் கருதப்படுகின்றது.

இப் பூ மிதனிலே அவதரிக்கின்ற பிள்ளைச் செல்வங்கள் அனைவருக்கும் கல்வி என்பது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது.

வெள்ளத்தால் அழியாது
வெந்தழலால் வேகாது கொள்ளத்தான் முடியாது
கொடுக்கக் கொடுக்கக்
நிறைவின்றி குறைவுறாது.

இவ்வாறான மாட்சிமை பொருந்தியதும் அழியாச் செல்வமுமாகிய கல்விச் செல்வத்தை பெறுவதற்குப் பாடசாலைக் கல்வி என்பது ஒவ்வொருவருக்கும் அடிப்படையானதாகவும், அவசியமானதாகவும் காணப்படுகின்றது. கல்வியினை மாணவர்களிடத்தே கொண்டு சேர்ப்பதற்கு அச்சாணிகளாக விளங்குபவர்கள் ஆசிரியப் பெருந்தகைகளேயாவர். பாடசாலை யிலும் சரி சமூகத்திலும் சரி ஆசிரியர்களுக்கு உயரிய கௌரவம் உள்ளது. அவர்களே அவற்றின் மிக முக்கிய பங்குதாரர்களாகவும் உள்ளனர்.

ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்வதற் கான பணியைச் சிறப்புற மேற்கொள் கின்றனர். மாணவர்களிடத்தில் "இலைமறை காய்களாக" இருக்கின்ற திறமைகளை "குன்றிலிட்ட தீபம் போல" வெளியுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டும் பாரிய பொறுப்பினை தமது சிரமேற் கொண்டு தீவிரமாக செயற்படுகின்றனர். ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்தரக் கல்வி என பாடசாலையில் மாணவர்கள் மூன்று பிரிவிற்குள் கற்றலை மேற்கொள்கின்றனர்.

மாணவர்களின் இயலுமை, இயலாமை, பலம், பலவீனங்களை இனங்கண்டு பொருத்தப் பாடான நுட்ப முறைகளை உபயோகித்து அம் மாணவர்களை பிரகாசிக்கச் செய்வதற்கு உந்து சக்தியாக ஆசிரியர்களே விளங்குகின் றார்கள். உண்மை பேசுதல், குருபக்தி, அன்பு, பணிவு, பெரியோரை மதித்தல், பிறருடன் இனிமையாகப் பழகுதல் போன்ற பல நற்பழக்க வழக்கங்களை மாணவ சமூகத்திடையே விதைக்கிறார்கள்.

இவ்வாறு சிறு வயதிலிருந்தே பிள்ளைகளால் பின்பற்றப்படும் விழுமியப்பண்புகள் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிக்கு அமைய அவர்களால் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பதற்கு வழி வகை செய்கின்றது. ஆசிரியர்கள் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது வகுப்பறையில் மாணவர்கள் விரும்பும் ஆசிரியராகத் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு ஏற்றாற் போல் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியவராகவும், "பசு மரத்தாணிபோல" மனதில் பதிய வைக்கக் கூடியவரான பாடத்திட்டமிடல்களை கலைத்திட்டத்துடன் இணைத்து மேற் கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் மனதில் நாம் நல்லாசானாக நீங்காது இடம் பிடிக்க இயலும். மாணவர்கள் விடுகின்ற தவறுகளை உரிய இடத்தில் சுட்டிக்காட்டி அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வழிப்படுத்த வேண்டும். பெற்றோரிடம் கூறத்தயங்கும் விடயங்களை தமது ஆசிரியர்களிடம் உயரிய நம்பிக்கையால் கலந்தாலோசித்து தீர்வினைப் பெற்றுக் கொள்கின்றனர்.இவ்விடத்தில் ஆசிரியர்கள் ஓர் இடம்சார் பெற்றோராக (Loco Parents) விளங்குகின்றனர்.

ஆசிரியர்களாகிய நாம் சேவைக் காலத்தில் இருக்கும் போது எமது பாடசாலை ரீதியிலான செயலமர்வுகள், கருத்தரங்குகள், வதிவிட செயலமர்வுகள், கலைத்திட்ட மாற்றம் தொடர்பான கருத்தரங்குகள், தரவட்டங்களில் பங்குப்பற்றுதல், வளவாளராக செயற்படுதல், வினைத்திறன் தடைதாண்டல் பயிற்சிகளில் ஈடுபடுவதோடு எமது கல்வி தகைமை, தொழிற் தகைமைகளை அதிகரித்துக் கொள்வதற்கான உயர் பட்டப் படிப்புக்கள், செயல் நிலை ஆய்வுகள் போன்றவற்றிலும் ஈடுபடவேண்டும். அத்துடன் வலய, மாகாண, கல்வியமைச்சினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் தொடர்பான பூரண விளக்கத்தினைப் பெற்று எம்மைக் காலவோட்டத்திற்கமைய இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாடசாலை இயந்திரமயப்படுத்தப்பட்ட நிறுவனமன்று. மாறாக அது உயிர்ச் சூழலுடன் இயங்கு நிலையில் இருக்கின்ற ஒரு நிறுவனமாகும். இங்கு கிடைக்கின்ற பல நேரான அனுபவங்களை எமது வாழ்வின் முன்னேற்றத் திற்காகப் பயன்படுத்த வேண்டும். நேரான மனப்பாங்குடன் கருமமாற்ற வேண்டும். அழகிய ஆசிரியப் பணியை தொடர்கின்ற நாம் எமது பாடசாலை சமூகத்தோடு சிறந்த தொடர்பாடலை மேற்கொள்வதுடன் நின்று விடாது அயற் பாடசாலை ஆசிரியர் மீதும் சிறந்ததொரு தொடர்பாடலைக் கொண்டிருக்க வேண்டும்.

அது எம்மை நட்பு ரீதியாகவும், சேவை ரீதியாக வலுப்படுத்துவதுடன் உன்னதமான ஆசிரிய குடும்பம் என்ற குடைக்குள் அனைவரையும் ஒன்றிணைத்து அன்பு பாராட்டி செயலாற்றுவதற்கு துணை புரிகின்றது. என்று கூறுவதில் எவ்வித ஐயப்பாடுகளுமில்லை. இத்தருணத்திலே நான் கல்வி கற்ற பாடசாலைகள், கற்பித்த அனைத்து ஆசான்களின் சேவைகளை மீட்டுப் பார்ப்பதோடு எனது ஆசிரியத்துவத்திற்கு அடித்தளமிட்ட எனது மனதில் என்றும் நீங்காது இடம் பிடிக்கின்ற சீர்திரு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அன்னை மற்றும் கட்டுறு பயிற்சிக்காக என்னைக் கட்டியணைத்துக் காத்த எந்தன் தாயப் பாடசாலையான யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ( வல்வெட்டித்துறை ) ஆகிய கல்விசார் பெரு நிறுவனங்கள் எனக்கு ஆசிரியத்துவம் பற்றி பற்பல மறக்க முடியாத அனுபவங்களைப்" பௌர்ணமித் திங்கள் போல" பெற்றுக் கொடுத்திருக்கின்றன.

அத்தகைய பசுமையான நினைவுகள் என்னகத்தில் " கல்மேல் எழுத்துப் போல" என்றும் நீக்கமற நிறைந்திருக்கும் என்று கூறிக் கொள்வதில் பேருவகை அடைகின்றேன். மாட்சிமை பொருந்திய ஆசிரியத்துவத்தின் ஊடாக அறிவு, திறன் மனப்பாங்குகளுடனான தேர்ச்சிமிக்கதொரு சவால்களை வெற்றகொள்ளக் கூடியவாறான நல்லதொரு மாணவ சமூகத்தினைக் கட்டியெழுப்பி ஓர் ஒளிமயமான பாதையில் அம் மாணவச் செல்வங்களை இட்டுச் செல்வதற்கான அன்பான ஆசிரியர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைவோமாக.

திரு. ரவீந்திரராசா சஞ்ஜீவ்காந்த்
ஆசிரியர் -
(கற்பித்தலில் தேசிய டிப்ளோமா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் அறிவுரைகள்

01. மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

02. அறிவு உள்ளம் இரண்டில் எதை பின்பற்றுவது என்ற போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள்.

03. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.

04. மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே, நீ உனது சொந்த முடிவில் பிடிப்புடன் இரு, பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

05. மனது அதிகமாக ஒருமுகப்பட அதன் ஆற்றல் அதிகமாக ஒரு இடத்தில் செலுத்தப்படுகிறது. இதுதான் மனதின் ஆற்றலை பற்றிய இரகசியமாகும்.

06. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாததாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

07. நீதி நூல்கள் எப்போதும் ''நான் அல்லேன் நீயே என்று சொல்கின்றன'' அவற்றின் இலட்சியம் ''சுயநலம்'' அல்ல ''சுயநலமில்லை'' என்பதே ஆகும்.

08. மக்கள் உன்னைப் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி அதிட்ட தேவதை உனக்குஅருள் புரியட்டும், புரியாமல் போகட்டும், உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும் நீ மட்டும் உண்மை எனும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு.

09. நம்பிக்கையை இழந்து விடாதே! பாதை கத்தி முனையில் நடப்பது போல மிகவும் கடினமானதுதான், எனினும் எழுந்திரு, விழித்துக் கொள் மனம் தளராமல் நீ அடையவேண்டிய உனது இலட்சியமான குறிக்கோளைக் கண்டுபிடி.

10. நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும்அதற்கு அர்ப்பணித்து விடு.

**பி. கரிசிகன்**
**தரம் - 5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2022ம் ஆண்டிற்குரிய தவணைப் பரீட்சைப் புள்ளிப் பகுப்பாய்வின் அடிப்படையில் பரிசு பெறுவோர் விபரம்

| தொடர் இல | தரம் | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|---|
| 01 | 03 | பி.ஷத்ஜவேணி | 01 |
| 02 | 03 | ச.பிரவீனா | 02 |
| 03 | 03 | மோ.டக்சிகன் | 03 |
| 04 | 04 | க.மதுசன் | 01 |
| 05 | 04 | சு.டிலக்சனா | 02 |
| 06 | 04 | பி.கரிசிகன் | 03 |
| 07 | 05 | சா.டோஷன் | 01 |
| 08 | 05 | நி.சஜன் | 02 |
| 09 | 05 | ப.சஜிந்தினி | 03 |
| 10 | 06 | சு.சர்மியா | 01 |
| 11 | 06 | கோ.நதீஸ்காந்தன் | 02 |
| 12 | 06 | ச.ஹனுசிகா | 03 |
| 13 | 07 | பி.அனுஷ்கா | 01 |
| 14 | 07 | சா.தமிழினி | 02 |
| 15 | 07 | ஜீ.வேணுகா | 03 |
| 16 | 08 | சு.கிருசாந்தினி | 01 |
| 17 | 08 | கி.ஷாகித்தியா | 02 |
| 18 | 08 | ச.தனுஷிகா | 03 |
| 19 | 09 | ம.சுரேக்கா | 01 |
| 20 | 09 | த.தவசீலினி | 02 |
| 21 | 09 | ர.வவித்திரன் | 03 |
| 22 | 10 | வ.ஜதுசினி | 01 |
| 23 | 10 | ம.ஹரிஸ்னா | 02 |
| 24 | 10 | மு.ரி.ஃப்கான் | 03 |
| 25 | 11 | பு.பிரதீபா | 01 |
| 26 | 11 | ஜீ.திபாகரன் | 02 |
| 27 | 11 | இ.மிதுசா | 03 |
| 28 | 12 | சி.தர்சிகா | 01 |
| 29 | 12 | ஜெ.ஜெயரஞ்சினி | 02 |
| 30 | 12 | து.அஜய் | 13 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகள்- 2022-2023

# வலயமட்ட வாணிவிழா போட்டிகள்

**01. பிரிவு - 1**

**தரம் 2 ,3 இற்குரிய பேச்சுப் போட்டி**

செல்வி. கலாநேசன் தக்ஸா - 01ம் இடம் (தரம் 02)

**பிரிவு - 2**

**தரம் 4,5 இற்குரிய திருக்குறள் போட்டி**

செல்வி இராமச்சந்திரன் ரசிகா - 03ம் இடம் (தரம் 05)

**02. ஆங்கில மொழித்தினப் போட்டிகள்- 2022** (cursive writing)

செல்வி ஜெ.ஜெயரஞ்சினி - (தரம் 12)

கோட்ட மட்டம் - 02ம் இடம்

வலய மட்டம் - 03ம் இடம்

**03. வலய மட்ட ஆரம்ப பிரிவு சித்திர போட்டிகள் - 2023**

செல்வி ச.அக்ஷயா - 03ம் இடம் (தரம் 05)

செல்வி ஹி.ஹினாஸ் - 03ம் இடம் (தரம் 03)

**04. அவுஸ்திரேலியா அரசினால் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தரம் 9- 11 இற்குரிய மாவட்ட மட்ட சித்திரப் போட்டிகள் - 2023**

செல்வி M. ஹரிஸ்ணா - 01ம் இடம்

செல்வி P. டக்திகா - 03ம் இடம்

**05. அவுஸ்திரேலியா அரசினால் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தரம் 12- 13 இற்குரிய மாவட்ட மட்ட சித்திர போட்டிகள் - 2023**

செல்வி ஜெ.ஜெயரஞ்சினி - 03ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பபிரிவிற்கான செயற்பட்டு

# மகிழ்வோம் போட்டிகள் - 2023

### கோட்ட மட்டம் 2ம் இடம் (தரம் 03)

1. செல்வன் உ.ஜஸ்வர்தன்
2. செல்வன் ஸ்.கிரேசியன்
3. செல்வன் சு.வசந்
4. செல்வன் ர.கோபிசன்
5. செல்வன் சி. தருண்
6. செல்வன் ஹி.ஹினாஸ்
7. செல்வி ம.பிரக்சியா
8. செல்வி பை.அஹ்லா
9. செல்வி அ.அஸ்வினி
10. செல்வி வி.வித்தியா
11. செல்வி த.தனுக்சியா
12. செல்வி த.கிதுர்சிகா

### கோட்ட மட்டம் 2ம் இடம் (தரம் 04)
### வலய மட்டம் 3ம் இடம் (தரம் 04)

1. செல்வன் தி.பிரகன்
2. செல்வன் டி.அபிசேக்
3. செல்வன் மோ. டக்சிகன்
4. செல்வன் கி. பவின்
5. செல்வன் நௌ. ஹாதீம்
6. செல்வன் பி. தருண்
7. செல்வி ரா.குஷாந்தினி
8. செல்வி பி.சக்திகா
9. செல்வி ஹ.கோஜனா
10. செல்வி பி.சத்ஜவேணி
11. செல்வி ட.டக்சினா
12. செல்வி பே. குகதீஷா

### வலய மட்ட விளையாட்டப் போட்டி

Under 20

1. செல்வன் து..அஜய்

உயரம் பாய்தல் - 1ம் இடம்

1500m - 2ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **தரம் 5 புலமை பரிசில் பரீட்சை சிறந்த பெறுபேறுகள்**

**2019**

செல்வன் க கோபிசன் ( 174 )

செல்வன் பி. லிங்கதீசன் ( 173 )

■ **க.பொ.த (சா/ த)பரீட்சைகளின் பெறுபேறுகள்**

**2017**

| | |
|---|---|
| செல்வன் பிரிதா மகேந்திரன் | 1ம் இடம் |
| செல்வி ஷாலினி லிங்கேஸ்வரன் | 2ம் இடம் |
| செல்வன் சிவராஜ் பிரஷாந்த் | 3ம் இடம் |
| செல்வன் சூரியகுமார் தனுஷன் | 3ம் இடம் |

**2018**

| | |
|---|---|
| செல்வி இந்துஜா கணேகசன் | 1ம் இடம் |
| செல்வி சுகிர்தா ஜெயகாந்தன் | 2ம் இடம் |
| செல்வன் சௌந்தரராஜா தனுஷாந்த் | 3ம் இடம் |

**2019**

| | |
|---|---|
| செல்வன் ரட்சமூர்த்தி ரட்சிகன் | 1ம் இடம் |

**2020**

| | |
|---|---|
| செல்வி மணிகண்டன் மகாலக்ஷ்மி | 1ம் இடம் |
| செல்வி சிவகுமார் தர்சிகா | 2ம் இடம் |
| செல்வி பாலச்சந்திரன் சிவநித்தியா | 3ம் இடம் |

**2021**

| | |
|---|---|
| செல்வி.ஜீ. கவிநிலா | 1 ம் இடம் |
| செல்வன்.ம. ரவிகிருஸ்ணா | 2 ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ க.பொ.த (உ / த)பரீட்சைகளின் சிறந்த பெறுபேறுகள்

**2021**

செல்வி இந்துஜா கணேசன் 1 ம் இடம்

செல்வி சுகிர்தா ஜெயகாந்தன் 2 ம் இடம்

## ■ 70வது ஆண்டு விழா - கவின் நிலைப் போட்டி

### ஆரம்பப் பிரிவு

1 ம் இடம் தரம் 04
2 ம் இடம் தரம் 02
3 ம் இடம் தரம் 01

### இடைநிலைப் பிரிவு

1 ம் இடம் தரம் 08
2 ம் இடம் தரம் 09
3 ம் இடம் தரம் 11

## விசேட நன்றிகள்

### நடுநிலையாளர்கள்

திரு. சி. தவநாதன்
உதவிக்கல்வி பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை

திரு. சதேஸ்வரன்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை

திரு. விஜயச் சந்திரன்
செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பல்கலைக் கழக அனுமதி
செல்வி.க.இந்துஜா
(கலைப்பிரிவு - 2022)
கிழக்குப் பல்கலைகழகம்



தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை
- 2019

## மாவட்ட மட்ட சாதனைகள்



கட்டுரைப்போட்டி
செல்வி.ஜெ.ஜெயரஞ்சினி



கட்டுரைப்போட்டி
செல்வி.பே.டக்திகா



சித்திரப்போட்டி
செல்வி.ம.கரிஸ்னா

## வலயமட்ட சாதனைகள்



விஞ்ஞான ஆய்வுகூடப்போட்டி - 2018- 2020



ஆங்கில தினப்போட்டி
2022
செல்வி.ஜெ.ஜெயரஞ்சினி



கட்டுரைப்போட்டி - 2022
செல்வி.சி.சிவநித்யா




மயூரன் நினைவுக்கிண்ணப்
போட்டி - 2023



மெய்வல்லுனர்
போட்டி -2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்தியில் உதவிக்கரம் நீட்டியோர் ( 2017 - 2023 )

## குச்சவெளி உறவுகள்

- சுற்று வேலிக்கு முட்கம்பி கொள்வனவு
  அன்பளிப்பு - திரு. ச. ரவீந்திரநாதன்
  திருமதி. ஜெ. கோபாலசிங்கம்
- கணனி வழங்கியமை
  அன்பளிப்பு - திரு. ஆ. சுதர்ஷன்
  ஏற்பாட்டாளர் - திரு. சர்வேஸ்
- Interactive White Board
  அன்பளிப்பு - திரு. திருமதி. சுரேஸ்குமார்
- குடிநீர் வசதி
  அன்பளிப்பு - திரு. திருமதி. கேதீஸ்வரன்
- மாணவர்களுக்கான தளபாட உதவியும், தரம் 6 - 13 வரையான மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கலும்
  அன்பளிப்பு - திரு. திருமதி. நாகநாதன்
- நூலகத்திற்குரிய ஒரு தொகுதி நூல்கள் வழங்கியமை
  அன்பளிப்பு - திருமதி. பத்மலோஜி
- 149 மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்கள்
  அன்பளிப்பு - குச்சவெளி உறவுகள்
- தொண்டர் அடிப்படையிலான அலுவலக உதவியாளர்களுக்கான
  அன்பளிப்பு - திரு.சி. திருச்செல்வம்
- நவராத்திரி பூசைக்கான
  அன்பளிப்பு - குச்சவெளி உறவுகள்(2017 - 2019)
- சரஸ்வதி மாடம் அமைத்தலும், வருடாந்த நவராத்திரி பூசை மற்றும் விழாச் செலவு (2020 ஆம் ஆண்டிலிருந்து)
  அன்பளிப்பு - திருமதி.க.கலாவதி ( தாய் )
  திரு.க.ரஞ்சன் ( மகன் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர்தர மாணவர்களின் மேலதிக வகுப்புக்களுக்கான
  அன்பளிப்பு -திருமதி. யோகாஜெயசுந்தரம் (யோகா ஆசிரியர்)
  குச்சவெளி உறவுகள்
- பாடசாலைக்கு மடிக்கணினி
  அன்பளிப்பு - திரு.சு.சிவகுமார்
- பாடசாலைப் பெயர்பலகை அமைத்தமை
  அன்பளிப்பு - குச்சவெளி உறவுகள்
- சமையலறைத் திருத்த வேலை
  அன்பளிப்பு - திரு.சு.சிவகுமார்
- பாடசாலைக் கவின் நிலைக்கான மரக்கன்றுகளை வழங்கியமை
  அன்பளிப்பு - திரு. சு.உ தயகுமார்
- தரம் 2 வகுப்பறைகளின் திருத்த வேலை
  அன்பளிப்பு - திருமதி.செ.உ தயகுமாரி
- தரம் 5 வகுப்பறைகளின் திருத்த வேலை
  அன்பளிப்பு - திருமதி.சுகந்தா ஜெக்குமார்
- இடைவிலகிய மாணவர்களுக்கான விசேட கற்பித்தல் செயற்பாடு
  அன்பளிப்பு - திரு.சு.சிவகுமார்
- பல்கலைக்கழகம் சென்ற மாணவிக்கான
  அன்பளிப்பு - குச்சவெளி உறவுகள்
- மேடைக்கான திரைச்சீலை, ஜன்னல், கதவுகளுக்கான திரைச்சீலை
  அலுவலக தளபாடங்கள் கொள்வனவு
  அன்பளிப்பு - திரு.சி. திருச்செல்வம்
  திரு.மு.பத்மகிரி
  திருமதி.பி.பத்மலோஜினி
  திரு.மு.பேரின்பராசா
  .திரு.ந.நகுலன்
  திருமதி.த.விஜயா
  திரு.வரதன்
  திருமதி.சி.கோமதி
- விவேக சுரபி மலர்
  அன்பளிப்பு - குச்சவெளி உறவுகள்
- 70 வது ஆண்டு பரிசில்கள்
  அன்பளிப்பு - திரு. வே. நாகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன் விரும்பிகள்

- ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
  அன்பளிப்பு- தேசிய உறவுகள் நலன்புரி சங்கம்
- மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள்
  அன்பளிப்பு- திரு.விஜயன்
- மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பெற்றோருக்கான வாழ்வாதார உதவிகள், மாணவரகளக்கான துவிச்சக்கர வண்டிகள், இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு மதிய உணவு, மலசல கூடங்கள் அமைத்துக் கொடுத்தமை
  அன்பளிப்பு- ரொட்றிக் கழகம்- திருகோணமலை
- 40 மாணவர்களுக்கான பாதணிகள்
  அன்பளிப்பு- திருமதி. ஜெ. கோபாலசிங்கம்
  ஏற்பாட்டாளர்- திரு. ச. ரவீந்திரநாதன்
- மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்,துவிச்சக்கர வண்டி
  அன்பளிப்பு- திரு. விஜயகாந்த் விஜயராஜா
  ஏற்பாட்டாளர்- திருமதி. பத்மஸ்ரீ ஜெயகாந்தன்
- குடிநீர் தாங்கியுடனான குடிநீர் வசதி
  அன்பளிப்பு- அல்ஹைமதுள் உம்மா ( **Foundation** )
- 58 மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள்
  அன்பளிப்பு- திரு. மோகன்ராஜ் ( அவுஸ்திரேலியா )
  ஏற்பாட்டாளர்- திருமதி. சி. மைனாவதி
- கற்றல் உபகரணங்கள்
  m d gs pG- **Muslim Aid**
- கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் தோட்ட உபகரணங்கள்
  அன்பளிப்பு- **CDF** நிறுவனம்
- உலர் உணவு பொதிகள்,துவிச்சக்கர வண்டிகள்,மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக் கட்டணங்கள்
  அன்பளிப்பு- திருமதி. விஜயராஜா விஜி
  ஏற்பாட்டாளர் - திருமதி.தே.கைலாயப்பிள்ளை
- மாணவர்களுக்கான ஆடைகள்
  அன்பளிப்பு- சர்வம் Foundation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாட்டாளர்- திரு. M. தமிழ்ச்செல்வன்

- கணனி வழங்கியமை

அன்பளிப்பு- திரு. P. தர்ஷன் ( Nilal Foundation London )

ஏற்பாட்டாளர்- திருமதி. து. ரதினி

- Smart T.V வழங்கியமை

அன்பளிப்பு- வீரஞ்சோலை, இரணைக்கேணி, சலப்பையாறு, கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்கள்

- தரம் 5 மாணவர்களுக்கான வினா விடைப் புத்தகங்கள்

அன்பளிப்பு- திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் (திரு.குகதாசன்)

- வகுப்பறைக்கான வர்ணம் தீட்டலும், வெளிப்புறச் சூழலைக் கவின் நிலைப் படுத்தலும் அன்பளிப்பு- பெற்றோர்கள்

- அலுவலக திருத்தமும் தளபாடக் கொள்வனவு

அன்பளிப்பு- VL Holding Pvt Ltd

ஏற்பாட்டாளர்- திருமதி.S .சுபாஜினி

- வகுப்பறைக் கதவுகள் திருத்த வேலைகள்

அன்பளிப்பு- திரு. ரவீந்திரநாதன்
திருமதி.ஜெ. கோபாலசிங்கம்

- பாடசாலை சுற்றுப்புறச்சூழல் சுத்தம்

ஏற்பாட்டாளர்-விநாயகமூர்த்தி மதுரேஸ்வரி

- விவேகசுரபி மலருக்கான

அன்பளிப்பு- திருமதி.அருள் முருகன் விஜயலட்சுமி குடும்பம்

- மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்,துவிச்சக்கர வண்டிகள் வழங்கியமை

அன்பளிப்பு- சுவிஸ் தமிழ் கல்விச்சேலை அன்பளிப்பு

ஏற்பாட்டாளர்- திரு. ச. ரவீந்திரநாதன்

- போடியம், அலுவலக தளபாடம், 70ம் ஆண்டு நினைவு கல் (அமரர்.வை. தெய்வேந்திரராஜா அவர்களின் நினைவாக)

அன்பளிப்பு- திருமதி. தெய்வேந்திரராஜா கமலாவதி

- பாண்ட் வாத்திய உபகரணம் (அமரர்.வை. தெய்வேந்திரராஜா அவர்களின் நினைவாக)

அன்பளிப்பு- திருமதி. தெ. சிந்துஜா

- 50 பூச்சாடிகள்

அன்பளிப்பு- திரு.இ.பிரஷாந்த் (பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



## நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org